28°c
32°c
26°c
தெளிவான காலநிலை காணப்படும்


# உதயன்

06 JUN 2014
பக்கம் 24

விலை: யாழ்.– 20/= வன்னி – 20/= கொழும்பு – 30/=
சுடர்: 29 கதிர்: 192 வள்ளுவர் ஆண்டு: 2045
வைகாசி 23, வெள்ளி 06.06.2014
stay connected with: uthayan.print uthayanprint
Uthayan - A lively National Tamil Daily

# வடக்கில் மிக உக்கிரமாக சிங்களக் குடியேற்றங்கள்

## தமிழ் நிலத்தின் தொடர்ச்சியை அறுக்க கொக்கிளாய், கொக்குத்தொடுவாயில் இராணுவ உதவியுடன் தீவிரம் என்கிறார் முதலமைச்சர்



யாழ்ப்பாணம், ஜூன் 6
தமிழர் தாயகப் பகுதிகளின் தொடர்ச்சியை இல்லாதொழிக்கும் முயற்சிகளில் அரசு தீவிரமாக இறங்கியுள்ளது. வடபகுதியில் உக்கிரமாக மேற்கொள்ளப்படும் சிங்களக் குடியேற்றங்கள் மூலம் அதனை நடைமுறைப்படுத்தவும் ஆரம்பித்துவிட்டது. வடக்கு, கிழக்குப் பகுதிகள் இணையும் கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் ஆகிய பிரதேசங்களில் இராணுவத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் சிங்களக் குடியேற்றங்கள் மூலம் தமிழர் பிரதேசங்களுக்கு இடையிலான தொடர்பை அறுத்தெறிய முயல்கின்றது அரசு-இதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது - இவ்வாறு தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.

தொல்புரம் ஆரம்ப மருத்துவப் பராமரிப்பு நிலையக் கட்டடத் திறப்பு நிகழ்வு நேற்று நடைபெற்றது. அதில் இணைப் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,
"வடக்கு, கிழக்கு மாகாணங்கள் எமது தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய இடங்கள். இப்பொழுது அவற்றின் தொடர்புகளைக் கொச்சைப்படுத்த தமிழரின் முழுமையான தொடர் இடம் என்ற கருத்தை அப்புறப்படுத்த அரசால் பலவிதமான

21ஆம் பக்கம் பார்க்க

### வழக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்.ஜூன்.6
2009ஆம் ஆண்டு இராணுவத்தினரிடம் சரணடைந்து காணாமற்போனார் என்று கூறப்படும் விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன் உள்ளிட்ட

21ஆம் பக்கம் பார்க்க

### மீனவர்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 6
இன்று முதல் எதிர்வரும் 9ஆம் திகதி வரை கடற்பகுதிகளில் மணிக்கு 80 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும் என வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. அதனால் மீனவர்கள் மற்றும் கடற்தொழிலாளர்கள் அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கப்பட்டுள்ளனர். (ந)

## எங்கே எமது உறவுகள்?

### காணாமற்போனோரின் சொந்தங்கள் முல்லைத்தீவில் திரண்டு போராட்டம்




கிளிநொச்சி, ஜூன் 6
முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு முன்பாகத் திரண்ட காணாமற் போனவர்களின் சொந்தங்கள் தமது உறவுகள் எங்கே எனக் கேட்டுக் கதறி அழுதனர்.
காணாமற்போனவர்களைக் கண்டுபிடித்துத் தருமாறு கோரி அவர்களின் உறவுகள்

21ஆம் பக்கம் பார்க்க

## 1,406 ஏக்கர் சுவீகரிக்கப்படும்

### நாடாளுமன்றில் அரசு அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 6
கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 406 ஏக்கர் (1,406.94) காணிகளை சுவீகரிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அவ்வாறு எடுத்துக் கொள்ளப்படும் காணிகளுக்காக காணி உரிமையாளர்களுக்கு நட்டஈடு வழங்கப்படும் - இவ்வாறு நேற்று நாடாளுமன்றில் அறிவித்துள்ளது அரசு.
நாடாளுமன்றத்தில் நேற்று வாய் மூல விடைக்கான கேள்விநேரத்தின் போது ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க, காணி அபிவிருத்தி அமைச்சரிடம்

21ஆம் பக்கம் பார்க்க

## அச்சுவேலி இராணுவ முகாம் ஒருபோதும் மூடப்பட மாட்டாது

### நட்டஈடு வழங்கப்படும் என்கிறார் இராணுவ பேச்சாளர்

கொழும்பு, ஜூன் 6
பொதுமக்களின் காணிகளில் அமைந்துள்ள அச்சுவேலி இராணுவ முகாம் எந்தக் காரணத்தைக் கொண்டும் மூடப்படாது என்று தெரிவித்துள்ள இராணுவ ஊடகப் பேச்சாளர் ருவான் வணிகசூரிய, விடுதலைப் புலிகள் அமைப்பு மீண்டும் உயிர் பெறுவதைத் தடுக்கும் நடவடிக்கைகளுக்கு அந்த முகாம் முக்கியமானது என்றும் தெரிவித்துள்ளார்.
பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் ஊடக மத்திய நிலையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,
"இந்த முகாம் 1995 ஆம்

21ஆம் பக்கம் பார்க்க

## மீள்குடியமர்ந்த மக்களுக்கு போதுமான உதவி இல்லை

### அமெரிக்கத் தூதரக அதிகாரிகளிடம் யாழ்.மாவட்ட அரச அதிபர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 6
மீளக்குடியமர்ந்த மக்களுக்கான உதவித் திட்டங்கள் போதுமான அளவில் இல்லை என்று அமெரிக்கத் தூதரக அதிகாரிகளிடம் யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

21ஆம் பக்கம் பார்க்க

## காணி அபகரிப்புக்கு எதிராக எம்மிடம் முறையிட முடியும்

### மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 6
காணி உரிமையாளர்கள் யாழ்ப்பாணத்தில் வசித்துவரும் நிலையில், காணி உரிமை

23ஆம் பக்கம் பார்க்க

**மோடி வந்த கையோடு மீண்டும் '13' விஸ்வரூபம்**
தமிழருக்கு அதிகாரங்கள் கிட்டுமா?
பக்கம் 12

## தீர்க்கமான தருணத்தில் இலங்கை மடைத்தனமாகச் செயற்பட்டு விட்டது

### சாடுகிறார் கலாநிதி தயான் ஜயதிலக்க

கொழும்பு, ஜூன் 6
சர்வதேச விசாரணைப் பொறிமுறையிலிருந்து இலங்கையைப் பாதுகாக்க டில்லியின் முழு ஆதரவைப் பெறவேண்டிய தீர்க்கமான தருணத்தில், 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த முடியாதென அரசு இடித்துரைத்து, இந்தியாவின் வலியுறுத்தலைக் கருத்திற் கொள்ளாதிருப்பது மிகவும் மடைத்தனமானதாகும். இது சர்வதேச விசாரணைப் பொறி முறையில் தாக்கத்தை ஏற்படுத்துவதுடன், இரு நாட்டு அரசுகளுக்கிடையிலான உறவிலும் முரண்பாட்டைத் தோற்றுவிக்கும் - இவ்வாறு தெரிவித்துள்ளார் ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கான இலங்கையின் முன்னாள் நிரந்தரவதிவிடப்

22ஆம் பக்கம் பார்க்க

# மனித உரிமை ஆணையாளர் பதவிக்கு வரப்போவது யார்?

## மௌனம் காக்கிறது ஐ.நா.

கொழும்பு, ஜுன் 6
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் பதவிக் காலம் முடிவடையவுள்ள நிலையில், அந்தப் பதவியில் யார் நியமிக்கப்படுவார்என்பதுதொடர்பில் ஐ.நா. சபை எந்தப் பதிலையும்வழங்கவில்லைஎன்றுதெரிவித்துள்ளதுஇன்னர்சிற்றிபிரஸ்.
தற்போது ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளராகவுள்ள நவநீதம்பிள்ளையின் பதவிக் காலம் அடுத்த மாதத்துடன் முடிவடைகின்றது. நவநீதம் பிள்ளை ஏற்கனவே இரு தடவைகள் பதவி நீடிப்புச் செய்யப்பட்டுள்ளார். இந்த நிலையில் புதிய ஐ.நா. மனித உரிமை ஆணையாளரை நியமிப்பதற்கான நடவடிக்கைகளை ஐ.நா பொதுச்செயலர் மேற்கொண்டுள்ளார்.
அதுகுறித்து இன்னர் சிற்றி பிரஸ், "தற்போது, மேற்கு ஆபிரிக்க நாடான கினியா பிசாவுவில் ஐ.நா தூதுவராக பணியாற்றும், கிழக்கு திமோரைச் சேர்ந்த, ஜோஸ் ராமோஸ் ஹோர்டா நியமிக்கப்படவுள்ளாரா?" என்று ஐ.நாவிடம் கடந்த மாதம் கேள்வி எழுப்பியிருந்தபோதும், ஐ.நா. தரப்பிலிருந்து இன்னமும் பதில் வழங்கப்படவில்லை.
ஐ.நா மனித உரிமை ஆணையாளர் பதவிக்கு இலங்கையில் இடம்பெற்ற மீறல்கள் குறித்து ஆலோசனை வழங்க நியமிக்கப்பட்ட ஐ.நா. நிபுணர் குழுவின் தலைவராகச் செயற்பட்ட மர்சுகி தருஸ்மன் மற்றும் ஆப்கானிஸ்தான், பாகிஸ் தான் நாட்டவர்களும் போட் டியில் உள்ளனர் என்றும் இன்னர் சிற்றி பிரஸ் குறிப்பிட்டுள்ளது.
அதேவேளை, ஜோஸ் ராமோஸ் ஹோர்டா, மர்சுகி தருஸ்மன் ஆகியோரே இந்தப் பதவிக்கு நியமிக்கப்படுவதற்கு வாய்ப்புகள் அதிகம் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ற-5)

## விபச்சாரத்தில் ஈடுபட்டார் என பெண் கைது

முல்லைத்தீவு, ஜுன் 6
விபச்சாரத்தில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் 23 வயதுடைய பெண் ஒருவர் நேற்று முல்லைத்தீவு சிலாவத்தை தெற்கு பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளார்.
குறித்த பகுதியில் கடந்த 3 மாதகாலமாக தெரிந்த நபர் ஒருவரின் வீட்டில் தங்கியிருந்து விபச்சார நடவடிக்கையில் குறித்த பெண் ஈடுபட்டு வந்தார் என்று அந்தப் பகுதி மக்கள் பொலிஸாருக்கு தகவல் வழங்கியதை அடுத்தே குறித்த பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.
தான் திருமணம் செய்து 4 மாதங்களில் தனது கணவர் வேறுதிருமணம்செய்துகொண்டார் என்றும், அதனால் மன்னாரில் இருந்து தான் இங்கு வந்து தங்கியிருந்தார் என்றும் விசாரணைகளின் போது அந்தப் பெண் கூறியுள்ளார். ஆயினும் குறித்த பெண் குருநகர் என முகவரியிட்ட போலியான அடையாள அட்டையை வைத்திருந்தார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற-4,102)





உலக இரத்ததான தினத்தை முன்னிட்டு குருதிக் கொடையாளரை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று வவுனியா சுகாதார திணைக்கள தாதியர் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வையொட்டி வாகன பவனி வவுனியா பொது வைத்தியசாலையில் இருந்து ஆரம்பித்து தாதியர் கல்லூரி வரை சென்றது. அதில் கௌரவ விருந்தினர்களாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திரு.ந.சிவசக்தி ஆனந்தன், வட மாகாணசபை உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகன், வட மாகாணச்பை உறுப்பினர் திரு.தியாகராஜா மற்றும் பலர் கலந்து கொண்டனர். இறுதியில் குருதிக் கொடையாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. (ற)

## விபத்தில் பெண் காயம்

வவுனியா, ஜுன் 6
வவுனியா மூன்று முறிப்புப் பகுதியில் நேற்று பஸ் ஒன்றும் கப்ரக வாகனம் ஒன்றும் விபத்துள்ளானதில் பெண்ணொருவர் காயங்களுக்குள்ளாகியுள்ளார். இரு வாகனங்களும் சேதமடைந்தன.
முற்பகல் 10.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில்கப்ரகவாகனத்தில்பயணித்த வவுனியா, பூந்தோட்டத்தைச் சோந்த 35 வயதான திருமதி கௌசலா அழகராசா என்பரே கழுத்து மற்றும் வயிற்றுப் பகுதியில் காயமடைந்துள்ளார். இவர் தற்போது வவுனியா வைத்தியசாலையில், அவரச சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார் என்று கூறப்படுகின்றது.
மூன்றுமுறிப்புப்பகுதியில்உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்பாக வவுனியா நகரை நோக்கி வந்த கப்ரக வாகனமும் வவுனியா நகரிலிருந்து பெரியகுளம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த பஸ்ஸும் ஒன்றையொன்று முந்துவதற்கு முற்பட்டபோதே விபத்து ஏற்பட்டுள்ளது. (ற-421)

## அநுராதபுரத்து யுகத்துக்குரிய சிதைவுகள் கிளிநொச்சியிலாம்

கொழும்பு, ஜுன் 6
அனுராதபுர யுக்த்துக்குச் சொந்தமான தொல்பொருள் சின்னங்கள் கிளிநொச்சியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்று கூறப்படுகின்றது. தொல்பொருள் ஆய்வாளர் கல்ப அசங்கவின் தலைமையில் கிளிநொச்சியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்போதே இந்த தொல்பொருள் சின்னங்கள் கண்டெடுக்கப்பட்டன என்று தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் கலாநிதி செனரத் திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,
கிளிநொச்சி, கரைச்சி, சிவநகர், உருத்திரபுரம் ஆகிய பகுதிகளில் இந்த சின்னங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அனுராதபுர யுகத்தைச் சேர்ந்த கட்டடங்களின் சிதைவுகளும் இந்தப் பகுதியிலிருந்து கண்டெடுக்கப்பட்டன. அதனைத்தவிர, கிளிநொச்சியின் மேலும் சில பகுதிகளிலும் அனுராதபுர யுகத்தின் கட்டட சிதைவுகள் கண்டுபிடிக்கப்பட்டன.
கடந்த வருடத்தின் நடுப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் தொல்பொருள் சின்னங்கள் சில கண்டெடுக்கப்பட்டதைத் தொடர்ந்து, அந்தப் பகுதி தொல்பொருள் பெறுமதி வாய்ந்தது என்று வர்த்தமானி ஊடாக அறிவிக்கப்பட்டது"- என்று தெரிவித்துள்ளார்.
இவை பொலன்னறுவ ஆட்சிக்காலத்தில், அங்கிருந்த பௌத்த விகாரை ஒன்றினது சிதைவுகள் என்று கூறப்படுகின்றது.
அதையடுத்து இந்தப் பகுதியில், விரைவில் தொல்பொருள் ஆய்வுகளை மேற்கொண்டு இந்தப் பிரதேசத்தை புனிதப் பிரதேசமாக பிரகடனம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.
இதேவேளை இது தொடர்பில் யாழ்.பல்கலைக் கழக தொல்லியற்துறை சார்ந்த அறிஞர்களிடம் கருத்தறிந்த போது,"பௌத்த எச்சங்கள் அந்தப் பகுதியில் இருந்திருக்கலாம். ஆனால் அந்தப் பகுதியில் இந்துக் கோயில் கள் இருந்தமைக்கான ஆதாரங்கள் உறுதி செய்யப்பட்டிருந்தன. ஆனால் மீட்கப்பட்டது பொலநறுவைக் காலத்து பௌத்த எச்சங்கள்தான் என்பதை எடுத்த எடுப்பில் சொல்ல முடியாது."- என்று குறிப்பிட்டனர். (ற-5)



## மணல் கடத்தியதாக ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஜுன் 6
வடமராட்சி கிழக்கு, குடத்தனை பகுதியில் சட்டவிரோதமாக மணல் ஏற்றிய லொறி ஒன்று நேற்று பிற்பகல் பொது மக்களால் மடக்கி பிடிக்கப்பட்டு பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது.
குடத்தனை கிழக்கு துயிலுமில்ல பகுதியில் குறித்த லொறி மக்களால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்து. சந்தேகத்தில் ஒருவரைக் கைது செய்ததுடன் , லொறியையும் பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர். (ஜ-109)

# 15ஆம் திகதிக்கு முன்னர் வாக்காளராக பதியுங்கள்

## யாழ்.மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜுன் 6
கிராமசேவையாளர்கள் ஊடாகப் பதிவு செய்யப்படும் பி.சி. படிவங்கள் எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் யாழ்.மாவட்டத் தேர்தல்கள் திணைக்களத்தால் மீளப்பெற்றுக் கொள்ளப்படவுள்ளன என்று தெரிவித்துள்ளார் யாழ்.மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் பொ.குகநாதன்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,
இந்த ஆண்டுக்குரிய வாக்காளர் பெயர்ப் பதிவு நடவடிக்கைகள் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கடந்த மே 16 ஆம் திகதி முதல் கிராம சேவையாளர்களால் வீடு வீடாக பி.சி. படிவம் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. அந்தப் படிவத்தை பூரணப்படுத்தி மக்கள் தமது பகுதிக்குரிய கிராமசேவையாளர்களிடம் ஒப்படைக்க வேண்டும். அவ்வாறு இதுவரையில் பி.சி. படிவங்கள் கிடைக்காதவர்கள் தமது கிராம சேவையாளருடன் அல்லது யாழ்.மாவட்டத் தேர்தல்கள் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு படிவங்களைப் பெற்று பூரணப்படுத்த முடியும். கிராம சேவையாளர்களிடமிருந்து எதிர்வரும் 15 ஆம் திகதி யாழ்.மாவட்ட தேர்தல்கள் திணைக்களத்தினால் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் மீளப் பெறப்படவுள்ளன.
இந்த நடவடிக்கைகள் ஜுலை மாத இறுதி வரையில் நடைபெறவுள்ளன. அதன் பின்னர் 2014 ஆம் ஆண்டு வாக்காளர் பெயர்ப்பட்டியலில் புதிதாக இணைக்கப்பட்டவர்கள், நீக்கப்பட்டவர்களது பெயர்ப் பட்டியல்கள் காட்சிப்படுத்தப்படும். தொடர்ந்து அது தொடர்பிலான முறைப்பாடுகள் மேற்கொள்வதற்கு இரு வாரங்கள் வழங்கப்பட்டு அதன் பின்னரே இறுதிப் பட்டியல் தயார்படுத்தப்படும்.
எதிர்வரும் நவம்பர் முதலாம் திகதி இந்த ஆண்டுக்குரிய வாக்காளர் பெயர்ப் பட்டியல் வெளியிடப்படும்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# உகண்டாவுக்கு ஆதரவு

## உறுதியளித்தார் மஹிந்த



கொழும்பு, ஜுன் 6
ஐக்கிய நாடுகள் பொதுச் சபை தலைவர் பதவிக்கு போட்டியிடும் உகண்டாவின் வேட்பாளரான சாம் குஸ்டேசாவுக்கு முழுமையான ஆதரவு வழங்கப்படும் என்பதை இலங்கை அரசு உறுதிப்படுத்தியுள்ளது.
கொழும்பில் ஜனாதிபதி மாளிகையில் உகண்டா வெளிவிவகார அமைச்சர் ஒகேலோ ஓர்யத்தைச் சந்தித்த போது, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்த உத்தரவாதத்தை வழங்கியுள்ளார்.
இலங்கையின் உள்நாட்டுப் போருக்கு பின்னர் உகண்டா மற்றும் இலங்கை இடையிலான இருதரப்பு உறவுகள் வலுவாக வளர்ச்சியடைந்துள்ளன. இலங்கைக்கு எதிராக ஜெனீவா மனித உரிமை சபையில் கொண்டுவரப்பட்ட இரண்டு யோசனைகளின் போதும் உகண்டா இலங்கைக்கு ஆதரவாகச் செயற்பட்டது.
ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் தலைவர் ஒரு வருடத்துக்காக உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள் வாக்களித்து தெரிவு செய்யப்படுவார். தலைவராக தெரிவு செய்யப்படும் நபர் பொதுச் சபை அமர்வுகளுக்கு தலைமை தாங்குவார். தற்போது ஐ.நா. பொதுச் சபை தலைவராக அன்டிகுவா மற்றும் பெர்முடாவைச் சேர்ந்த ஜோன் வில்லியம் ஆஷ் பதவி வகித்து வருகிறார்.
இலங்கையில் கடந்த மாதம் நடைபெற்ற சர்வதேச இளைஞர் மாநாட்டில் ஆஷ் பிரதம விருந்தினராக கலந்து கொண்டதுடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் சந்தித்திருந்தார். (ற)

# இராணுவத்தில் சேர்ந்தோருக்கு நேற்று நியமனக் கடிதங்கள்



யாழ்ப்பாணம், ஜுன் 6
யாழ்ப்பாணத்திலிருந்து இராணுவத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டவர்களுக்கான நியமனக் கடிதங்கள் யாழ். மாவட்ட பாதுகாப்பு தலைமையகத்தில் வைத்து வழங்கப்பட்டன.
இராணுவத்துக்கு தமிழ் இளைஞர் யுவதிகளை இணைத்துக் கொள்ளும் நடவடிக்கைகள் கடந்த சில மாதங்களாக யாழ்ப்பாணம் உட்பட வடக்கு மாகாணம் முழுவதும் முழுவீச்சில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அவ்வாறு யாழ். மாவட்டத்தில்இருந்துபடையில்இணைத்துக் கொள்ளப்பட்ட 48 இளைஞர்களுக்கும், 18 யுவதிகளுக்குமே நேற்று நியனமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன. நியமனக்கடிதங்கள்வழங்கும்நிகழ்வு நேற்று பலாலி பாதுகாப்பு தலைமையகத்தில் நடைபெற்றது.
இந்தநிகழ்வில் யாழ் மாவட்ட கட்டளைத்தளபதி உதய பெரேரா, சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் அத்தியட்சகர் அட்மிரல் ஆனந்த பீரிஸ், வட மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் பூஜித ஜெயசுந்தர, ஏனைய படைத்தள படையதிகாரிகள், யாழ் மாவட்ட பொலிஸ் மா அதிபர், பிரதேச செயலாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ற-10.20)

## சங்கக்கடையில் திருட்டு; பொலிஸ் அறிக்கை தாக்கல்

தென்மராட்சி, ஜூன் 6

தென்மராட்சி மேற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தச்சன் தோப்பு கிளைக் கடை நேற்றுமுன்தினம் புதன் இரவு உடைக்கப்பட்டு 20 ஆயிரத்து 603 ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று அறிக்கை தாக்கல் செய்துள்ளனர். (வ-9)

## அனுமதியின்றி மணல் ஏற்றிய இருவருக்கு அபராதம்

தென்மராட்சி, ஜூன் 6

அனுமதிப்பத்திரமின்றி வாகனத்தில் மணல் ஏற்றிய இருவருக்கு தலா 50 ஆயிரம் ரூபா வீதம் நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் அபராதம் விதிக்கப்பட்டது.

கடந்த மார்ச் 18 ஆம் திகதி அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றியதாக பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட இவ்விருவரும் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டு பின்னர் பிணையில் விடப்பட்டனர்.

இந்த வழக்கு நேற்று முன்தினம் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, இருவரும் தமது குற்றத்தை ஒப்புக் கொண்டனர். இருவருக்கும் தலா 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (வ-9)

## கணவன் மனைவி மீது திருடர்கள் கத்திக்குத்து

தென்மராட்சி, ஜூன் 06

கச்சாய் தெற்கில் இடம்பெற்ற திருட்டு முயற்சி ஒன்றின் போது முதியவர்களான கணவன் - மனைவி ஆகிய இருவரும் கத்திக்குத்துக்கு இலக்காகினர்.

இந்த சம்பவம் நேற்று இரவு 8 மணியளவில் கச்சாய் தெற்குப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் அம்பலவாணர் வேலுப்பிள்ளை (வயது 71) அவரது மனைவியான வேலுப்பிள்ளை காசிப்பிள்ளை (வயது 63) ஆகிய இருவரும் கத்திக்குத்துக்கு இலக்காகி காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கத்திகள், பொல்லுகள் சகிதம் மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் வீடொன்றுக்குள் புகுந்து திருட முற்பட்டபோது வீட்டில் உள்ளவர்கள் கூக்குரலிட்டுள்ளனர். இதன்போது வீட்டில் இருந்த முதியவர்களான கணவன் - மனைவி ஆகிய இருவரையும் கத்தியால் குத்திவிட்டு வீட்டு ஜன்னல் கண்ணாடிகளையும் அடித்து நொருக்கி விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் அந்நபர்கள்.

சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஐ-9)

> “முதியவர்களான கணவன் - மனைவி ஆகிய இரு வரையும் கத்தியால் குத்திவிட்டு வீட்டு ஜன்னல் கண்ணாடிகளையும் அடித்து நொருக்கி விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்

## யாழில் ஆரம்ப வைத்தியசாலைகள் 2 தனியாரால் அமைக்கப்பட்டவை

### யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், ஜூன் 6

யாழ்ப்பாணத்தில் ஆரம்ப மருத்துவ பராமரிப்பு பிரிவு நிலையங்கள் 14 உள்ளன. அவற்றில் இரண்டு தனியாரால் உருவாக்கப்பட்டவை. அதில் ஒன்று தொல்புரம் ஆரம்ப மருத்துவ பராமரிப்புப் பிரிவு வைத்தியசாலை. மற்றையது எழுவைதீவு வைத்தியசாலை. இவ்வாறு தெரிவித்தார் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன்.

தொல்புரம் ஆரம்ப மருத்துவ பராமரிப்புப் பிரிவு வைத்தியசாலை புதிதாகக் கட்டப்பட்டு நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. அதில் தலைமையுரை ஆற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணத்தில் 45 வைத்தியசாலைகள் உள்ளன. அவற்றில் 14 வைத்தியசாலைகள் ஆரம்ப மருத்துவ பராமரிப்பு பிரிவுகளாக உள்ளன. அவற்றில் தொல்புரம் வைத்தியசாலை மற்றும் எழுவைதீவு வைத்தியசாலை என்பன தனியாரால் உருவாக்கப்பட்டவை. தொல்புரம் வைத்தியசாலை ஆரம்பிக்கப்பட்டு பின்னர் 1957 ஆம் ஆண்டு சுகாதாரத் திணைக்களத்தில் ஒப்படைக்கப்பட்டது.

இந்த வைத்தியசாலையானது அம்பலவாணர் தையல்பாகர் என்பவரின் நினைவாக அவரது மகளான ராஜேஸ்வரி ராஜபட்சத்தின் அனுசரணையுடன் அவரது பேரனான ஸ்ரீரங்கப்பட்சம் என்பவரால் கட்டப்பட்டுள்ளது.- என்றார்.

நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனும் வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறியும் கலந்து கொண்டனர். ஏனைய விருந்தினர்களாக வலி.தென்மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் திருமதி நா.ஐங்கரன், கலாநிதி ஆறு.திருமுருகன், சங்கானை பிரதேச செயலர் அ.சோதிநாதன் மற்றும் சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ-4)

## கத்தியால் குத்தியவருக்கு 2 வருடக் கடூழியச் சிறை

யாழ்ப்பாணம், ஜூன் 6

யாழ்.அரியாலையில் ஒருவரைக் கத்தியால் குத்திக் காயம் விளைவித்த குற்றத்துக்காக யாழ். மேல் நீதிமன்று ஒருவருக்கு இரண்டு வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

யாழ்.மேல் நீதிமன்றில் நீதிபதி அ.பிரேமசங்கர் முன்னிலையில் இந்த வழக்குத் தீர்ப்புக்காக நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது.

2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அரியாலையைச் சேர்ந்த அல்பிரட் அசோக்குமார் என்பவரே கத்தியால் குத்திக் காயப்படுத்தப்பட்டார்.

அவரை அவ்வாறு குத்தியபோது நிலவிய சூழ்நிலை சந்தேகநபர் கொண்டிருந்த எண்ணத்தின் அடிப்படையில் சம்பவத்தின் போது குறித்த நபர் கொல்லப்பட்டிருப்பின் கொலைக்குற்றத்துக்கு உள்ளாகியிருப்பார் என்ற அடிப்படையில் தண்டனைக் கோவையின் 300 ஆம் பிரிவின் கீழ் தண்டிக்கப்படவேண்டிய கொலை செய்ய எத்தனித்த குற்றத்தைப் புரிந்துள்ளார் என்று அவருக்கு எதிராக குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

அதே இடத்தைச் சேர்ந்த கனேசமூர்த்தி ஸ்ரீகுமார் என்பவருக்கு எதிராகவே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு விசாரணையில் அவர் குற்றவாளி என மன்றினால் இனங்காணப்பட்டார்.

இதனையடுத்து அவருக்கு இரண்டு வருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்ததோடு 30 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்த நீதிமன்று உத்தரவிட்டது. அபராதத் தொகையைச் செலுத்தத் தவறின் அவர் மேலும் ஆறு மாத கால சிறைத்தண்டனையை அனுபவிக்கவேண்டும் என்று மன்று உத்தரவிட்டது.

நேற்றைய தினம் வெளியான செய்தியில் காயப்பட்டவர் கொல்லப்பட்டார் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் அது அவ்வாறல்ல, காயப்பட்டார் என்பதே சரி என்று தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. (ஐ-4)



தொல்புரம் ஆரம்ப மருத்துவ பராமரிப்பு நிலையம் புதிய கட்டடத்தில் நேற்று இயங்க ஆரம்பித்தது. இந்த நிகழ்வில் பிரதம அதிதிகளாகக் கலந்துகொண்டு வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் இணைந்து கட்டடத்தை திறந்து வைத்தனர்.

## வடக்கில் உள்ள எமது வளங்கள் அனைத்தும் பாதுகாக்கப்படாமல் கைவிடப்பட்ட நிலையில்

### சுற்றுச்சூழல் தின ஆரம்ப நிகழ்வில் பேராசிரியர் மிகுந்தன்

யாழ்ப்பாணம், ஜூன் 6

வடமாகாணத்தில் உள்ள வளங்கள் யாவும் போருக்குப் பின்னர் இன்னமும் முழுமையாக பதிவு செய்யப்படவில்லை. இதனால் எமக்கான வளங்கள் பாதுகாக்கப்படாமல் கைவிடப்பட்ட நிலையில் உள்ளன என்று யாழ். பல்கலைக்கழகத்தின் விவசாயத்துறைப் பேராசிரியர் மிகுந்தன் தெரிவித்தார்.

உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு ஆரம்ப நிகழ்வு நேற்று மண்டைதீவுப் பகுதியில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த அவர் தொடர்ந்து கருத்து வெளியிட்டபோது;

கடந்த காலங்களில் வாழ்வாதார பிரச்சினைகளில் மூழ்கிக் கிடந்த நாம் இனி அபிவிருத்தி என்ற பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

வடமாகாணத்தில் சிறிய நடுத்தர கைத்தொழில் துறை சார்ந்த அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படவுள்ள நிலையில் சுற்றாடல் சார்ந்த பிரச்சினைகளும் அதிகரிக்கும்.



சுற்றாடலில் ஏற்படுகின்ற பாதிப்புக் குறித்து மண்டைதீவுக் கடற்பகுதியில் மாணவருக்கு விளக்கமளிக்கப்பட்டபோது

போருக்குப் பின்னர் எந்தெந்த வளங்கள் அழிந்து விட்டன, எவை இருக்கின்றன. முழுமையாக என்ன வளங்கள் இருக்கின்றன, என்பது தொடர்பான விவரங்கள் முழுமையாகப் பதிவு செய்யப்படவில்லை. வடமாகாணத்தில் மிகப் பெரிய வளமாக வனவளம் உள்ளது. ஆனால் இவையெல்லாம் முழுமையாக பதிவு செய்யப்படவில்லை.

சுற்றாடலில் ஏற்படுகின்ற பாதிப்புக்களை பாடசாலை மாணவர்கள் அறிந்து கொள்ளக்கூடிய வகையில் மாணவர்களை வெளியில் அழைத்துச் செல்ல வேண்டும். கள ஆய்வுகள் ஊடாக அவர்கள் சூழலில் ஏற்படக்கூடிய பாதிப்பை அவதானிக்க வேண்டும்.

தற்போது வெப்பம் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. இதன் முக்கியமான தாக்கம் வட மாகாணத்தில் ஏற்பட்டுள்ளது. உயிர்ப் பல்வகைமைசார்ந்ததாக அனுகும் போது விவசாயத்திலும், கால்நடை வளர்ப்பு மற்றும் ஏனைய வளங்களைப் பயன்படுத்துவதிலும் இது பெரிய தாக்கத்தை கொண்டுவரப்போகிறது. வடமாகாணத்தில் விவசாயம்.கால் நடை வளர்ப்பு, கடல் சார்ந்த வளங்கள் இவற்றை விட அதிகமாக மனித வளம் உள்ளது. இவற்றை முழுமையாகப் பயன்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார்.

வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் ஹால்தின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், மத்திய சுற்றாடல் அமைச்சின் உதவிப்பணிப்பாளர் வி. சத்தியகுமார், வடமாகாணசபை உறுப்பினர்கள் விந்தன் கனகரட்ணம், பா.கஜதீபன், வடமாகாண கால்நடை அபிவிருத்தி திணைக்களப் பணிப்பாளர் வசீகரன் உட்படத் திணைக்கள அதிகாரிகளும் பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் கலந்து கொண்டனர். கருத்துரைகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து மண்டைதீவு கடற்பகுதியில் உள்ள கண்டல் தாவரங்களின் பகுப்பாய்வு தொடர்பாக பாடசாலை மாணவர்களுக்கு நேரடியாக விளக்கமளிக்கப்பட்டது. அப்பிரதேசத்தில் கண்டல் தாவரங்களும் நடுகை செய்யப்பட்டன. (ஒ-14)

## மருந்தாளர் பதவி வெற்றிடம் இருமாதங்களில் நிரப்பப்படும்

### பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 6

யாழ்.மாவட்டத்தில் மருத்துவ ஆய்வு கூட தொழில்நுட்பவியலாளர், மருந்தாளர் ஆகிய பதவிகளுக்கான வெற்றிடங்கள் இன்னமும் இரண்டு மாத காலத்தினுள் நிரப்பப்படும் என்று யாழ்.மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுகாதாரத்துறை தொடர்பிலான அபிவிருத்தி மீளாய்வு தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்திலுள்ள மருத்துவமனைகளில் மருத்துவ ஆய்வுகூட தொழில் நுட்பவியலாளர் (எம்.எல்.ரி), மருந்தாளர், கதிரியக்க இயக்குநர் (எக்ஸ்ரே ஒப்பரேரர்) ஆகிய பதவிகளுக்கு வெற்றிடங்கள் நிலவுகின்றன.

மருத்துவ ஆய்வுகூட தொழில் நுட்பவியலாளர்கள் 10 பேருக்கான வெற்றிடங்கள் நிலவுகின்ற நிலையில் தற்போது 4 பேரே கடமையாற்றுகின்றனர். மருந்தாளர்களைப் பொறுத்த வரையில் 21 பேருக்கான வெற்றிடங்கள் உள்ள போதும் தற்போது 15 பேரே கடமையாற்றுகின்றனர். கதிரியக்க இயக்குநர்களைப் பொறுத்த வரையில் 7 பேருக்கான வெற்றிடங்கள் உள்ள போதும் தற்போது 3 பேரே கடமையாற்றுகின்றனர்.

இதுதொடர்பில் யாழ்.மாவட்டத்தில் நிலவும் குறிப்பிட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்காக மத்திய சுகாதார அமைச்சைக் கோரியுள்ளோம். இரண்டு மாதங்களில் குறிப்பிட்ட வெற்றிடங்களை நிரப்பும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென அமைச்சு உறுதி யளித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (வ-5)

> கதிரியக்க இயக்கு நர்களைப் பொறுத்த வரையில்7 பேருக்கான வெற்றிடம் உள்ள போதும் 3 பேரே கடமை யாற்றுகின்றனர்.

## ஆஸி. - இலங்கை இடையே ஒப்பந்தம் இருக்கும்வரை தீர்வுக்கு இடமில்லை

### ஆஸி. அகதிகளுக்கான சட்டத்தரணிகள் தெரிவிப்பு

ஆஸிக்கும் இலங்கைக்கும் இடையிலான ஒப்பந்தம் இருக்கும்வரை இலங்கை புகலிட கோரிக்கையாளர்களின் பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது என்று ஆஸ்திரேலியாவில் உள்ள அகதிகளுக்கான சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

தமது நண்பர்கள் இருவர் நாடுகடத்தப்பட்ட நிலையில், தாமும் நாடுகடத்தப்படலாம் என்ற அச்சத்தாலேயே இலங்கை அகதி ஒருவர் ஆஸ்திரேலியாவில் தற்கொலை செய்துக் கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆஸ்திரேலியாவில் உள்ள அகதிகளுக்கான் சட்டத்தரணிகள் இதனைத் தெரிவித்துள்ளனர்.

தமிழ் நாட்டின் அகதி முகாம் ஒன்றில் இருந்து கடந்த வருடம் ஆஸ்திரேலியாவுக்கு சென்றிருந்த அவர், பாதுகாப்பு வீசாவில் தங்கி இருந்த நிலையில், கடந்த சனிக்கிழமை தீக்குளித்துள்ளார்.

அவர் தாம் எந்த தருணத்திலும் நாடுகடத்தப்படலாம் என்ற அச்சத்தில் வசித்து வந்ததாக அவருடன் வசித்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான ஆஸ்திரேலிய அரசின் அகதிகள் கோட்பாட்டின் கடும்போக்கு நிலை காரணமாக எதிர்காலத்தில் மேலும் இத்தகைய அகதிகளை இழக்க நேரிடலாம் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அபாட் அரசுக்கும் இலங்கை ஜனாதிபதிக்கும் இடையிலான ஒப்பந்தம் இருக்கும் வரைக்கும் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது.

இலங்கை அகதிகளை மட்டும் திட்டமிட்டு நாடுகடத்துவது உண்மையில் ஆஸ்ரேலிய மக்கள் மத்தியில் மிகவும் வேதனையளிக்கும் விடயமாகத் தான் உள்ளது என்று சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

# அகதிக் கொள்கையை ஆஸி. மாற்ற வேண்டும்

### அந்நாட்டின் பசுமைக் கட்சி தெரிவிப்பு

ஆஸ்திரேலியாவில் உள்ள இலங்கை அகதிகள் தற்கொலை செய்துக் கொள்வதன் மூலம், ஆஸ்திரேலிய அரசின் அகதிக் கொள்கை தோல்வி கண்டுள்ளது என்பதையே எடுத்துக் காட்டுவதாக, அந்த நாட்டின் பசுமைக் கட்சி தெரிவித்துள்ளது.

அந்த கட்சியின் செனட் சபை உறுப்பினர் சாரா ஹன்சன் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை தனக்குத் தானே தீ வைத்துக் கொண்ட இலங்கை அகதி ஒருவர், மெல்போர்ன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் கடந்த ஞாயிற்றுக் கிழமை உயிரிழந்தார்.

லியோ சீமான்பிள்ளை என்ற 29 வயதுடைய இலங்கையரே இவ்வாறு உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஆஸ்திரேலியாவில் உள்ள அகதிகளின் உயிர்கள் பாது காக்கப்படும் வகையில் ஆஸ்திரேலிய அரசு தமது அகதிக் கொள்கையை மாற்றி அமைக்க வேண்டும்**

இந்த நிலையிலேயே சாராஹ் ஹன்சன் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

ஆஸ்திரேலியாவில் உள்ள அகதிகளின் உயிர்கள் பாது காக்கப்படும் வகையில் ஆஸ்திரேலிய அரசு தனது அகதிக் கொள்கையைமாற்றி அமைக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை - ஆஸ்திரேலியாவில் உள்ள இலங்கை அகதிகள், தாம் மீண்டும் நாடு கடத்தப்படுவதை விட, அங்கேயே மரணித்து விடலாம் என்ற நிலையில் இருப்பதாக 'த கார்டியன்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

நாடுகடத்தப் படுவோம் என்ற அச்சத்திலேயே பெரும்பாலான இலங்கை அகதிகள் தற்கொலை முயற்சியில் ஈடுபடுவதாகவும் அந்தப் பத்திரிகை சுட்டிக்காட்டியுள்ளது.

இதற்கிடையில் கடந்த மாதம் மற்றுமொரு இலங்கை அகதி இலங்கைக்கு நாடுகடத்தப் படவிருந்த நிலையில், தமக்கு தாமே தீமூட்டி தற்கொலைக்கு முயற்சித்த நிலையில், மருத்துவமனையில் சேர்க்கப் பட்டு தொடர்ந்து சிகிச்சைப் பெற்று வருகின்றமை குறிப்பிடத் தக்கது. (வ)

## மனோரமா மருத்துவமனையில்




நடிகை மனோரமா

சென்னை, ஜூன்.6

நடிகை மனோரமா உடல் நலக்குறைவால் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு மூட்டு அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட மனோரமாவுக்கு அடிக்கடி உடல் நலக்குறைவு ஏற்பட்டு வந்தது. கடந்த மார்ச் மாதம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பிய மனோரமா, பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதை தவிர்த்து வீட்டிலேயே ஓய்வெடுத்து வந்தார். இந்தநிலையில் கடந்த சில நாள்களாக அவருக்கு மூச்சுத் திணறல் இருந்து வந்தது. இதையடுத்து சென்னை, தனியார் மருத்துவமனையில் நேற்று முன்தினம் சேர்க்கப் பட்டுள்ளார். (ம)

# இலங்கை அகதிகளை நாடுகடத்தியதை எதிர்த்து மலேசியாவில் ஆர்ப்பாட்டம்



கோலாலம்பூர் பொலிஸ் தலைமையகத் தொடர்புத்துறை அதிகாரியிடம் மனு கையளித்தபோது

கோலாலம்பூர், ஜூன் 6

இலங்கை அகதிகள் மூவர் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டதைக் கண்டித்து, மலேசிய அரச சார்பற்ற நிறுவனங்கள் அந்த நாட்டு பொலிஸ் தலைமையகத்துக்கு முன்பாக நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மூன்று தமிழர்களை திருப்பி அனுப்பிய தலைமைப் பொலிஸ் அதிகாரி டான்ஸ்ரீ காலிட் அபு பாக்கருக்கு எதிராக கண்டன மனு வழங்கப் பட்டது.

நேற்று முன்தினம் முற்பகல் 11 மணியளவில் கோலாலம்பூர் புக்கிட் அமான் பொலிஸ் தலைமையகத்தின் முன்பாகத் திரண்ட இந்த அமைப்புகளின் பிரதிநிதிகள் அந்த மனுவை வழங்கினர்.

கடந்த மே மாதம் 15 ஆம் திகதி கிருபாஹரன், கிருபநாதன் மற்றும் குசேந்தன் என்பவர்களை மலேசிய பொலிஸ் கைது செய்தது.

அதன் பிறகு அவர்களை மே 26 ஆம் திகதி இலங்கை அரசிடம் ஒப்படைத்தது.

இதுதொடர்பாகக் கருத்துத் தெரிவித்த பொலிஸ் அதிகாரி, குறித்த மூவரும் விடுதலை புலிகள் இயக்கத்தை உயிர்ப்பிக்கும் பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக கருதுவதாகவும், அதனால் அவர்களை குடிவரவு குடியகல்வுச்சட்டத்தின் கீழ் திரும்ப அனுப்பியதாக வும் கூறியிருந்தார்.

மேலும் மலேசியாவில் உள்ள இலங்கை அகதிகளைக் கண்காணிக்கப் போவதாகவும் அறிவித்திருந்தார். இந்த நிலையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட சுவராம் என்ற மனித உரிமைகள் அமைப்பின் தலைவர் கா. ஆறுமுகம், அனைத்துலக நீதி கோட்பாடுகளுக்கு முரணாக பொலிஸ் தலைமை அதிகாரி, அக்திகளை நாடுகடத்தி மீண்டும் இலங்கை அரசிடம் ஒப்படைத்ததைக் கடுமையாகச் சாடினார்.

அந்த மூவரும் நடத்தப்பட்ட முறை குடிவரவு குடியகல்வுச் சட்டத்துக்கு முற்றிலும் முரணானதாகும் என்று குறிப்பிட்டார்.

மேலும், இலங்கை அரசுதான் இந்த நடவடிக்கையின் இயக்குநர். அதற்கு உடந்தையாக மலேசியப் பொலிஸ்துறை செயற்படுவது கண்டனத்துக்குரியது என்றும் ஆறுமுகம் தெரிவித்தார்.

இந்த ஆர்ப்பாட்டத்துக்கு தலைமை தாங்கிய அரச சார்பற்ற நிறுவன செயற்பாட்டாளரான மகாலட்சுமி இராமகிருஷ்ணன் கூறுகையில்;

"மலேசிய பொலிஸ் தமிழ் அகதிகளை திரும்பவும் இலங்கைக்கு அனுப்புவது மிகவும் கொடூரமானது.

இனியும் இப்படி செய்வது தவிர்க்கப்பட வேண்டும் என கூறியதுடன், இலங்கையில் முஸ்லிம் மக்களும் பாதிப்புகளுக்கு உள்ளாகி வருவதையும் சுட்டிக் காட்டினார்.

இதில் கலந்து கொண்ட செலயாங் நகர சபை உறுபினரான குணராஜ்,

"போஸ்னியா, பாலஸ்தீன் போன்ற நாடுகளின் அகதிகளுக்கு சிறப்பான பாதுகாப்பையும் வாழ்வாதார வழிமுறைகளையும் வழங்கும் மலேசியா, ஏன் தமிழர் அகதிகளைப் பழிவாங்க முற்படுகிறது" என்று கேள்வி எழுப்பினார்.

வழங்கப்பட்ட மனுவில், "மலேசியாவில் வாழும் பெரும்பான்மைத் தமிழர்கள் ஈழப்போரட்டத்துக்கு ஆதரவு நல்கியவர்கள் என்றும், இலங்கை அரசு மேற்கொண்ட தமிழர்கள் மீதான இனப் படுகொலை, இன அழிப்புச் சம்பவங்களின் அடிப்படையில் மலேசியா, இலங்கை மீதான தனது வெளியுறவு கொள்கையை மறுபரிசீலனை செய்ய மலேசிய சமூக இயக்கங்கள் தொடர்ந்து குரல் கொடுத்து வருமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்டன மனுவை புக்கிட் அமான் தலைமையகத்தின் தொடர்புத்துறை அதிகாரி டி. எஸ்.பி. ரிசால் பின் அப்துல் சிடெக் பெற்றுக் கொண்டார். (வ)

## வதிவிடங்களுக்கு அருகே ஆசிரியர்களுக்கு நியமனம்

### வடக்கு கல்வி அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 6

வெளி மாவட்டங்களில் கடமையாற்றிவரும் ஆசிரியர்களுக்கு இடமாற்றத்தின் போது, அவர்களது சொந்த வதிவிடங்களுக்கு அண்மையில் உள்ள பாடசாலையில் நியமனம் வழங்கப்படும் என்று வடமாகாண கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

வடமாகாணக் கல்வி அமைச்சர் மற்றும் வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், மாகாணக் கல்வித் திணைக்கள அதிகாரிகள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், இலங்கை ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோருக்கிடையான கலந்துரையாடல் ஒன்று நேற்று கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அதன் போதே கல்வி அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

அடுத்தவருடம் முதல் அனைத்து இடமாற்றங்களும் ஜனவரி மாதத்தில் நடைமுறைப்படுத்தப்படும் என்றும், இந்த ஆண்டு யாழ். மாவட்டத்தில் இருந்து வெளிமாவட்டங்களுக்குரிய இடமாற்றங்கள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அந்தக் கலந்துரையாடலின் போது மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ர)

## தமிழக மீனவர் மீது மீண்டும் இலங்கை கடற்படை தாக்குதல்

இராமேஸ்வரம், ஜூன் 6

பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி மத்தியில் ஆட்சியமைத்த 11 நாள்களில் தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் இரண்டாவது முறை தாக்குதல் நடத்தியுள்ளனர் என்று இந்திய ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இராமநாதபுரம் மாவட்டம், பாம்பனைச் சேர்ந்த மீனவர்கள் கச்சதீவு அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது, அங்கு வந்த இலங்கைக் கடற்படையினர், மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தியதோடு, 15 இற்கும் மேற்பட்ட படகுகளில் இருந்த மீன்பிடிச் சாதனங்களையும் சேதப்படுத்தினர்.

மேலும், இந்த தாக்குதலில் தமிழக மீனவர்களின் ஒரு படகு கடலில் மூழ்கடிக்கப்பட்டது.

பின்னர் இலங்கைக் கடற்படையினர் மீனவர்களை எச்சரிக்கை செய்து விட்டு சென்றனர்.

இந்தியாவில் பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி கடந்த மாதம் 26ஆம் திகதி பதவியேற்றுக் கொண்டது. பிரதமராக நரேந்திர மோடி பதவியேற்றுக் கொண்டார்.

மோடி பதவியேற்ற சில நாள்களில் இராமேஸ்வரம் மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் தாக்குதல் நடத்தியதோடு, படகுகளையும், மீன்பிடிச் சாதனங்களையும் சேதப்படுத்தினர். கடந்த 31 ஆம் திகதி இராமேஸ்வரம் மீனவர்கள் 33 பேர் சிறைபிடிக்கப்பட்டனர்.

இந்நிலையில், பாம்பன் மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் தாக்குதல் நடத்தியதோடு, அவர்களது மீன்பிடி சாதனங்களையும் சேதப்படுத்தியதோடு மீனவர்களின் படகை கடலில் மூழ்கடித்துள்ளனர்.

கடந்த காங்கிரஸ் அரசுதான் மீனவர்களை கைவிட்டுவிட்டது. தற்போது அமைந்துள்ள புதிய அரசாவது தமிழக மீனவர்களைப் பாதுகாக்கும் என்றிருந்த நிலையில், மீனவர்கள் மீதான தாக்குதல் அதிகரித்துள்ளமை தமிழக மீனவர்களை கவலையடையவைத்துள்ளது. (வ)

## அக்கிராசனத்தில் அமர்ந்தார் சஜித் எம்.பி



சஜித் பிரேமதாச


கொழும்பு.ஜூன் 6
ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச அக்கிராசனத்தில் நேற்றுமுன்தினம் புதன் கிழமை முதன்முறையாக அமர்ந்து அவையை நடத்தினார்.
நாடாளுமன்ற அமர்வின் போது சபாநாயகர் அல்லது பிரதிச் சபாநாயகர் அல்லது குழுக்களின் பிரதித்தலைவர் ஆகியோர் அவையில் இல்லாது விடின் சபை அமர்வுகளை உறுப்பினர் ஒருவர் நடத்திச் செல்லலாம்.
அந்த அடிப்படையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச அக்கிராசனத்தில் முதன்முறையாக அமர்ந்து அவையை நடத்தியமை குறிப்பிடத்தக்கது. (ச)

## போதைப் பொருள் வைத்திருந்த நான்கு பேர் மாட்டினர்

கொழும்பு.ஜூன் 6
ஹெரோயின் போதைப் பொருளை தம்வசம் வைத்திருந்த மூன்று பேர் புத்தளம், மணல்குண்டு பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.
புத்தளம் பொலிஸின் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவல் ஒன்றையடுத்து மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் அவர்கள் கைது செய்யப்பட்டதுடன், சந்தேக நபர்களிடம் இருந்து 1.70 கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது.
சந்தேகநபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக புத்தளம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.
இதேவேளை- கஞ்சா போதைப் பொருளை வைத்திருந்த பெண்ணொருவர் திஸ்ஸமஹாராம, பெரலி ஹெல பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.
அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்ட பெண் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ச)

## பெண் உறுப்பினர்கள் குழு அமெரிக்காவில்

கொழும்பு.ஜூன் 6
நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் சுமேதா ஜீ.ஜயசிங்க தலைமையிலான இலங்கை நாடாளுமன்றத்தைச் சேர்ந்த பெண் உறுப்பினர்கள் குழு அமெரிக்கா சென்றுள்ளது.
இந்தக் குழுவினர் அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர் நிஷா பிஷ்வாலைச் சந்தித்து கலந்துரையாடினர்.
இலங்கையில் பெண்களுக்கு எதிராக இடம்பெறும் வன்முறை சம்பவங்கள் மற்றும் பல்வேறு நெருக்கடிகள் குறித்து இந்தச் சந்திப்பில் அவர்கள் நிஷாவிடம் விளக்கினர்.
இந்தச் சந்திப்பில் இலங்கையில் பெண்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் ஆராயப்பட்டன. (ச)



அமெரிக்காவில் இலங்கைக் குழு

# மனித உரிமைகளை மீறும் மஹிந்த அரசு

### நீதிமன்ற விவகாரங்களிலும் தலையீடு என்கிறது ஐ.தே.க.

கொழும்பு.ஜூன் 6
இலங்கை அரசு சொந்த நாட்டு மக்களின் மனித உரிமைகளையே மீறி வருகிறது. சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட வேண்டுமாயின் நீதிமன்றம் சுயாதீனமாக இயங்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரட்ன தெரிவித்தார்.



எரான் விக்ரமரட்ன

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
தனிஈழம் அமைக்கும் முனைப்புக்களை ஏற்றுக்கொள்ள முடியாது. தனி ஈழமொன்றை அமைப்பது குறித்து இலங்கை மற்றும் புலம்பெயர் வாழ் தமிழர்களுக்கு மத்தியில் பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா, இந்திய பிரதமர் நரேந்திர மோடியிடம் கோரியுள்ளார்.
எனினும், இந்தக் கோரிக்கை ஏற்புடையதல்ல. ஐக்கிய இலங்கை மற்றும் நாட்டின் பௌதிக ஒருமைப்பாடு ஆகியன தொடர்பில் எந்தவித மாற்றுக் கருத்துக்களும் இல்லை.
ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பதே ஐக்கிய தேசியக்கட்சியின் நிலைப்பாடு.
இலங்கை விவகாரங்களில் சர்வதேச நாடுகளின் தலையீட்டை ஏற்றுக்கொள்ள முடியாது.
தற்போதைய அரசு ஜனநாயக விரோத செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதனாலும், குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிக்கப்படாத நிலைமை நீடிப்பதனாலும் சர்வதேச நாடுகள் இலங்கை விவகாரங்களில் தலையீடு செய்து வருகின்றன.
சொந்த நாட்டு மக்களின் மனித உரிமைகளையே இலங்கை அரசு மீறி வருகிறது. சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட வேண்டுமாயின் நீதிமன்றம் சுயாதீனமாக இயங்க வேண்டும்.
எனினும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நீதிமன்ற விவகாரங்களில் தலையீடு செய்து வருகிறார். அரசின் நடவடிக்கைகளால் ஐக்கிய நாடுகள் மனித உரிமைசபையில் போர்க் குற்றச் செயல்கள் தொடர் பில் விசாரணை நடத்தப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.
உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கைப் பரிந்துரைகளை உரிய முறையில் நடைமுறைப் படுத்துவதன் மூலம் சர்வதேச தலையீடுகளை வரையறுக்க இன்னமும் சந்தர்ப்பம் உள்ளது-என்றார். (ச)



பொஸன் உற்சவத்தை முன்னிட்டு ஒருதொகைப் புத்தகங்களை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் புதன்கிழமை அலரி மாளிகையில் வைத்து கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவிடம் கையளித்தார். அருகில் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, கல்வி அமைச்சின் செயலர் அநுர திஸாநாயக்க உட்படப் பலர் காணப்படுகின்றனர்.

## நிவாரணம் வழங்க வழங்கப்பட்டது நிதி

கொழும்பு.ஜூன் 6
அடைமழை மற்றும் இடர்களால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் அரசு நிவாரணப் பணிகளை துரிதப்படுத்தியுள்ளது என்று இடர் முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-



மஹிந்த அமரவீர

> சீரற்ற காலநிலை காரணமாக தெற்கிலும், மலையகத்திலும் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எத்தகைய இடர்களிலிருந்தும் மக்களை பாதுகாப்பாக மீட்டு உரிய நிவாரணங்களை வழங்குவதற்கான நிதி அனைத்து மாவட்ட அரச அதிபர்களுக்கும் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது.
நிவாரணப் பணிகளுக்கு நிதியொருபிரச்சினையேஇல்லை.
ஒதுக்கப்பட்ட நிதிக்கு மேலதிகமாக பாதிக்கப்பட்ட மாவட்ட அரச அதிபர்கள் கோரும் பணத்தை பெற்றுக் கொடுக்க அரசு தயார் நிலையில் உள்ளது-என்றார்.
இதேவேளை- சீரற்ற கால நிலையால் தெற்கின் பல பாகங்களிலும் கடந்த சில தினங்களாக ஏற்பட்ட இடர் நிலைமைகள் நேற்றுமுன்தினம் புதன்கிழமையிலிருந்து குறைவடைந்து வருகின்றன என்று இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்தது.
இந்தச் சீரற்ற காலநிலை காரணமாக தெற்கிலும், மலையகத்திலும் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர்.
23 பேர் உயிரிழந்துள்ளனர் என்று இடர் முகாமைத்துவ நிலையம் மேலும் குறிப்பிட்டது.
இதேவேளை- மழை குறைவடைந்தாலும் வீதிகளில் வெள்ளம் தேங்கி நிற்கின்றது. இதனால் சில பகுதிகளுக்கான போக்குவரத்து வழமைக்குத் திரும்பவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

## முன்னாள் போராளிகளுக்கு தொழில் வழங்க சிங்கப்பூர் ஆர்வம்

கொழும்பு.ஜூன் 6
புனர்வாழ்வு பயிற்சி அளிக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகள் 40 பேருக்குதொழில்வாய்ப்புகளை வழங்க சிங்கப்பூர் ஆர்வம் வெளியிட்டுள்ளது என்று புனர்வாழ்வு ஆணையாளரின் பணியகம் தெரிவித்துள்ளது.
கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க தேசிய செயற்றிட்டத்தின் கீழ் தற்போது 132 முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது.

> மூன்று மாதங்களுக்கு ஒரு முறை புனர்வாழ்வு பயிற்சிகளை முடித்தவர்கள் விடுவிக்கப்பட்டு வருகின்றனர்.

2009 ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்தபின்னர் 12 ஆயிரம் புலிப் போராளிகள் சரணடைந்துள்ளனர் என்று புனர்வாழ்வு ஆணையாளர் மேஜர் ஜெனரல் ஜெகத் விஜேதிலக்க தெரிவித்தார்.
132 முன்னாள் புலிப் போராளிகளுக்கு வவுனியா, பூந்தோட்டம் புனர்வாழ்வு முகாமில் ஒரு வருடகால புனர்வாழ்வு பயிற்சிகள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன என்று அவர் கூறினார்.
புனர்வாழ்வு பயிற்சிகளை பெறும் போராளிகளை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பிரதிநிதிகள் தொடர்ச்சியாக பார்வையிட்டு வருவதுடன் அவர்களின் குடும்ப உறுப்பினர்களும் சந்தித்து வருகின்றனர்.
மூன்று மாதங்களுக்கு ஒரு முறை புனர்வாழ்வு பயிற்சிகளை முடித்தவர்கள் விடுவிக்கப்பட்டு வருவதுடன் இந்த மாதம் மற்றுமொரு தொகுதியினர் விடுவிக்கப்பட உள்ளனர் என்று அவர் தெரிவித்தார்.
புனர்வாழ்வு பயிற்சிகள் வழங்கப்பட்டவர்களில் 230 பேர் உயர்கல்வி தகுதிகளை பெற்றுள்ளதுடன் 35 பேர் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்று வருகின்றனர் என்று அவர் தெரிவித்தார். (ச)

# தலசீமியா நோயாளர்கள் மட்டக்களப்பில் அதிகரிப்பு

## வைத்தியசாலை பணிப்பாளர் தகவல்

மட்டக்களப்பு.ஜூன் 6
மட்டக்களப்பு மாவட்டத்தில் 120 தலசீமியா நோயாளர்கள் உள்ளனர். அவர்களுக்கு குருதி கிரமமாக வழங்கப்படுவதன் மூலம் இன்று அவர்களின் உயிர்கள் பாதுக்கப்படுகின்றன என்று மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை பணிப்பாளர் எம்.எஸ்.இப்றாலெவ்வை தெரிவித்தார்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்ற குருதி நன்கொடையாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

> மட்டக்களப்பில் 120 தலசீமியா நோயாளர்கள் இதுவரை இனங் காணப்பட்டுள்ளனர்.

இன்று இலங்கையில் தாய் மற்றும் குழந்தைகளின் உயிரிழப்பு வீதம் குறைந்துள்ளது. இதற்குக் காரணம் குருதி நன்கொடையாளர்கள் வழங்கும் ஒத்துழைப்பாகும்.

தாய் மற்றும் குழந்தைகளின் உயிர்களைப் பாதுகாக்க உதவுவது போல, மட்டக்களப்பிலுள்ள தலசீமியா நோயாளர்களுக்கும் குருதி நன்கொடையாளர்களின்குருதிவழங்கப்படுகின்றது.

ஒரு காலத்தில் தலசீமியா நோயாளர்களில் இளைஞர்களைக் காணமுடியாதிருந்தது. ஏனெனில் அவர்கள் சிறுவயதிலேயே உயிரிழந்து விடுவார்கள். ஆனல்இன்றுஅவ்வாறில்லை. இந்த நோயுள்ள மாணவர் ஒருவர்பல்கலைக்கழகத்துக்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு குருதி நன்கொடையாளர்கள் வழங்கும் குருதிகள் மூலம் இவ்வாறான நன்மைகள் பல கிட்டுகின்றன.

இரத்தப் புற்று நோயுள்ளவர்களுக்கும் குருதிகள் வழங்கப்படுகின்றன. அதேபோன்று வீதி விபத்துக்கள் மற்றும் வாகன விபத்துக்கள் ஏற்பட்டு காயமடைந்து வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்படுபவர்களுக்கும் குருதி வழங்கப்படுகின்றது.

குருதி நன்கொடை யாளர்கள் வழங்கும் ஒத்துழைப்பும் உதவியும் இவ்வாறான சந்தர்ப்பங்களில் உயிர்களை பாதுகாக்க உதவுகின்றன.

குருதி வழங்கும் ஒருவருக்கு மிக விரைவில் அவரது உடம்பில் மீள் குருதி வருவதால் அவரது உடல் ஆரோக்கியம் எந்த வகையிலும் பாதிப்பு அடைவதில்லை- என்றார். (ச)

## கட்டுத்துவக்கு வைத்திருந்த நபர் கைது



கோப்புப்படம்

வாகரை.ஜூன் 6
சட்டவிரோதமாக கட்டுத்து வக்கு ஒன்றை வீட்டில் மறைத்து வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் நபெராருவர் வாகரைப் பிரதேசத்தில் நேற்று முன்தினம்புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரிடமிருந்து குறித்த கட்டுத்துவக்கு பறிமுதல் செய்யப்பட்டுள்ளது என்று பொலிஸார் கூறினர்.

சின்னத்தட்டுமுனை, வாகரையைச் சேர்ந்த நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸரர் கூறினர். (ச)

## முதலாம் வருட மாணவருக்கு கற்கைகள் ஆரம்பம்

மட்டக்களப்பு.ஜூன் 6
தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் முதலாம் வருட புதிய மாணவர்களுக்கான முதலாம் பருவ கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது என்று பல்கலைக் கழகப் பதிவாளர் எச்.அப்துஸ் ஸத்தார் தெரிவித்தார்.

கலை.கலாசார பீடம்.வர்த்தக முகாமைத்துவ பீடம், இஸ்லாமிய கற்கைகள் அரபுமொழி பீடம் , பிரயோக விஞ்ஞான பீடம் ஆகிய மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகளே ஆரம்பிக்கப்படவுள்ளன என்று அவர் கூறினார்.

இந்த மாணவர்களில் விடுதி வசதி வழங்கப்பட்டுள்ள மாணவர்கள் எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்குமுன்னர் ஒலுவில்வளாகத்திலுள்ளவிடுதிமேற் பார்வையாளரின் அலுவலகத்துக்கு சமுகமளிக்க வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# மீன் வளர்ப்புத் திட்டத்தை வேறு இடத்துக்கு மாற்றுக

## கூட்டமைப்பிடம் மக்கள் கோரிக்கை

மட்டக்களப்பு.ஜூன் 6
மட்டக்களப்பு, கடுக்காமுனை குளத்துக்கு அருகில் மீன்குஞ்சு வளர்ப்புத்திட்டம் ஆரம்பிக்கப் படவுள்ளது. இந்தத் திட்டம் இந்துக்களின் கலாசாரத்துக்கு முரணான வகையில் ஆலயங்களுக்கு அண்மையில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதால் உடனடியாக அதனைத் தடை செய்ய வேண்டும் என்று தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரிய நேத்திரனிடம்மக்கள்கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தத் திட்டத்துக்கு அருகாமையில்நெற்கட்டியடி விக்கினேஸ்வரன், மாரியம்மன் ஆலயம் என இரண்டு ஆலயங்கள் இருப்பதனால் மீன் வளர்ப்பை வேறு இடத்துக்கு மாற்ற வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரிய நேத்திரன் தெரிவித்தார்.

இந்தத் திட்டம் மக்கள் நலன் சார்ந்த திட்டமாக இருப்பதனால் அதனை வேறு ஒரு இடத்துக்கு மாற்றி மக்கள் நலனில் அக்கறை காட்ட வேண்டும் என்று அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ச)

# ஓட்டோ - மோ. சைக்கிள் மோதி பாடசாலை மாணவிகள் காயம்

அட்டாளைச்சேனை.ஜூன் 6
அட்டாளைச்சேனை அல் முனீறா பெண்கள் உயர்தரப் பாடசாலைக்கு முன்னால் இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் பாடசாலை மாணவிகள் மற்றும் மோட்டார் சைக்கிளோட்டி உட்பட 7 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

பாடசாலைக்கு மாணவிகளை ஏற்றிவந்த ஓட்டோ ஒன்றுடன் உள்ளக வீதியால் வந்த மோட்டார் சைக்கிளொன்று மோதிக் கொண்டதில் இந்த விபத்து இடம்பெற்றது.



விபத்தில் சிக்கிய ஓட்டோ.மோ.சைக்கிள்

இந்த விபத்து நேற்று வியாழக் கிழமை காலை இடம்பெற்றது. இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த 6 மாணவிகள் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையிலும், மோட்டார் சைக்கிளோட்டி அட்டாளைச் சேனை பிரதேச வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## 247 நாடுகளின் நாணயங்கள் கண்காட்சி

ஆரையம்பதி.ஜூன் 6
247 உலக நாடுகளின் நாணயங்கள் மற்றும் நாணயத் தாள்களைக் கொண்ட கண்காட்சி மட்டக்களப்பில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்றது.

மட்டக்களப்பு, ஆரையம்பதி இராமகிருஷ்ணமிஷன் வித்தியாலயத்தில் நடைபெற்ற இந்தக் கண்காட்சியை பெரும் எண்ணிக்கையிலான மாணவர்களும் பொதுமக்களும் பார்வையிட்டுள்ளனர்.

இலங்கையில் சுதந்திரத்துக்கு முன்னர் ஒல்லாந்தர் மற்றும் போத்துக்கேயர்களின் ஆட்சிக் காலங்களின் போது பாவனையிலிருந்த புராதன நாணயங்களும் இக் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## கின்னஸ் சாதனைக்காக கையொப்பம் திரட்டல்

தேசிய இரத்த பரிமாற்றுச் சேவையை கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பிடிக்கச் செய்ய 50 ஆயிரம் கையொப்பங்கள் திரட்டும்நடவடிக்கைநேற்று முன்தினம் புதன்கிழமை மட்டக்களப்பு, அம்பாறை கரையோரப் பிரதேசங்களில் இடம்பெற்றன.

தேசிய இரத்த மாற்றீட்டு வைத்திய அதிகாரி திருமதி மலிந்த அதிகாரமதலைமையிலானகுழுவினர்வாகன ஊர்திப் பவனியுடன் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையை நேற்றுமுன்தினம் புதன்கிழமைமாலை வந்தடைந்தனர். (ச)

3ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்ணுலகில்
17.01.1948

விண்ணுலகில்
09.06.2011



அமரர் கணேசையா
ஜெனரட்ணசிங்கம்
(பாடசாலை வைத்திய அதிகாரி பணிமனை ஊழியர்)

திதி: அட்டமி (06.06.2014)

ஆண்டுகள் மூன்று ஆனதுவோ
ஆறவில்லை எம் நீள் துயரம்
அழகிய உங்கள் சிரித்த முகத்தைக்
காணத் துடிக்கின்றோம் கண்ணீருடன்
கனவுகள் பல கண்டோம்
எல்லாம் கலைந்த முகிலானது
நிஜமான உங்கள் நினைவு மட்டும்
நீங்காது எம்மை விட்டு
சிவனடியில் சாந்திபெற வேண்டுகின்றோம்.

31, சென்மேரிஸ்
முதலாம் ஒழுங்கை,
கொழும்புத்துறை.

நெகிழ்ந்த நெஞ்சுடன்:
கமலாதேவி - மனைவி,
ராம்ஜி - மகன்,
குடும்பத்தினர்.

[சி13985][12.3.6]

இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
14 . 08 . 1972

விண்ணில்
06 . 06 . 2012



அமரர் சின்னத்தம்பி
பாலசுப்பிரமணியம்

ஈராண்டு ஆனதுவே உங்கள் முகம் கண்டு
ஆறவில்லை நம் இதயம் அன்பும் பாசமும் நிறைந்த
பொக்கிஷம் நீங்கள் நித்தம் புலம்புகின்றோம்
உங்கள் திருமுகம் காணாமல்
ஆறவில்லை எங்கள் துயர்.

புன்னாலைக் கட்டுவன் தெற்கு.
தாய்

[48723][7.6.3]

# தென்மராட்சி கல்வி வலய கணித விநாடி வினா போட்டி முடிவுகள்

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் தரம் 10 வரையான மாணவர்களிடையே நடத்தப்பட்ட வலய மட்ட கணித விநாடி வினாப் போட்டியில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் விவரங்கள் வலயக் கல்வி அலுவலகத்தால் வெளியிடப்பட்டுள்ளன.

தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் மாகாண மட்டப் போட்டியில் கலந்துகொள்வதற்காக மாகாண கல்வித் திணைகளத்துக்கு பட்டியல் அனுப்பப் பட்டுள்ளது. போட்டிகளில் முதல் மூன்று இடங்களை வகுப்பு ரீதியாகப் பெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு:-

**தரம் - 6** - இரவிக்குமார் தவினுஷன்.மயேந்திரகுமார்வீணஜா. கணேசலிங்கம் சாம்பவி- சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

**தரம் - 7** - ஜெகநாதன் ஜெகதீஸ்வரன்- மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தி., மனோரஞ்சிதன் கோபிதன், ரவீந்திரன் மதுஷனா- சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

**தரம் - 8** தனராஜ் சுந்தர்பவன், சிவஅன்பு அஜந்தன்- சாவகச்சேரி இந்துக் கல்லூரி. பவளகுமாரன் விதுர்சன்- கைதடி முத்துக்குமாரசாமி ம.வி.

**தரம் - 9** - சிவசுந்தலிங்கம் டனுசன்- சாவகச்சேரி இந்துக் கல்லூரி. சிறிராஜகுமார் பிரதீப்- சாவ கச்சேரி டிறிபேக் கல்லூரி, சிவ ஞானலிங்கம் யாதவன்- மீசாலை வீரசிங்க மத்திய கல்லூரி.

**தரம் - 10**- சுப்பிரமணியம் சுபா ஸன் - நாவற்குழி ம.வி. கன கேஸ் வரன் கவிப்பிரியா- மீசாலை வீரசிங்கம் ம.க., சந்திரராசா சுஹேசினி-சாவகச்சேரி இந்துக் கல்லூரி. (வ-9)



மணியம்தோட்டம் கர்த்தர் ஆலய வருடாந்த திருவிழாவில் விண்ணேற்ற இயேசுவின் திருச்சொரூப பவனி இடம்பெற்றது. (வ-135)

# விபூசிகா மற்றும் அவரது தாயாரின் அடிப்படை உரிமை மீறல் மனு விசாரணை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 6

கிளிநொச்சியில் கைது செய்யப்பட்ட விபூசிகா மற்றும் அவரது தாயார் ஜெயக்குமாரி ஆகியோர் தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு இன்று வெள்ளிக்கிழமை வரையில் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸாரால், தமிழீழ விடுதலைப் புலிகளின் மீளுருவாக்கத்தில் ஈடுபட்ட தலைவர் என்று அறிவிக்கப்பட்ட கோபியன், ஜெயக்குமாரி வீட்டிலிருந்து பொலிஸார் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டு ஜெயக்குமாரியும் அவரது மகள் விபூசிகாவும் கைது செய்யப் பட்டிருந்தனர்.

> காணாமற்போன தனது மகனைத் தேடி ஜெயக்குமாரியும் அவரது மகள் விபூசிகாவும் பல்வேறு போராட்டங்களில் பங்கெடுத்திருந்ததுடன், சர்வதேச ஊடகங்களின் கவனங்களையும் ஈர்த்திருந்தனர்.

காணாமற்போன தனது மகனைத் தேடி ஜெயக்குமாரியும் அவரது மகள் விபூசிகாவும் பல்வேறு போராட்டங்களில் பங்கெடுத்திருந்ததுடன், சர்வதேச ஊடகங்களின் கவனங்க்ளையும் ஈர்த்திருந்தனர். இவ்வாறானதொரு நிலையிலேயே கடந்த மார்ச் மாதம் 13 ஆம் திகதி அவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். அதன் பின்னர் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய விபூசிகா கிளிநொச்சியிலுள்ள சிறுவர் இல்லம் ஒன்றில் தங்க வைக்கப்பட்டுள்ளார். தாயார் ஜெயக்குமாரி பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் பூஸாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இவர்கள் இருவர் சார்பிலும் அடிப்படை உரிமை மீறல் மனு உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த மனு விசாரணைக்காக நேற்று முன்தினம் எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது. இதன் போது மனுதாரர்கள் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி வெலியமுன முன்னிலையாகியிருந்தார். அரச தரப்புச் சட்டத்தரணி மன்றில் முன்னிலையாகாததால் வழக்கு இன்று வெள்ளிக்கிழமை வரையில் ஒத்திவைக்கப்பட்டது.

உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு மீதான வழக்கு விசாரணை மிகக் குறைந்த தவணையில் ஒத்திவைக்கப்படுவது மிகக் குறைவு என்பது குறிப்பிடத்தக்கது. (வ-5)

## இமையாணனில் மழலைகளின் விளையாட்டு விழா இன்று

நெல்லியடி, ஜூன் 6

வடமராட்சி வலய கரவெட்டிக் கோட்ட முன்பள்ளிகளின் வருடாந்த மழலைகள் விளையாட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு இமையாணன் மத்திய விளையாட்டு மைதானத்தில் கரவெட்டி முன்பள்ளி கோட்ட இணைப்பாளர் திருமதி க.பாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கலந்துகொள்ளவுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடமராட்சி அலுவலக இணைப்பாளர் க.தர்மலிங்கம் கௌரவ விருந்தினராகவும் சிறப்பு விருந்தினர்களாக வட மராட்சி முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.தில்லைநாதன், நெல்லியடி கொமர்ஷல் கிறடிற் முகாமையாளர் பா.காண்டீபன் ஆகியோரும் கலந்து கொள்வர். (ஓ)

## செயலமர்வு

கரணவாய், ஜூன் 6

வடமராட்சி வலயப் பாடசாலைகளில் வரலாறு செயன்முறைத் தொழினுட்ப பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை மறுதினம் சனிக்கிழமை இடம் பெறவுள்ளது.

இதில் தரம் 10,11 மாணவர்களுக்கு வரலாறு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு புலோலி மெ.மி. த. க. பாடசாலையில் காலை 8.30 மணிக்கும், செயன் முறைத் தொழினுட்ப பாட ஆசிரியர்களுக்கான செயலமர்வு புலோலி ஆசிரியர் வள நிலையத்தில் காலை 8.15 மணிக்கும் நடைபெறவுள்ளது.

இவ்விருசெயலமர்வுகளிலும் குறித்தபாட ஆசிரியர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு வடமராட்சி வலய கல்விப் பணிப்பாளர் எஸ். நந்தகுமார் அறிவித்துள்ளார். (வ-108)

## சில்லுக்குள் சேலை சிக்கிய பெண் தலையில் காயம்

தென்மராட்சி, ஜூன் 6

மோட்டார் சைக்கிள் சில்லுக்குள் சேலை சிக்கியதில் தூக்கி வீசப்பட்டு குடும்பப் பெண்ணுக்கு தலையில் காயம் ஏற்பட்டது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை கச்சாய்ப் பகுதியில் இடம் பெற்றது.

நிகழ்வொன்றுக்கு செல்வதற்காக மோட்டார் சைக்கிளில் பயணித்த வேளையில் சில்லுக்குள் சேலைத் தலைப்புச் சுற்றி தூக்கி வீசப்பட்டதில் பெண் காயமடைந்ததாகத் தெரிவிக்கப் பட்டது.

கச்சாய் தெற்கைச் சேர்ந்த புவனேஸ்வரன் புனிதவதி (வயது-47) என்பவர், காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (வ-9)

## அபராதம்

தென்மராட்சி, ஜூன் 6

ஏழு மாடுகளை ஒரே தடவையில் லொறியொன்றிலுள் ஏற்றி வந்த இருவருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் தலா 5 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

மிருகங்களை சித்திரவதை செய்யும் விதத்தில் லொறியில் ஏற்றி வந்ததாக சாவகச்சேரி பொலிஸாரால் லொறியின் சாரதிக்கும் உதவியாளருக்கும் எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் மிருகவதை சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது இருவரும் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து இருவருக்கும் தலா 5 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது. (வ-9)

## களவு முயற்சி

நெல்லியடி மத்திய கல்லூரி வீதியில் அமைந்துள்ள கணினிக் கடையொன்றில் திங்கட்கிழமை இரவு பூட்டுக்கள் உடைக்கப்பட்டு கதவுகள் திறக்கப்படும்போது அந்தப் பாதையால் சென்றவர்களைக் கண்டதும் பூட்டுக்களை உடைத்த திருடர்கள் ஓட்டம் பிடித்தனர்.

இது தொடர்பாக நெல்லியடிப் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. இது வரை யாரும் கைது செய்யப் படவில்லை. (க-35)

## நயினாதீவு கேணிக்குழி வீதி புனரமைப்பு ஆரம்பம்

நயினாதீவு கேணிக்குழி வீதியைப் புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வேலணை பிரதேச சபையின் உதவியுடன் குறித்த வீதியின் புனரமைப்புப் பணிகள் இடம் பெற்று வருகின்றன. அதேவேளை வங்களாவடி கிழக்கு கடற்கரை வீதியைத் தார் ஊற்றிப் புனரமைப்பதற்கும் சபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக சபையின் உறுப்பினர் சி.ந.கருணாகரமூர்த்தி தெரிவித்தார். (வ-17)

## நிர்வாகசபை தெரிவு


வடமராட்சி, ஜூன் 6

பருத்தித்துறை, வடமராட்சி வடக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய இயக்குநர் சபைக்கான தேர்தல் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.தயாளன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. சபையின் தலைவராக மு.ஜெகதேவனும், உப தலைவராக ப.அல்பின்னும், செயலாளராக சு.ஜனார்த்தனனும் தெரிவானார்கள்.

ஏனைய உறுப்பினர்களாக கால்நடை வைத்திய அதிகாரி திருமதி எஸ்.சரோஜினிதேவி, சி.ஜெயராசா, கி.ஈஸ்வரன் ச.றஜிந்தீரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (வ-173)

## மரண அறிவித்தல்

### திருமதி திரேசம்மா கபிரியேற்பிள்ளை



யாழ். சில்லாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திரேசம்மா கபிரியேற்பிள்ளை 01.06.2014 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான செலஸ்ரின்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கபிரியேற்பிள்ளையின் அன்பு மனைவியும், லோறா (லண்டன்), றீற்றா, சுசிலா ஆகியோரின் அன்புத் தாயும், மரியம்மா, அன்னம்மா, மாகிறேற் காலஞ்சென்ற சூசைப்பிள்ளை, வேதநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், யேசுதாசன் (லண்டன்), காலஞ்சென்ற யூலியன் ஆகியோரின் அன்பு மாமியும், யோஜித்தா பமிலா (லண்டன்), சார்வியா சுசிலா (லண்டன்), காலஞ்சென்ற அன்ரன் வினோஷ் மற்றும் பானுஷி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சசாங்கன் (நோர்வே), சுதர்மினி, லொறோய் (லண்டன்), மெல்றோய் (லண்டன்), மெல்றோணி (கனடா), அனுஷா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பெரியதாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.06.2014) சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சில்லாலை கதிரை மாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் சில்லாலை சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

| | | | |
|---|---|---|---|
| சுசிலா | இலங்கை | [illegible] | +947 7117 4867 |
| சுசிலா | பிரித்தானியா | [illegible] | +442 0827 01163 |
| மெல்றோய் | பிரித்தானியா | [illegible] | +4477 4189 4629 |

(சி.13993) (45/6.3) சில்லாலை, [illegible]

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர் கணபதிப்பிள்ளை கந்தசாமி

[முன்னாள் [illegible]]

மண்மகிழ்வு 31.03.1946

கண்ணுறக்கம் 16.06.2013

திதி: 06.06.2014

எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே! எம் நெஞ்சமதில் என்றும் பிரகாசிக்கும் சுடர் நிலவே! எமது நல்வாழ்விற்காக வழிகாட்டிய அன்புத் தெய்வமே! பாரினிலே பாங்காய் வாழவைத்து பாதியிலே சென்று விட்டீரே! பாசத்துடன் எமை வளர்த்த தந்தையே! எங்கள் உறவிலே மீண்டும் கலந்திட உருவெடுத்து வருவீரா! காலத்தின் கோலமோ! காலனின் கட்டளையோ! கலங்கிக் கதறுகின்றோம்! புலம்பி அழுகின்றோம்! ஓராண்டு என்ன ஓராயிரம் ஆண்டுகள் ஆனாலும் உங்கள் நாமம் எம் நெஞ்சை விட்டு அகலாது! எங்கள் கண்ணீர்ப் பூக்களால் அர்ச்சித்து உங்கள் ஆத்மாசாந்தியடைய ஆண்டவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!!

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# ஈழத்துக்கான வாக்கெடுப்பை கோர ஜெயலலிதாவுக்கு உரிமையில்லை

## அமைச்சர் டிலான் பெரேரா காட்டம்

கொழும்பு.ஜூன் 6

இலங்கையில் ஈழத்துக்கான வாக்கெடுப்பை நடத்த ஐ.நாவை வலியுறுத்தவேண்டும் என்று இந்தியப் பிரதமரிடம் கோருவதற்கு தமிழக முதலமைச்சருக்கு எந்த உரிமையும் அதிகாரமும் இல்லை. இது இலங்கையின் இறையாண்மையை மீறும் செயலாகும் என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் நலன்புரி அமைச்சர் அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

முதலில் இந்தியாவிலிருந்து தமிழகத்தை பிரித்து தனி நாடாக்குவதற்கு வாக்கெடுப்பை நடத்துவதற்கு ஐ.நாவை வலியுறுத்துமாறு ஜெயலலிதா பிரதமர் நரேந்திர மோடியிடம் கோரவேண்டும். அதனைவிடுத்து இலங்கை குறித்து கோரிக்கை விடுப்பதற்கு அவருக்கு எந்த உரிமையும் இல்லை என்று அவர் கூறினார்.

இலங்கையில் ஈழத்துக்கான வாக்கெடுப்பை நடத்த ஐ.நாவை வலியுறுத்தவேண்டும் என்று இந்திய பிரதமர் நரேந்திர மோடியிடம் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா கோரிக்கை விடுத்தமை குறித்து தகவல் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-



டிலான் பெரேரா

நேற்று முன்தினம் டில்லியில் பிரதமர் நரேந்திர மோடியை தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா சந்தித்துக் கலந்துரையாடியிருந்ததுடன் பல்வேறு விடயங்கள் குறித்து ஆராய்ந்திருந்தார்.

இலங்கையில் ஈழத்தை அமைப்பதற்காக வாக்கெடுப்பை நடத்த ஐக்கிய நாடுகள் சபையை வலியுறுத்துமாறு இந்தியப் பிரதமரை தமிழக முதல்வர் எவ்வாறு வலியுறுத்த முடியும்? இது இலங்கையின் இறைமையில் கைவைக்கும் செயற்பாடாகும்.

இந்தியாவின் காஷ்மீர் பகுதியை தனிநாடாக்குவதற்கு வாக்கெடுப்பை நடத்துமாறு இலங்கையின் ஊவா மாகாண சபையால் ஒருபோதும் கோர முடியாது.

அதுபோன்று தமிழகத்தினாலும் இலங்கை விவகாரத்தில் கோரிக்கை விடுக்க முடியாது. எமது நாட்டின் இறைமையை மீற அவருக்கு முடியாது.

ஆனால் ஜெயலலிதா ஒன்றைச் செய்யலாம். அதாவது முதலில் இந்தியாவிலிருந்து தமிழகத்தை பிரித்து தனி நாடாக்குவதற்கு வாக்கெடுப்பை நடத்துவதற்கு ஐ.நாவை வலியுறுத்துமாறு ஜெயலலிதா பிரதமர் நரேந்திர மோடியிடம் கோரவேண்டும். அதனை விடுத்து இலங்கை குறித்து கோரிக்கை விடுப்பதற்கு அவருக்கு எந்த உரிமையும் இல்லை.

இதேவேளை - இந்திய தேர்தல் காலத்தில் பரப்புரை செய்த மோடியை தற்போது அவர் பிரதமராகிய பின்னர் காண முடியவில்லை. தனது பதவியேற்பு விழாவுக்கு அவர் நவாஷ் ஷெரீப்பை அழைத்திருந்தார்.

அத்துடன் வைகோவின் எதிர்ப்பின் பின்னணியிலும் எமது ஜனாதிபதியை அழைத்திருந்தார். எனவே அவர் சார்க் அமைப்பு வலுவடையவேண்டியமை குறித்து சிந்திக்கின்றார். அந்தவகையில் இந்திய பிரதமர் ஜெயலலிதாவின் கோரிக்கையை ஏற்கமாட்டார்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு மோடி அழுத்தம் பிரயோகிக்கவேண்டிய அவசியமில்லை. காரணம் அது எமது அரசமைப்பில் உள்ள விடயமாகும். எனவே அது தொடர்பில் நாமே குரல் கொடுக்கவேண்டும்.

13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் சிக்கல்கள் இருந்தால் அது தொடர்பில் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் ஆராயலாம். எனவே நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பேச்சு நடத்தி ஒரு முடிவுக்கு வர முடியும்-என்றார். (ச)

## இரவில் வெற்றிலை கொடுக்கலாமா?

இரவில் வெற்றிலை கொடுக்கக் கூடாது என்பதில் எந்த சாஸ்திர அடிப்படையும் இல்லாதபோதிலும், இந்த நம்பிக்கையில் உண்மையுண்டு. வெற்றிலையின் நரம்புகளில் வெற்றிலைப் பாம்பு குடிகொள்ளும் என்றொரு நம்பிக்கை உள்ளது. இரவில் இதைக் காணாமல் வெற்றிலை போட்டு உயிரிழந்தவர்கள் குறித்துக் கேள்விப்பட்டதுண்டு. வெற்றிலை மெல்லுபவர்கள் நரம்பைக் கிள்ளி எறிவதும் இதனாலாகலாம். எப்படியும் இரவில் வெற்றிலை வாங்கி பயன்படுத்தினால் வெற்றிலையில் படிந்திருக்கும் அழுக்கும் சிறு கிருமிகளும் கண்ணுக்குத் தெரிவதில்லை. கிருமிகளிடமிருந்தும் நோயணுக்களிடமிருந்தும் பாதுகாத்துக்கொள்ள இரவில் வெற்றிலை வாங்காமல், கொடுக்காமல் இருப்பது மிக நன்று.

ஞானக்கதிர்

# தரகுப் பணத்தை கேட்டால் முதலீடு செய்ய முடியுமா?

## அசாத் சாலி கேள்வி



கொழும்பு.ஜூன் 6

வெளிநாட்டவர்கள் அந்நிய செலாவணியுடன் ஏதாவது ஒன்றை செய்ய இலங்கைக்கு வருகின்றனர். அவர்களிடம் தரகு பணம் கேட்டால் அவர்கள் நாட்டில் இருப்பார்களா என்று அசாத் சாலி கேள்வி எழுப்பியுள்ளார்.

கூகிள் நிறுவனம் இலங்கைக்கு வந்திருந்தால் நாட்டுக்கு கோடிக்கணக்கில் நன்மை ஏற்பட்டிருக்கும். இலங்கையில் உள்ள பல பிள்ளைகளுக்கு தொழில் வாய்ப்பு கிடைத்திருக்கும் என்று அவர் கூறினார்.

மூன்று அமெரிக்கர்கள் இலங்கைக்கு வந்து கூகிள் நிறுவனத்தின் கிளை ஒன்றை ஆரம்பிக்கப் பேச்சு நடத்தினர். அனைத்தையும் பேசிய பின்னர், தரகுப் பணம் கேட்டதால், அந்த நிறுவனத்தினர் இலங்கையில் கிளையை ஆரம்பிக்கும் எண்ணத்தை கைவிட்டு திரும்பிச் சென்று விட்டனர். இப்படித்தான் பல முக்கிய நிறுவனங்கள் இலங்கைக்கு வந்து திரும்பிச் செல்கின்றன என்று அவர் தெரிவித்தார். (ச)

# வாக்குப் பலத்தைக் குறைத்து மதிப்பீடு செய்யவே முடியாது

## சரத் பொன்சேகா தெரிவிப்பு

கொழும்பு.ஜூன் 6

ஜனநாயகக் கட்சியின் வாக்குப் பலத்தை குறைத்து மதிப்பீடு செய்ய முடியாது என்று அந்தக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கொழும்பு கோட்டே பிரதேசத்தில் நேற்று முன்தினம் புதன் கிழமை நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனநாயகக் கட்சிக்கு பத்து லட்சம் வாக்காளர்கள் ஆதரவளித்து வருகின்றனர்.

ஜே.வி.பி கட்சிக்கும் ஆறு லட்சம் வரையிலான வாக்காளர்கள் ஆதரவளித்து வருகின்றனர்.

நாட்டின் பிரதான இரண்டு அரசியல் கட்சிகளுக்கு அடுத்த நிலையில் ஜே.வி.பி மற்றும் ஜனநாயகக் கட்சி ஆகியன திகழ்கின்றன.

எனவே ஜனநாயகக் கட்சியை எவரும் குறைத்து மதிப்பீடு செய்ய முடியாது.

பொதுத் தேர்தலுக்கு சென்றாலும், ஜனாதிபதி தேர்தலுக்கு சென்றாலும் எமது பலத்தை யாராலும் மறந்து விட முடியாது-என்றார்.(ச)

CEYLON THEATRES
இப்பொழுது திரையில்
MAJESTIC CINEMA - CARGILLS SQUARE
(Opposite Jaffna Teaching Hospital)



சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் தீபிகா படுகோன்
3D
கோச்சடையான்
THE LEGEND
Platinum 3D 10.30am, 2.30pm, 6.30pm



N.லிங்குசாமி வழங்கும்
மஞ்சப்பை
N.ராகவன்
Silver 2D 10.15am, 2.15pm, 6.15pm



வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்
(சி. 14443)
Bronze 10.30am, 2.30pm, 6.30pm
விசாரணை ☎ 021-2227712
www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com

**தவறிவிட்டது**
திருமதி S.அமிர்தவினோதன் (827850993V) என்பவருடைய SriLanka Insurance அடையாள அட்டை ஆஸ்பத்திரி வீதியில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் தொலைபேசி இலக்கத்துக்கு அறியத்தரவும்
தொடர்பு: 077 612 6779
(சி13895) (12.6)

**காணி விற்பனைக்கு**
பன்னகட்டை ஒழுங்கை தும்பளை வீதி, பருத்தித்துறையில் (யாழ்-பருத்தித்துறை வீதியில் இருந்து 300m) ஒரு பரப்பு 7 குழி விஸ்தீரணம் உள்ள சுற்றுமதில், கிணறு வசதியுள்ள வெற்றுக்காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 077 194 0537
(48713) (7.6.3)

**ALLIANZ LIFE INSURANCE LANKA LTD**



அலயன்ஸ் லங்காவில் ஊழியராகக் கடமையாற்றிய குணம் சிறிராம் 851113622V என்ற அடையாள அட்டை இலக்கத்தைக் கொண்டவரும் இல.17, 2 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் வசிப்பவருமான இவர் தற்போது எமது நிறுவனத்தில் சேவையில் இல்லை என்பதனை பொது மக்களுக்கு அறியத்தருகின்றோம்.
இவரூடாக மேற்கொள்ளப்படும் எந்த ஒரு கொடுக்கல் வாங்கல்களுக்கும் அலயன்ஸ் காப்புறுதிக் கம்பனியானது பொறுப்பேற்கமாட்டாது என்பதனை அறியத்தருகிறோம்.
(சி/14444) (6.4.3)

**சேவை நலன் பாராட்டு**



செல்வி **வீரகத்தி நாகம்மா**
உப அதிபர் யா/மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயம் - சாவகச்சேரி
Best wishe
சேவை விவரம்
* முதல் நியமனம் - ஆசிரியர் - மா/இரத்தோட்டை இந்து ம.வி. 12.03.1981 - 06.03.1990 வரை.
* ஆசிரியர் - யா/மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி. 07.03.1990 - 31.12.2011 வரை.
* உப அதிபர் யா/மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி 01.01.2012 - 07.06.2014 வரை.

07.06.2014இல் ஓய்வுபெறும் உப அதிபர் அவர்களின் சேவையைப் பாராட்டுவதுடன், அமைதியான, நீண்ட, நிம்மதியான ஓய்வு கால வாழ்வைப் பெற இறைவன் அருளை வேண்டி வாழ்த்துகின்றோம்.
பாடசாலை ஆசிரியர் நலன்புரிக் கழகம்.
யா/மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயம் - சாவகச்சேரி
(43655.12.3.6)

**வலி. கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம் - நீர்வேலி**
**கோப்பாய் எரிபொருள் நிலையத்தின் கட்டட வேலைக்கான கேள்வி விண்ணப்பம்**
கோப்பாய் எரிபொருள் நிலையத்தின் புதிய கட்டட வேலைக்குப் பொருத்தமானவர்களிடமிருந்து கூலிக்கான கேள்வி விண்ணப்பம் கோரப்படுகிறது.
விண்ணப்பிப்போர் கேள்வி விண்ணப்பங்களை தலைமைக்கந்தோரில் வேலை நாள்களில் பெற்றுக்கொள்ளலாம்.
*விண்ணப்ப முடிவு திகதி 16.06.2014 ஆகும்.
(03.06.2014 இயக்குநர் சபை கட்டளைப்படி)
பொது முகாமையாளர்,
வலி. கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம் நீர்வேலி.
03.06.2014
(சி13996) (12.3.6)

# தேசிய கல்வியியற் கல்லூரியின் கண்காட்சி நேற்று ஆரம்பம்





கண்காட்சியைப் பார்வையிடும் விருந்தினர்கள், மாணவர்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 6
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் 2014 ஆம் ஆண்டுக்கான மாபெரும் கல்விக் கண்காட்சி நேற்று வியாழக்கிழமை கல்வியியற் கல்லூரி பீடாதிபதி க.அமிர்தலிங்கம் தலைமையில் ஆரம்பமானது.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் எஸ்.சத்தியசீலன் கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார். சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறை பீடாதிபதி பேராசிரியர் த.கலாமணி மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். கண்காட்சி ஆரம்பப் பிரிவு, இடைநிலைப் பிரிவு, பொதுப் பிரிவு என வகுக்கப்பட்டு மாணவர்களுக்குச் சிறந்த பயனைத் தரக் கூடியதாக 43 காட்சியறைகள் அமைக்கப்பட்டுள்ளன.

சமயம், விளையாட்டு, விஞ்ஞானம், தொல்லியல், தமிழ் இசை, ஓவியம் என பல்வேறு பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கிடைதற்கரிய ஏட்டுச் சுவடி, மட்டக்களப்பு மாந்திரியம், நாலாயிரம் திவ்ய பிரபந்தம் உட்பட புராதன வரலாற்றுச் சான்றுகளும் தமிழ்ப் பிரிவில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

கண்காட்சியைப் பார்வையிட்ட மாணவர்களில் பலர், கண்காட்சி, "பயனுள்ளதாக இருந்தது, எனினும் முழுமையாக எல்லாவற்றையும் கவனித்துப் பார்க்க முடியாதிருந்தது. ஒரு காட்சியறைக்குள் மிகக் குறைந்த நிமிடங்களே தங்கி நின்று பார்வையிடக் கூடியதாக இருந்தது" என்று தெரிவித்தனர்.

கண்காட்சி ஆரம்பமான 30 நிமிடங்களுக்குள் குடாநாட்டின் பல பாகங்களிலும் இருந்தும் பெருமளவு மாணவர்கள் காட்சியைப் பார்வையிட வந்திருந்தனர்.

கண்காட்சி ஆரம்பித்த கையோடு ஒரே வேளையில் மாணவர்கள் கூடியதால் விளக்கங்களை முழுமையாகப் பெறுவது சிரமமாக இருந்தது என அவர்கள் குறிப்பிட்டனர்.

ஜனாதிபதி விருது பெற்ற விஜய் டி சில்வாவின் மாயா ஜாலக் காட்சி, கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர்கள் மாணவர்களது பொம்மலாட்டம், நாட்டுப்புற சிறப்பு ஆற்றுகை என்பனவும் இடம்பெற்றன. இதே வேளை – நேற்றைய தினம் ஆரம்பித்த இந்தக் கண்காட்சி நாளை வரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-7-21)

## 320 மணித்தியாலங்கள் சமூக சேவைக்கு உத்தரவு

### கசிப்புக் காய்ச்சுவதைக் கைவிடுவதாக வாக்குறுதி அளித்த நபருக்கு

தென்மராட்சி, ஜூன் 6
கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையை கைவிடுவதாக நீதிமன்றில் வாக்குறுதியளித்த நபரொருவருக்கு 320 மணித்தியாலங்கள் சமூக சேவையில் ஈடுபடுமாறு உத்தரவிடப்பட்டது.

சாவகச்சேரி மது வரித் நிலையத்தினரால் மீசாலையைச் சேர்ந்த ஒருவருக்கு எதிராக கசிப்பு விற்பனை செய்ததாக நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு; விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது தாம் சுற்றவாளி என அவர் கூறியதால் நேற்றுமுன் தினம் வரை வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது. நேற்றுமுன்தினம் வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது அந்தநபர் முதலில் தான் சுற்ற வாளி என்று கூறியதற்கு மன்னிப்புக் கோரியதுடன் இனி மேல் இவ்வாறான சட்டவிரோதத் தொழில் செய்யமாட்டேன் எனவும் உறுதியளித்தார். அதனை அடுத்து, ஆறு மாத கால இடைவெளிக்குள் 320 மணித்தியாலங்கள் சமூக சேவையில் ஈடுபடுமாறு அவருக்கு உத்தரவிடப்பட்டது. (வ-9)

## தொடர்ந்தும் ஒளிராத நிலையில் பிரதான வீதி மின் விளக்குகள்

### மின்சார சபையுடன் உள்ளூராட்சி மன்றங்கள் ஒப்பந்தம் மேற்கொள்ள முன்வராததால்

யாழ்ப்பாணம், ஜூன் 6
பிரதான வீதிகளிலுள்ள மின் விளக்குகளுக்கான இணைப்புக் கட்டணம் வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் செலுத்தப்பட்டுள்ள நிலையிலும், குறிப்பிட்ட உள்ளூராட்சி மன்றங்கள் மின்சார சபையுடன் ஒப்பந்தம் மேற்கொள்ள முன்வராமையால் அவை ஒளிராத நிலையில் தொடர்ந்தும் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்.மாவட்டத்தில் அகலிக்கப்பட்டு புனரமைப்புச் செய்யப்பட்ட பிரதான வீதிகளில் முக்கிய சந்திகளில் மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. அவை பொருத்தப்பட்டு 5 மாதங்களுக்கு மேலாகியும் ஒளிராத நிலையிலேயே உள்ளன. இதுதொடர்பில் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

800 வீதி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளதுடன் அவற்றைப் பொருத்துவதற்கான வேலையாள், கூலி மற்றும் இணைப்புக்கான கட்டணமாக 36 மில்லியன் ரூபா வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் மின்சார சபைக்குச் செலுத்தப்பட்டுள்ளது. பிரதான வீதிக்குரிய ஒவ்வொரு பகுதி உள்ளூராட்சி மன்றமுமே தமது பகுதிக்குள் பொருத்தப்பட்டுள்ள மின் விளக்குகளுக்குரிய மாதாந்த பாவனைக் கட்டணங்களைச் செலுத்த வேண்டும்.

இதற்குரிய ஒப்பந்தத்தில் ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்களும் கைச்சாத்திட்டாலேயே, மின்விளக்குகள் மின் வழங்கலுடன் இணைக்கப்படும். இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு பெரும்பாலான உள்ளூராட்சி மன்றங்கள் முன்வரவில்லை.

இது தொடர்பில் உள்ளூராட்சி மன்றப் பிரதிநிதிகள், வீதி விளக்குகள் பொருத்தப்படுவதற்கு முன்னர் எம்முடன் கலந்தாலோசிக்கப்படவில்லை. மேலும் மின்விளக்குக்குரிய மாதக் கட்டணம் அதிகமாக உள்ளது. இதனால் பிரதேச சபையால் குறித்த பணத்தைச் செலுத்த முடியாது என்று தெரிவித்தனர்.

இதற்கு மாற்றீடாக, எமது பிரதேச சபை வீதிகளில் நடப்பட்டுள்ள மின் கம்பங்களுக்கு வாடகைப் பணத்தை மின்சார சபை செலுத்தினால், மேற்படி ஒப்பந்தத்தில் கைசாத்திட தயார் என்று குறிப்பிட்டனர். (வ-5)

## பாடசாலைகளில் செஞ்சிலுவையின் மர நடுகைத் திட்டம்



யாழ்ப்பாணம், ஜூன் 6
உலக சுற்றுச் சூழல் தினத்தை முன்னிட்டு இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளை பாடசாலைகளில் மரநடுகைத் திட்டத்தைச் செயற்படுத்தவுள்ளது. மருதங்கேணிப் பிரிவில் உடுத்துறை மகாவித்தியாலயம், ஆழியவளை சி.சி.த.க வித்தியாலயம், சாவகச்சேரிப் பிரிவில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி, தெல்லிப்பழைப் பிரிவில் கீரிமலை நகுலேஸ்வரா வித்தியாலயம், பண்டாவல ஸ்ரீகணேச வித்தியாலயம் ஆகிய ஐந்து பாடசாலைகளிலேயே மரநடுகை மேற்கொள்ளப்படவிருப்பதாக இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளைத் தலைவர் கு.பாலகிருஷ்ணன் தெரிவித்தார். (ஓ-7)

## கர்ப்பமாக்கிய பெண்ணை மணம் செய்வதாகக்கூறி ஏமாற்றிய நபருக்கு விளக்கமறியல்

தென்மராட்சி, ஜூன் 6
திருமணம் செய்வதாக நீதிமன்றில் வாக்குறுதி அளித்துவிட்டு கர்ப்பிணிப் பெண்ணொருவரைத் தமது வீட்டுக்கு அழைத்துச் சென்ற நபர், நான்கு நாள்களின் பின்னர் அந்தப் பெண்ணை வீட்டைவிட்டுத் துரத்தி விட்டதுடன் அந்தப் பெண்ணைத் தாம் திருமணம் செய்யமாட்டேன் என்று கூறியதால் குறிப்பிட்ட நபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

பஸ் பயணத்தின் போது இவ்விருவருக்கும் இடையே பழக்கமேற்பட்டு, பின்னர் அது காதலாக மாறியதால் குறித்த பெண் கர்ப்பமடைந்தார்.

பாதிக்கப்பட்ட பெண் தனக்கும், தனது வயிற்றில் உள்ள குழந்தைக்கும் பாதுகாப்புக் கோரி கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

அந்த வழக்கு நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது பெண்ணின் கர்ப்பத்துக்கு தானே காரணம் என்றும், பெண்ணைத் தான் திருமணம் செய்வதாகவும் குறிப்பிட்ட நபர் நீதிமன்றில் நீதிவானுக்கு வாக்குறுதி அளித்திருந்தார்.

அதனையடுத்து நேற்று முன்தினம் புதன்கிழமை வரை வழக்கை ஒத்தி வைத்த நீதிவான் அடுத்த தவணைக்கு வரும்போது திருமணப் பதிவுச் சான்றிதழைக் கொண்டு வருமாறு உத்தரவிட்டிருந்தார். நேற்று முன்தினம் நீதிமன்றில் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது நான்கு நாள்கள் தன்னுடன் இணைந்து வாழ்ந்து விட்டு அந்த நபர் தன்னைத் துரத்தி விட்டதாகப் பெண் நீதிமன்றில் கூறினார். அப்போது அந்தப் பெண் கர்ப்பமுற்றதுக்குத் தான் காரணமில்லை. ஆகையால் தான் குறிப்பிட்ட அந்தப் பெண்ணைத் திருமணம் செய்ய மாட்டேன் என்றும் குறித்த நபர் தெரிவித்தார். இதனை அடுத்து குறித்த நபரை எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான் மரபணு சோதனை நடத்தி நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (வ-9)

## வலி.வடக்கு மக்களை வளலாயில் மீள்குடியேற்றும் நடவடிக்கை தொடர்ந்து தடையின்றி முன்னெடுப்பு

### இடைநிறுத்த அறிவிப்புக்கு என்ன நடந்தது என்கிறார் சுரேஷ்

**தற்போது பற்றைக் காடாக வுள்ள குறித்த பகுதிகளை அழிக் கும் நடவடிக்கைகளை இராணு வத்தினர் மேற் கொண்டுள்ள னர். அத்துடன் நில அளவைத் திணைக்களத்தி னரும் குறித்த பகுதிகளில் அளவீட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.**

யாழ்ப்பாணம், ஜூன்.6
வலி.வடக்கு மக்களை வளலாயில் மீள்குடியேற்றும் நடவடிக்கைகள் இடை நிறுத்தப்பட்டுள்ளதாக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் குறித்த நடவடிக்கைகள் இடை நிறுத்தப்படாது தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் எட்டப்பட்ட மேற்படி நடவடிக்கைகளை இடை நிறுத்தும் தீர்மானத்தை உரிய வகையில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேம சந்திரன் தெரிவித்தார்.

நீர்வேலியிலுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அலுவலகத்தில் நேற்று முன் தினம் நண்பகல் நடத்திய ஊடக வியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வளலாய் மேற்கில் 250 தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகளை சுவீகரிப்பதற்கான அறிவித்தல் இராணுவத்தினரால் ஒட்டப்பட்டிருந்தது. இராணுவத் தேவைக்காக அந்தக் காணி சுவீகரிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தற்போது பற்றைக் காடாகவுள்ள குறித்த பகுதிகளை அழிக்கும் நடவடிக்கைகளை இராணுவத்தினர் மேற் கொண்டுள்ளனர். அத்துடன் நில அளவைத் திணைக்களத்தினரும் குறித்த பகுதிகளில் அளவீட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த காணிகளில் மாதிரிக் கிராமம் அமைக்கப்பட்டு அந்தப் பகுதியில் வலி. வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்கள் குடியேற் றப்படவுள்ளனர். அதற்காகவே மேற்படி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இது தொடர்பில் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கேள்வி எழுப்பிய போது, இணைத் தலைவர்களுள் ஒருவரான அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா மேற்படி நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார். அவர் அவ்வாறு தெரிவித்திருந்தாலும் குறித்த பகுதிகளில் வலி. வடக்கு மக்களைக் குடியேற்றுவதற்கான மாதிரிக் கிராமம் அமைக்கும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன. வளலாயில் அந்தக் காணிகளின் உரிமையாளர்கள் நடுத்தெருவில் நிற்க அந்தக் காணிகளில் வேறு நபர்களை குடியமர்த்த நடவடிக்கை மேற்கொள்வது முறையற்றது. எனவே ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டதைப் போன்று மேற்படி நடவடிக்கையை இடைநிறுத்த வேண்டும் என்றார். (வ-5)

# வாக்குரிமையை வலியுறுத்தி வவுனியாவில் பேரணி



பேரணியில் ஈடுபட்ட போது...

வவுனியா, ஜுன் 6

வாக்காளர் தினத்தையொட்டி வவுனியாவில் விழிப்புணர்வுப் பேரணி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

இந்தப் பேரணி மக்கள் தமது வாக்குப் பதிவுகளைத் தவறாது பதிவு செய்து உறுதிப்படுத்திக் கொள்வதை வலியுறுத்தி நடைபெற்றது.

இந்தப் பேரணியை வவுனியா மாவட்டத் தேர்தல் திணைக்களமும், வவுனியா பிரதேச செயலகமும் இணைந்து நடத்தியுள்ளன.

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலை வீதியில் ஆரம்பமான இந்தப் பேரணியில் 18 வயதுக்கு மேற்பட்டோர் தமது வாக்குப் பதிவுகளை தவறாது பதிவு செய்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு மனிதனுக்கும் வாக்குப் பதிவை மேற்கொள்ளும் உரிமையுண்டு.

எனவே வாக்குப் பதிவை மேற்கொள்வதைத் தவறவிட வேண்டாம் போன்ற வாசகங்கள் கொண்ட பதாகைகளை ஏந்தியவாறு மக்கள் பேரணியாகச் சென்று ஏனையோருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளனர். (ச-421)

## கைவிடப்பட்ட வாகனங்கள் நாளாந்தம் திருட்டு

முல்லைத்தீவு, ஜுன் 6

முல்லைத்தீவு மாவட்டத்தின் சுதந்திரபுரம், புதுக்குடியிருப்பு ஆகிய பகுதிகளில் போர் நடைபெற்ற காலத்தில் கைவிடப்பட்ட பொதுமக்களின் வாகனங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் நாளாந்தம் திருடப்பட்டு வருகின்றன.

போர் காலத்தில் கைவிடப்பட்ட வாகனங்கள் புதுக் குடியிருப்பு பிரதேச சபை வளாகம், சுதந்திரபுரம் விளையாட்டு மைதானம் ஆகியவற் றில் வைத்து இராணுவத்தினரால் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

இந்தநிலையில் அந்த வாகனங்களே திருடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-5.5)

## பஸ் சேவைகளை சீராக நடத்த கலந்துரையாடல்

வவுனியா, ஜுன் 6

வவுனியா, குஞ்சுக்குளம், பாலமோட்டைக்கான இலங்கை போக்குவரத்து பஸ் சேவை மற்றும் தனியார் பஸ் சேவைகளைச் சீரான முறையில் நடத்துவதற்கான கலந்துரையாடலொன்றுகடந்த செவ்வாய்க்கிழமை குஞ்சுக்குளம் கிராம அபிவிருத்திச் சங்கத்தில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் கொண்டக்குளம், சின்னப்பூவரசங்குளம், கோடியகுளம், மகிழங்குளம், இலுப்பைக்குளம், கிழவிக்குளம், பாலமோட்டை, நெளபி கிராமம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 300க்கும் அதிகமான பொது மக்கள் கலந்து கொண்டனர்.

இதில் இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்கள், தனியார் பஸ்கள் என்பன இந்தப் பகுதிகளில் வாழும் மக்களுக்குத் தாமதம் இன்றிச் சீரான சேவையை வழங்க வேண்டும் என்று வவுனியா பிரதேச செயலர் கா.உதயராசா தெரிவித்தார். (ச-402)

# பாரதிபுரம் மக்களை வெளியேற்ற முயற்சி

## அரசியல் பலத்தைப் பிரயோகித்து

வவுனியா, ஜுன் 6

அரசியல் பலத்தைப் பிரயோகித்து, வவுனியா, பாரதிபுரம் மக்களை அங்கிருந்து வெளியேற்ற முயற்சி செய்வது ஏற்றுக் கொள்ள முடியாதது என்று வடமாகாண சபை உறுப்பினர் ம.தியாகராசா தெரிவித்தார்.

பாரதிபுரம் மக்களை அவர் நேரில் சந்தித்துக் கலந்துரையாடிய பின்னரே இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

> அரசியல் பலத்தை அப்பாவி பொதுமக்கள் மீது பிரயோகிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது

போரால் இடம்பெயர்ந்து தற்போது மீள் குடியேறியுள்ள பாரதிபுரம் மக்கள் தமக்கான காணிகள் அற்ற நிலையில் காடுகளை வெட்டி குடியமர்ந்துள்ளனர். இந்த மக்கள் எந்த விதமான அடிப்படை வசதிகளும் அற்ற நிலையில் சொந்தக் காணியாவது தமக்கு இருக்கிறது என்ற நிம்மதியுடன் துன்பத்துக்கு மத்தியிலும் வாழ்ந்து வருகின்றனர்.

ஆனால் அமைச்சர் றிசாத் பதியுதீன், பாகிஸ்தான் தூதர் அடங்கிய குழு, பாரதிபுரம் மக்களின் காணிகளையும் சென்று பார்வையிட்டதுடன் அவர்கள் அங்கிருந்து வெளியேற வேண்டும் என்று அமைச்சர் றிசாத் பதியுதீன் கூறியதாக தெரிவிக்கப்படுகிறது.

விசேட அதிரடிப்படையினருடன் சென்ற அமைச்சர் அந்தப் பகுதி மக்களை அழைத்து குடும்ப விவரங்களைப் பெற்றுக் கொண்டதுடன் அவர்களைப் புகைப்படமும் எடுத்துச் சென்றுள்ளார்.

அதனால் தாம் அச்சத்துடன் வாழ்வதாக பாரதிபுரம் மக்கள் என்னிடம் முறையிட்டுள்ளனர். போர் முடிவடைந்த பின்னர் இவ்விதம் மக்களை அவர்கள் மீள்குடியேறிய பகுதியிலிருந்து வெளியேற்ற முயற்சி செய்வது எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாதது.

அரசியல் பலத்தை அப்பாவிப் பொது மக்கள் மீது பிரயோகிப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. இது கண்டிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

திட்டமிட்ட ரீதியில் தமிழ் மக்களை அச்சுறுத்தி அவர்களை வெளியேற்றும் முகமாக கடந்த காலங்களில் அந்தப் பகுதி மக்களின் பல வீடுகளும் தீக்கிரையாக்கப்பட்டன.

இதன் தொடர்ச்சியாகவே அமைச்சரின் அண்மைய செயற்பாட்டையும் நோக்க வேண்டியுள்ளது.

எனவே பாரதிபுரம் மக்களை வெளியேற்ற ஒரு போதும் நாம் அனுமதிக்கமாட்டோம்- என்றார். (ச-402)

## குடிதண்ணீர் பெறுவதில் சிரமம்

கிளிநொச்சி, ஜுன் 6

கிளிநொச்சி, கல்லாறு கிராமத்தில் குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்வதில் தாம் பெரும் சிரமங்களை எதிர் கொள்ள வேண்டியுள்ளது என்று அப்பகுதி மக்கள் கூறினர்.

கிளிநொச்சி, கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள கல்லாறு கிராமத்தில் தற்போது 243 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இந்தக் கிராம மக்கள் தமக்கான குடிதண்ணீரை வேறு பிரதேசத்திலிருந்தே பெற வேண்டியநிலை காணப்படுகின்றது. (ச-55)


போரால் சேதமடைந்த கிளிநொச்சி, புதுமுறிப்பு பிள்ளையார் ஆலயம் நிர்மாணிக்கப்பட்டு வருகிறதைக் காணலாம். (ச-18)

## மலசலகூடங்களின்றி 1,096 குடும்பங்கள்

### புள்ளி விவரத்தில் தகவல்

முல்லைத்தீவு, துணுக்காய் பிரதேசத்தில் 1,107 குடும்பங்கள் குடிதண்ணீர் வசதிகள் இன்றியும், 1,096 குடும்பங்கள் மலசலகூட வசதிகள் இன்றியும் வாழ்ந்து வருவதாக துணுக்காய்ப் பிரதேச செயலகம் வெளியிட்டுள்ள புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு, துணுக்காய்ப் பிரதேசத்தில் மீள்குடியேற்றத்தின் பின்னரான அபிவிருத்திகள் தொடர்பாகவும் தேவைகள் தொடர்பாகவும் வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய வீட்டுத்திட்டத்தின் கீழ் 456 பயனாளிகளுக்கு வீட்டுடன் கூடிய மலசலகூடங்களும் பிறிதொரு திட்டத்தின் ஊடாக 40 மலசலகூடங்களும் அமைக்கப்பட்டு வருகின்றன என்றும் குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-55)

## கிளிநொச்சி வலயத்தில் ஆசிரியர்கள் இடமாற்றம்

### ஆராய்கிறது வலயக் கல்வி அலுவலகம்

கிளிநொச்சி, ஜுன் 6

கிளிநொச்சி வலயப் பாடசாலைகளில் ஒரே பாடசாலைகளில் 7 ஆண்டுகளுக்கு மேலாக கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களை இடமாற்றம் செய்ய வலயக் கல்வி அலுவலகம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

> 7 ஆண்டுகளாக ஒரே பாடசாலையில் கற்பிப்போரை இடமாற்றத் திட்டம்.

கடந்த ஆண்டின் இறுதியில் வலயத்தின் உள்ளக இடமாற்றத் திட்டத்தின் கீழ் ஒரு தொகுதி ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டனர். எனினும் இடமாற்றம் முழுமையாக செயற்படுத்தப்படவில்லை. அதனையடுத்தே ஒரே பாடசாலையில் 7 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றும் ஆசிரியர்களை இடமாற்றம் செய்ய தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதேவேளை -கிளிநொச்சி மாவட்டத்தை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்ட ஆசிரியர்களை மாவட்டத்தின் கிராமப்புறப் பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்வதற்கான செயற்றிட்டம் தொடர்பாகவும் ஆராயப்பட்டு வருகிறது என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-18)

## சிறுமியை வன்புணர்வுக்கு உட்படுத்தியவர் காவலில்

யாழ்ப்பாணம், ஜுன் 6

சிறுவர் இல்லத்தில் வசித்து வரும் பதின்ம வயது சிறுமியை வன்புணர்வுக்கு உட்படுத்திய இளைஞரொருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு மன்னார் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை முற்படுத்தப்பட்டபோது, அவரை எதிர்வரும் 16 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் ஆனந்தி கனகரட்ணம் உத்தரவிட்டார்.

மன்னார் உப்புக்குளத்தில் அமைந்துள்ள சிறுவர் இல்லம் ஒன்றில் வசித்து வரும் குறித்த சிறுமி தையல் பயிற்சி வகுப்புக்காக மன்னார் மாவட்ட செயலகப் பகுதிக்கு செவ்வாய்க்கிழமை மாலை நடந்து சென்றுள்ளார்.


அந்த நேரம் தலை மன்னார் பிரதான வீதியில் அமைந்திருக்கின்ற பாதணி விற்பனை நிலையத்தில் தொழில்புரிகின்ற குறிப்பிட்ட இளைஞர் குறித்த சிறுமியை பாதணி வாங்க வருமாறு அழைத்துள்ளார். சிறுமி தன்னிடம் பணமில்லை எனக் கூறிய போது பாதணியை பார்த்துத் தெரிவு செய்து விட்டுச் செல்லுமாறும், பணம் கிடைக்கும் போது வந்து வாங்கிக் கொள்ளுமாறும் குறித்த இளைஞர் தெரிவித்துள்ளார்.

அதன்பின்னரே குறித்த சிறுமியை அவர் வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளார். அங்கிருந்து தப்பிச் சென்ற சிறுமி அது தொடர்பாக தையல் பயிற்சி ஆசிரியரிடம் தெரிவித்துள்ளார். அதனையடுத்து சம்பவம் குறித்து மன்னார் பொலிஸ் நிலையப் பெண்கள் சிறுவர் பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டது.

அதனையடுத்து சந்தேகநபரை கைது செய்த பொலிஸார் நேற்றுமுன்தினம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியுள்ளனர். அதன்போதே அவருக்கு விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-4-103)

# டெக்ஸாஸிலுள்ள தமது தொழிற்சாலையை மூடுகின்றனர் மொடோரோலா நிறுவனத்தினர்



இந்த நிறுவனம் லியோவோ நிறுவனத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கவுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மொபைல் சாதனங்கள் உட்பட இலத்திரனியல் சாதன உற்பத்தியில் உலகளாவிய ரீதியில் பெயர் பெற்ற நிறுவனங்களுள் மொடோரோலா நிறுவனமும் ஒன்று.

இந்நிறுவனம் இந்த வருட இறுதியில் டெக்ஸாஸின் போத்வேத் பகுதியில் அமைந்துள்ள தனது தொழிற்சாலையை மூடவுள்ளதாக வோல் ஸ்ரீற் ஜேர்னல் (Wall Street Journal) என்ற சஞ்சிகை தெரிவித்துள்ளது.

மொடோறோலா நிறுவனத்தின் புதிய தயாரிப்பான மொரோ X வடிவமைப்பில் சுமார் 3,800 தொழிலாளர்கள் இங்கு பணியாற்றியதாகவும், இந்த எண்ணிக்கை தற்போது 700 ஆகக் குறைவடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்நிறுவனம் லியோவோ நிறுவனத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கவுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# நவீன வடிவிலான கணினி மேசை



இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக கணினித் தொழில்நுட்பம் பல் வேறு பரிமாணங்களை எட்டி நிற்கின்றது.

இதன் மற்றுமொரு அங்கமாக நவீன கணினி மேசை உருவாக்கப்பட்டுள்ளது.

லியன் லி கணினி டெஸ்க் ஹவுஸஸ் (Lian Li Computer Desk Houses) எனப்படும் இந்த மேசை அனைத்து கணினி வன்பொருள்களையும் தன்னகத்தே கொண்டதாகக் காணப்படுகின்றது.

இதில் இரண்டு வகையான அளவுகள் காணப்படுவதுடன் அவற்றில் ஒன்று 990 டொலர்கள் பெறுமதி உடையதாகவும் மற்றையது 1200 டொலர்கள் பெறுமதி உடையது.

# விரைவில் அறிமுகமாகும் ஐ.ஓ.எஸ்.இயங்கு தளங்கள்

அப்பிள் நிறுவனத்தால் அதன் மொபைல் சாதனங்களுக்காகத் தயாரிக்கப்படும் ஐ.ஓ.எஸ்.இயங்கு தளங்கள் பயனர்கள் மத்தியில் பலத்த வரவேற்பைப் பெற்றுள்ளன.

இந்தநிலையில் அடுத்த வாரம் சன்பிரான்ஸிஸ்கோவில் இடம் பெறவுள்ள 2014 ஆம் ஆண்டுக்கான உலகளாவிய அபிவிருத்தியாளர்களின் மாநாட்டில் ஐஓஎஸ்8 பதிப்பை அறிமுகம் செய்யவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.




இப்புதிய பதிப்பில் Health book app, TextEdit போன்ற வசதிகள் உட்பட மேலும் பல அம்சங்கள் மேம்படுத்தப்பட்ட நிலையில் அறிமுகமாகவுள்ளன.

இதேவேளை-2014 ஆம் ஆண்டுக்கான உலகளாவிய அபிவிருத்தியாளர்களின் மாநாட்டின் ஆரம்ப நிகழ்வுகள் ஆரம்பமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உலகைக் கலக்க வருகிறது அதிநவீன சைக்கிள்





தானியங்கிச் சாதனங்களை உற்பத்தி செய்யும் பிரபல நிறுவனமான கற்றாஜாம ஹொக்யோ தற்போது அதிநவீன இலத்திரனியல் வாகனம் ஒன்றை உருவாக்கியுள்ளது.

நடக்கும் சைக்கிள் (Walking Bicycle) என அழைக்கப்படும் இந்தச் சாதனம் 3 சில்லுகளைக் கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இது அதிக பட்சமாக மணிக்கு 24 கிலோமீற்றர் வேகத்தில் பயணம் செய்யக்கூடியதாகவும், இதில் இணைக்கப்பட்டுள்ள மின் கலத்தின் உதவியுடன் 20 கிலோமீற்றர்கள் தூரம் பயணிக்கும் வல்லமை கொண்டதாகவும் காணப்படுகின்றது.

இதன் எடை 36 கிலோகிராம்களாக அமைந்துள்ளது.

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் ஜப்பானில் முதன் முறையாக அறிமுகம் செய்யப்படவுள்ள இந்த வாகனத்தின் பெறுமதி 3,000 டொலர்கள் ஆகும்.

அதன்பின்னர் படிப்படியாக இது ஏனைய நாடுகளிலும் அறிமுகம் செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உலகை அசத்தும் BCI தொழில்நுட்பம்



வளர்ந்து வரும் இந்த பிறையின் கொம்பியூற்றர் இன்ரர் பேஸ் BCI (brain computer inter face) தொழில்நுட்பம் மனித மூளையை கணனியுடன் இணைக்கும் ஆராய்ச்சியைத் தீவிரமாக மேற் கொண்டு வருகிறது.

இதன்மூலம் இயற்கையான மனித மூளை, செயற்கையாகக் கொடுக்கப்படும் தகவல்களை ஏற்று அதன்படி நடக்க வைக்கப்படுகிறது.

உடல் ஊனமுற்றோருக்கு இது ஒருவரப் பிரசாதம் என்றே சொல்லலாம். இதற்கான முதல் ஆராய்ச்சி 1970 இல் மேற் கொள்ளப்பட்டது. பின்னர் இந்தத் தொழில்நுட்பம் ஒரு படி மேல் சென்று குரங்கில் எலக்ரோட் வைத்து வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டது.

மேலும், இதற்கான ஆரம்பகால படிப்புகள் 1990 இல் எலிகளில் மேற் கொள்ளப்பட்டு ஆராய்ச்சிகள் ஆரம்பித்து சாதனை படைக்க ஆரம்பித்தன.

உதாரணமாக உங்கள் கையில் ஏற்பட்டிருக்கும் தசைச் சிதைவால் மூளையில் இருந்து வரும் தகவலைப் பெற்று கை இயங்க முடியாமல் இருக்கும் போது, அந்தக் கையில் பொருத்தப்பட்டிருக்கும் எலக்ரோட், மூளை இதைத்தான் சொல்கிறது என்று கைகளை மூளையின் தகவலைப் பெற வைக்கிறது.



மருத்துவத்துறை முதல் உலகை அடுத்த நிலைக்கு எடுத்துச் செல்லும் அறிவியல் துறை வரை இந்த தொழில்நுட்பம் எதிர்காலத்தில் புது மாற்றத்தை கொண்டு வரும்.

ஆங்கிலப்படங்களிலும் இந்தத் தொழில்நுட்பத்தைப் பார்த்து வியந்திருப்போம். அத்தனையும் உண்மை தான். நீங்கள் நினைக்கும் ஒன்றை ஒரு கணினி செய்துவிட்டால் அப்பாடா, நேரம் மிச்சம் என்றுதானே நினைக்கத் தோன்றும். அதைத் தான் இந்தத் தொழில்நுட்பம் செய்கிறது.

மூளையில் பொறுத்தப்படும் இந்த சென்ஸ்சார்கள் நரம்பு மண்டலத்தின் அசைவுகளை புரிந்து வைத்திருக்கும். நீங்கள் என்ன நினைப்பீர்கள், எதை நினைப்பீர்கள் என்று அதற்குத் தெரியும். அதற்கான கட்டுப்பாட்டை சென்ஸ்சார் பெற்றபிறகு அதற்கான வேலையை ஆரம்பித்துவிடும்.

கைகள் இல்லாதவர்கள் 100 கிலோ எடையை செயற்கைக் கை மூலம் தூக்குகிறார்கள். கால் இல்லாத ஒருவர் போட்டியில் ஓடி தனது கால்களைக் கட்டுப்படுத்துகிறார், கண்களாலே பேசும் காதலர்களின் பேச்சுகளை ரெட்டினா மூலம் கணினி சொல்கிறது. போலியான விளையாட்டு உலகத்தில், மூளையின் செயற்பாட்டால் அனைத்தையும் கட்டுப்படுத்த முடிகிறது. இவ்வாறு இன்னும் அடுக்கிக் கொண்டே போகலாம். இவை எல்லாம் எப்படிச் சாத்தியமாகிறது என்பதற்கு பின்னால் இந்தத் தொழில்நுட்பம் ஒளிந்திருக்கிறது.

மிரட்டும் அருணால்ட் திரைப்படம் தொடக்கம் உலகைக் கலக்கிய அவதார் திரைப்படம் வரை இந்தத் தொழில்நுட்பம் மறைந்திருக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மை. அதுமட்டுமல்லாது கூகுள் அறிமுகப்படுத்தியிருக்கும் கூகுள் கிலாஸ் கூட இந்தத் தொழில்நுட்பத்தின் பிரதி பலிப்பே என்று சொல்லலாம்.

மருத்துவத்துறை முதல் உலகை அடுத்த நிலைக்கு எடுத்துச் செல்லும் அறிவியல் துறை வரை இந்த தொழில்நுட்பம் எதிர்காலத்தில் புது மாற்றத்தைக் கொண்டு வரும் என்பதை மறுக்க முடியாது.

CMYK

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தொடரும் அவமதிப்புக்கள்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீமை நாடாளுமன்றத்தில் கட்சித் தலைவராக ஏற்றுக்கொள்ள முடியாது என சபையில் முன்வைக்கப்பட்ட கருத்துக்களால் கடும் சர்ச்சை மூண்டிருந்தது.

இந்திய நாடாளுமன்றத் தேர்தலையடுத்து அந்நாட்டின் மனித வளமேம்பாட்டுத்துறை அமைச்சராக பொறுப்பேற்றுள்ள ஸ்ருதி இராணியின் கல்வித்தகைமை பற்றி எழுப்பப்பட்ட கேள்விகளைத் தொடர்ந்து அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கல்வித்தகைமை பற்றி மக்கள் மத்தியில் விவாதங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் நிலையில், எமது நாடாளுமன்றத்திலுள்ள நன்கு கற்றறிந்த, மும்மொழிப்பாண்டித்தியமுள்ள, பழுத்த அரசியல் சாணக்கியமுடையவரும் வழக்கறிஞருமான அமைச்சர் ஹக்கீமிற்கு நேர்ந்துள்ள கதி, உண்மையிலேயே எம்மையெல்லாம் கவலைகொள்ள வைக்கின்றது.

இலங்கை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்திலே அங்கமாகவுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர், அதுவும் நீதி அமைச்சர் பொறுப்பை வகிக்கின்ற அமைச்சர் ஹக்கீமிற்கு, அரசில் இணைந்த நாள் முதலாகவே நெருக்கடிகளும், இவ்வாறான அவமதிப்புக்களும் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றதை நாம் அறிந்துள்ளோம்.

குறிப்பாக, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையிடம் இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகள் பற்றிய பட்டியலைக் கையளித்தமைக்காக அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதியிடமிருந்து மட்டுமன்றி, கடும் போக்கு அமைச்சர்களிடமிருந்தும் மிகவும் கடுமையான சொற்கணைகளை அமைச்சர் ஹக்கீம் எதிர்கொண்டிருந்தார்.

இதனைத் தொடர்ந்துவந்த காலப்பகுதியில் முடிந்தால் அரசாங்கத்தில் இருந்து எம்மை விலக்கட்டும் என்று அமைச்சர் ஹக்கீம் சவால் விடுத்திருந்தமையையும் இங்கே சுட்டிக்காட்டுகின்றோம். தமக்கு இழைக்கப்பட்டுவரும் அவமதிப்புக்களைக் கண்டு அரசில் இருந்து வெளியேறுவதற்கு அவர் ஒருவேளை முன்வந்திருக்கக்கூடும். ஆனால் ஏதோ ஒரு காரணத்திற்காகவோ அன்றேல் காரணங்களுக்காகவோ அவர் இன்னமும் அவமதிக்கும் அரசுடன் ஒட்டிக்கொண்டிருக்க நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கின்றார் என்று எண்ணவே தோன்றுகின்றது.

தாம் அரசில் இருந்து விலகினால் என்ன நடக்கும் என்பதை, கடந்த காலத்தில் அவர் கண்ட அனுபவங்களிலிருந்து கற்றுக்கொண்ட பாடங்கள் நினைவூட்டியிருக்கலாம். அன்றேல் கட்சியின் இருப்பு, அதன் எதிர்காலம் பற்றிய சிந்தனைகள் அவரது அடுத்த நகர்வுகள் குறித்து பல்வேறு கரிசனைகளைக் கொடுக்கக்கூடும்.

ஆனால், அமைச்சர்களோ அன்றேல் நாடாளுமன்ற உறுப்பினர்களோ தாம் சார்ந்துள்ள கட்சிகளுக்கு மேலாக, தாம் பிரதிநிதித்துவம் செய்கின்ற மக்களுக்கே முதலில் விசுவாசமாக இருக்க வேண்டும். தம்மைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற, அதுவும் நன்கு மதிக்கின்ற ஒரு தலைவருக்கு தொடர்ச்சியாக அவமதிப்புக்கள் நேரும்போது அந்த மக்களும் அவமதிப்பின் வலியை உணர்ந்துகொள்வார்கள் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அப்படிச் சிந்திக்கத் தவறுமிடத்து நம் தலைவருக்கு என்ன நடந்துவிட்டது? எவ்வளவு அடிச்சாலும் தாங்குகிறாரே என்று சிந்தித்து ரசித்து விட்டு போவதற்கு இது சினிமா அல்ல.

# மோடி வந்த கையோடு மீண்டும் '13' விஸ்வரூபம்

## தமிழருக்கு அதிகாரங்கள் கிட்டுமா?

சேரலாதன்



அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தின் ஊடாக எந்தவொரு மாகாணத்துக்கும் பொலிஸ் அதிகாரம் வழங்கப்படமாட்டாது. அதிகாரப் பகிர்வுகூட இனக் குழுமத்தின் அடிப்படையில் இடம் பெறாது. இனப்பிரச்சினைக்கான தீர்வை எட்டுவதற்கு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவினால் மட்டுமே முடியும். இவற்றையெல்லாம் இந்தியப் பிரதமர் மோடியுடனான சந்திப்பின்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்ததாக நாடாளுமன்றத்தில் தெரிவித்திருக்கிறார் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ். இதுவரை 13 ஆவது திருத்தம் தொடர்பாகப் பேசுவதே மகாபாவமெனக் கூறி வந்தவர்கள் தற்போது ஒரு படி கீழே இறங்கி வந்து பொலிஸ் அதிகாரம் மட்டுமே வழங்க முடியாதென்று கூறுவது ஏதோவொரு மாற்றத்தின் அறிகுறியாகவே தென்படுகின்றது. அதுவும் மோடியின் பதவியேற்பின் பின்னர் அரசு தரப்பினருக்கு இந்த ஞானோதயம் பிறந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் உருவாக்கப்பட்ட மாகாண சபைகள் இந்த நாட்டைப் பொறுத்த வரையில் வேண்டாத விருந்தாளியாகவே கணிக்கப்படுகின்றன. தமிழர்களின் தாயகப் பிரதேசங்களான வடக்குக் கிழக்கு மாகாணங்களை ஒன்றிணைத்து மாகாண சபையை நிறுவித் தமிழர்களுக்கு அதிகாரத்தை வழங்குவதாக எண்ணிக்கொண்டு இந்தியாவின் ஏற்பாட்டில் வடக்கு கிழக்கு மாகாண சபை அமைக்கப்பட்ட போது அப்போது தமிழர் தரப்பின் பலம் வாய்ந்த சக்தி யாக விளங்கிய விடுதலைப்புலிகள் அதனை முற்றாகவே நிராகரித்துவிட்டனர்.

தமிழர் பிரதேசங்களில் மட்டுமே மாகாண சபை அமைவதா என்ற எண்ணம் பெரும்பான்மையினர் மத்தியில் தோன்றியதால், நாட்டின் ஏனைய பகுதிகளிலும் இவை அமைக்கப்பட்டன. ஆனால் நாட்டின் பொருளாதாரத்தைவிழுங்கும் வெள்ளை யானைகளாகவே இவை விளங்குவதாகக் கூறப்படுவதும் உண்டு.

இலங்கை போன்றதொரு சிறிய நாட்டில் மாகாண சபை முறைமை தேவையற்றது எனக் கூறுவோரும் இல்லாமல் இல்லை.

> நரேந்திரமோடி பிரதமர் பதவியில் அமர்ந்த பின்னர் நிலைமையில் ஏதோ மாற்றமொன்று தெரியாது போன்றதொரு தோற்றப்பாடு உருவாகியுள்ளது. ஆனால் நரேந்திர மோடியையும் விழுங்கி ஏப்பம் விடுவதற்கான முயற்சிகள் திரைமறைவில் இங்கு இடம் பெறாமல் இல்லை. அமைச்சர்கள் சிலரும் தீவிரவாத சிங்கள அமைப்புக்கள் சிலவும் அவ்வப்போது அறிக்கை வெளியிடுவதன் மூலமாகத் தமது எதிர்ப்பை வெளியிட்டு வருவதைக் காண முடிகின்றது.

இந்த நிலையில் வடக்குக் கிழக்கில் வாழ்கின்ற தமிழர்களின்நிலைமை பரிதாபகரமாக மாறியுள்ளது. இந்திய, இலங்கை நாடுகளின் கூட்டு ஒப்பந்தத்தின் மூலமாக இணைக்கப்பட்ட வடக்குக் கிழக்கு மாகாணங்களின் இணைப்பு உயர் நீதிமன்றத் தீர்ப்பொன்றின் மூலமாக பிரிக்கப்பட்டு அந்த இரு மாகாணங்களும் மீண்டும் தனித்தனி மாகாணங்களாக ஆக்கப்பட்டன. தனித்தனி மாகாணசபைகளும் அமைக்கப்பட்டன. இவற்றுள் கிழக்கு மாகாண சபை அரசின் கட்டுப்பாட்டிலும் வடக்கு மாகாண சபை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்டுப்பாட்டிலும் இயங்கி வருகின்றன.

ஆனால் அரசமைப்புக்கான 13ஆவது திருத்தத்தின் பிரகாரம் மாகாண சபைகளுக்கான அதிகாரங்கள் வழங்கப்படாததால் பெயரளவில் மட்டுமே அவை இயங்கி வருகின்றன. அரசின் பிரதிநிதியான ஆளுநரே சகல அதிகாரங்களையும் தமது கைகளில் வைத்துக் கொண்டு மாகாண சபையை நிர்வகித்து வருகின்றார். அங்கு முதல மைச்சர் ஒருவரும், அமைச்சர்களும் உள்ள போதிலும் செயலாற்ற முடியாத நிலையில் அவர்களின் கைகள் கட்டப்பட்டுள்ளன. தனக்குக் கீழ் பணிபுரியும் மாகாண சபையின் பிரதம செயலாளரை நியமிக்கும் அதிகாரம் கூட முதலமைச்சருக்கு இல்லாத பரிதாப நிலையே இங்கு காணப்படுகின்றது.

இந்த நிலையில் மாகாண சபைக்குரிய முக்கிய அதிகாரங்களான காணி, பொலிஸ் என்பன வழங்கப்படாததால் சட்டம், ஒழுங்கைப் பேணுவதிலும் காணி தொடர்பான விடயங்களைக் கையாள்வதிலும் வடக்கு மாகாண சபை பல்வேறு இன்னல்களை எதிர் கொண்டு வருகின்றது. தமிழ் மக்களுக்குரிய காணிகள் கண்முன்னே பறிக்கப்படுகின்ற போது கூட மாகாண சபையால் வேடிக்கை பார்க்கவே முடிகின்றது. மக்கள் தாமாக முன் வந்து தமது காணி களைப் பாதுகாக்க வேண்டிய அவல நிலை காணப் படுகின்றது.

முன்பு ஆட்சியில் இருந்த இந்திய அரசுகள் இவற்றையெல்லாம் கண்டு கொண்டதாகவே தெரியவில்லை. தாம் இலங்கையுடன் செய்து கொண்ட ஒப்பந்தம் சீரழிக்கப்படுவது தொடர்பாக இந்தியா சிறிதளவாவது அக்கறை செலுத்தியிருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்கவே மாட்டாது. இந்தியாவின் பலவீனத்தை நன்றாகவே புரிந்து கொண்ட இலங்கை அரசு அந்த நாட்டின் கண்களுக்குள் விரலைவிட்டு ஆட்டிப் படைக்கும் அளவுக்கு நிலைமை மோசமான கட்டத்தை எட்டியிருந்தது. மன்மோகன் சிங் பிரதமராக இருந்த போது இந்தியாவுக்குச் சென்ற இலங்கை ஜனாதிபதி 13 பிளஸ் என்ற புதியதொரு உறுதிமொழியை வழங்கினார். தாம் 13 ஆவது திருத்தத்துக்கு அப்பாலும் செல்லத் தயார் என்பதையே அவர் இவ்வாறு வெளிக்காட்டினார். 13 என்பதே நடைமுறைப் படுத்தப்படாத நிலையில் அதற்கு அப்பால் ஜனாதிபதி செல்வாரென்பதைத் தமிழ் மக்கள் சிறிதளவும் நம்ப வில்லை. ஆனால் பெரும்பான்மையினர் மத்தியில் பெரும் சலசலப்புக் கிளம்பியது. ஆனால் ஜனாதிபதியால் வழங்கப்பட்ட உறுதிமொழி வழக்கம் போன்று காற்றில் பறக்க விடப்பட்டது. இந்தியாவும் அது தொடர்பாகப் பின்னர் அலட்டிக் கொள்ளவே இல்லை.

ஆனால் நரேந்திரமோடி பிரதமர் பதவியில் அமர்ந்த பின்னர் நிலைமையில் ஏதோ மாற்றமொன்று தெரிவது போன்றதொரு தோற்றப்பாடு உருவாகி யுள்ளது. ஆனால் நரேந்திர மோடியை யும் விழுங்கி ஏப்பம் விடுவதற்கான முயற்சிகள் திரைமறைவில் இங்கு இடம்பெறாமல் இல்லை. அமைச்சர்கள் சிலரும் தீவிரவாத சிங்கள அமைப்புக்கள் சிலவும் அவ்வப்போது அறிக்கைகளை வெளியிடுவதன் மூலமாகத் தமது எதிர்ப்பை வெளியிட்டு வருவதைக் காண முடிகின்றது. அரச தரப்பின் ஆசீர்வாதம் இதன் பின்னணியில் உள்ளதாகவும் அறிய முடிகின்றது. தமிழர்களுக்கு ஒரு துரும்பைக் கூடக் கிள்ளி எறியக் கூடாது என்பதில் இனவாதிகள் விழிப்பாக இருக்கும் வரை அதிகாரம் என்பது தமிழர்களைப் பொறுத்தவரை யில் பகல் கனவாகவே மாறிவிடும்.

தற்போது பொலிஸ் அதிகாரத்தை வழங்க மாட்டோம் எனக் கூறுபவர்கள் காணி அதிகாரம் தொடர்பாக வாயே திறக்கவில்லை. பொலிஸ், காணி அதிகாரங்களை வழங்கக் கூடாது என்பது அவர்களின் அடிமனதில் ஆழமாக வேரூன்றி நிற்கும் போது அவர்களால் காணி அதிகாரம் தொடர் பாக எவ்வாறு வாய் திறக்க முடியும்?

எனவே இந்தியப் பிரதமர் மோடி இந்த விடயத்தில் தீவிரமாக ஈடுபாடு காட்டினால் தான் இலங்கை அரசியல்வாதிகளை வழிக்குக் கொண்டுவர முடியும். ஆனால் இதற்காகப் பல தடைகளை அவர் தாண்டியாக வேண்டும். அவருக்குத் தடை போடுவதற்கு இந்தியாவிலேயே பல சக்திகள் காத்திருக்கின்றன. இவை இலங்கையுடன் மறைமுகத் தொடர்புகளையும் கொண்டுள்ளன. இவையெல்லாம் இலங்கைக்குச் சார்பாகவே உள்ளன. நரேந்திர மோடியின் இராஜதந்திரம் பலிக்குமா அல்லது தோற்கடிக்கப்படுமா என்பதற்குக் காலம்தான் பதில் கூற முடியும்.




# பாதீனியச் செடியின் கொடிய விளைவுகள்

**உலக சுற்றுச் சூழல் தினத்தை முன்னிட்டு 5 ஆம் திகதி முதல் 11 ஆம் திகதிவரை சுற்றுச் சூழல் விழிப்புணர்வு வாரம் வடமாகாணத்தில் அனுஷ்டிக்கப்படுகிறது.**

■ பி.தயாளன்

அமெரிக்க நாட்டில் மெக்சிக்கோ வளைகுடாப் பகுதியில் தோன்றிய பாதீனியச் செடியின் கொடிய விளைவுகள் ஆபிரிக்கா, ஆஸ்திரேலியா, ஆசியாக் கண்டங்களில் அதிகமாக உணரப்பட்டன. அமெரிக்காவிலிருந்து கோதுமைத் தானியங்களோடு பாதீனிய விதைகளும் கலந்து இந்தியாவின் மும்பைத் துறைமுகத்தின் வழியாக 1956 ஆம் ஆண்டு இந்தியாவில் வந்திறங்கின.

பாதீனியப் பூண்டு, சீதேவியார் செங்கழுநீர், செவ்வந்தி போன்ற தாவரங்களின் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு செடி ஆகும். ஒன்றரை மீற்றர் உயரத்துக்கும் மேலாக வளரக் கூடியது. பாதீனியச் செடிகள் மக்கள் பாவனையற்ற இடங்கள், தரிசுநிலங்கள், பயிர்நிலங்கள், குடியிருப்புப் பகுதிகள், பூங்காக்கள், பழத்தோட்டங்கள், சாலையோரங்கள், கரையோரங்கள் என அனைத்து இடங்களிலும் வளர்ந்து வருகின்றன.

பாதீனியச் செடிகள் மிகப்பெரும் எண்ணிக் கையில் பரவி, நெருக்கமாக முளைத்து, நிமிர்ந்து சடைத்து விரைவிலேயே பச்சைக் கம்பளம் விரித்தது போல நிலத்தை மூடிவிடுகின்றன. இதன் தண்டுகள், கிளைகள் மற்றும் இலைகள் உரோமங்களால் மூடப்பட்டிருக்கும். இந்தச் செடி அதிக எண்ணிக்கையிலான பூக்களையும், குறைந்த எடையுடைய விதைகளையும் உற்பத்தி செய்கிறது. அதன் விதைகள் குறைந்த எடை உள்ளதால் காற்றின் மூலம் ஏனைய இடங்களுக்கு எளிதில் விரைவாகப் பரவுகிறது. ஒரு பாதீனியச் செடியானது 2,500 முதல் 5,000 வரையிலான விதைகளை உற்பத்தி செய்கிறது. மேலும், பாதீனிய விதைகள் முளைப்பதற்குத் தேவையான சூழ்நிலைகள் இல்லாதபோது, சாதகமான சூழ்நிலை வரும் வரை 20 ஆண்டுகள் வரை கூட உறக்க நிலையில் கிடந்து முளைக்கக் கூடிய தன்மை வாய்ந்தவை. பாதீனியச் செடி இந்தியாவில் 35 மில்லியன் ஹெக்ரேயர் நிலங்களில் பரவியுள்ளது.



பார்த்தீனியச் செடிகளின் கீழ்ச் செடிகொடிகள் எதுவும் முளைத்து வளர முடிவதில்லை. தண்ணீருக்காகவும், சூரிய ஒளிக்காகவும், வேர்ப்பிடி மண்ணுக்காகவும் செடிகள் போராடிச் சாகின்றன. இவற்றின் மீது பாதீனியச்செடிகள் நஞ்சூட்டி அழிக்கின்றன.

இந்தச் செடி பாதீனியன், அம்புரோசின் போன்ற நச்சுவேதிப் பொருள்களைச் சுரக்கிறது. இந்த நச்சுப் பொருள்களிடம் தாக்குப்பிடிக்க முடியாமல் நமது நாட்டுத் தாவர இனங்கள் அழிந்து விடுகின்றன.

எதற்கும் அடங்காமல் எதனையும் அடக்காமல் பலநூறு ஆண்டுகாலமாக இயற்கைச் சமநிலையில் பெரும் பங்காற்றி வந்த உள்ளூர் தாவர இனங்களின் சாம்பல் மீது நின்று கொண்டு இன்று பாதீனியம் கோலோச்சுகிறது.

பாதீனியச் செடி கால்நடைத் தீவனங்களுக்கு தட்டுப்பாட்டை ஏற்படுத்து கிறது.

வேளாண்மைப் பயிர்களின் வளர்ச்சியைப் பாதிக்கிறது. வேளாண்மை உற்பத்தியில் 30வீதத்தைக் குறைக்கின்றது.

மண்ணில் கசியவிடும் நச்சுப் பொருள்களின் மூலம் பயிர்களின் வளர்ச்சியைத் தாக்குகின்றது.

உழுந்து, பயறு போன்ற பயிர்களின் அருகில் பாதீனியச் செடிகள் வளரும் போது அவை பயிர்களின் வளர்ச்சியை வெகுவாகப் பாதிக்கின் றது.

அவரையினப் பயிர்களின், சிறப்பாக அவற்றின் வேர்களில் இரை சோபியம் பாக்ரீரியாக்களைக் கொண்ட வேர் முடிச்சுகள் காணப்படுகின்றன. இவை, நைட்ரஜன் வாயுவைத் தாவரங்கள் உறிஞ்சக்கூடிய அயனி நிலைக்கு மாற்றித் தருவதுடன், வளிமண்டலத்தில் நைட்ரஜனின் சமநிலையைப் பேணியும் வருகின்றன. பாதீனியச் செடி களின் நஞ்சு இந்த வேர் முடிச்சுகளையும் விட்டு வைப்பதில்லை என தாவரவியல் அறிவியலாளர்கள் எச்சரிக்கின்றனர்.

பாதீனியச் செடிகள் மனிதர்களுக்கும் ஒவ்வாமையை ஏற்படுத்துகின்றன.

இந்தச் செடிகள் பரவியுள்ள இடங் களில் காற்றில் மிதக்கும் மகரந்தங்களும் தம் மீது நச்சுப் பொருள்களை பூசிவைத்துள்ளன. இதனைச் சுவாசிப் பவர்கள் ஆஸ்துமா நோயால் பாதிக்கப் படுகின்றனர். இந்தச் செடியைத் தொடர்ச்சியாகத் தொடுபவர்களுக்கு தோலில் அரிப்பு, தடிப்பு ஏற்படுகிறது.

பாதீனியச் செடிகளால் ஏற்படும் நோய்கள் எந்தவித மருத்துவ சிகிச்சைகளுக்கும் கட்டுப்படுவதில்லை.

பாதீனியச் செடிகள் கலந்த பசுந் தீவனங்களை உண்ணும் கால்நடைகளின் பால் கசப்புத் தன்மைபெறுகிறது.

மேலும், இந்தச் செடிகள் காபனீரொட்சைட் வாயுவை அதிகமாக வெளிவிடுவதால் சுற்றுச் சூழலுக்கு பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

பாதீனியச் செடிகள் பல்லுயிர் பெருக்கத்தை அச்சுறுத்துகிறது. பாதீனியச் செடிகளை அழிப்பதை ஓர் இயக்கமாக நடத்த வேண்டும். அரசுத் துறைகள் யாவும் ஒருங்கிணைந்து செயற்பட்டு பார்த்தீனியச் செடிகள் அழிப்பில் ஈடுபட வேண்டும்.

இந்தச் செடிகளை வேருடன் பிடுங்கி மண்ணுக்குள் புதைப்பதால் அவை மக்கி உரமாகின்றன. உயிரியல் முறையில் பாதீனியச் செடிகளின் இலைகளை விரும்பி உண்ணும் பூச்சிகளை விட்டும் கட்டுப்படுத்தலாம். இவை அதிகம் உள்ள இடங்களில் கேசியா இனத்தைச் சார்ந்த எதிரிச் செடிகளை வளர விட்டும் பரவாமல் தடுக்கலாம்.

நிலத்தை நன்கு உழுது களைகளின்றிப் பண்படுத்தும் போதும் பார்த்தீனியம் செடிகள் வளர வாய்ப்பு இல்லாமற் செய்யலாம். பாதீனியச் செடிகளை கட்டுப்படுத்தும் எளியவழி, சிக்கனமான வழி, அனைவரும் உடனடியாகச் செய்யக் கூடிய வழிமுறை என்னவெனில் ஒருகிலோ உப்பையும், ஒரு லீற்றர் சோப்பு எண்ணையையும் 10 லீற்றர் தண்ணீரில் கலந்து தெளிப்பதாகும். இதனால் மூன்று தினங்களுக்குள் பாதீனியச் செடிகள் வாடி வதங்கி கருகி அழிந்து போகும்.

மக்களிடம் பாதீனியச் செடிகளின் தீமைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி, அவற்றை அழிக்கும் பணியில் ஈடுபட்டு, பயிர்களையும், கால்நடைகளையும், மனிதர்களையும், சுற்றுச் சூழலையும் பாதுகாத்திட வேண்டும்.

## வாசகர் திருமுகம்

## கல்வியிலும் புகுந்து விளையாடும் பணம்

இன்றைய கால கட்டத்தில் சகல மனித தேவைகளுக்கும் பணம் ஒரு கட்டாய தேவையாகக் காணப்படுகின்றது. மனிதனுக்குத் திறமை இருக்கிறதோ! இல்லையோ! அவன் தனது வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்றால் பணம் அவசியமாகத் தேவைப்படுகின்றது. ஆனால் ஏழை மக்களுக்குத் திறமைகள் இருந்து அதை வெளிக்காட்டினாலும் அதற்கும் நாம் ஊதியம் செலுத்த வேண்டி உள்ளது.

இது தனியார் துறையில் மாத்திரமல்ல, அரச சேவையிலும் காணப்படுகின்றது. இதை நான் எழுதுவதற்கு முக்கிய காரணம் ஒரு மாணவி க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் சித்தியெய்தி உயர்தரம் கற்பிக்கும் பாடசாலையில் அனுமதி பெறச் சென்றபோது பாடசாலை நிர்வாகம் (அரச பாடசாலை) 10,000 ரூபா கேட்கிறார்கள். ஒரு குறைந்த தொகை கேட்டாலும் பரவாயில்லை. சரி, இது அவர்களால் செலுத்த முடியுமா? இது தானா நம் நாட்டின் இலவசக் கல்வி? இதைத் தானா கன்னங்கரா எமக்குத் தந்தவர்? அனைத்துக்கும் பணம், பணம் என்றால் நாம் எங்கு போவது? எனவே பாடசாலையில் புதிதாகச் சேர விரும்பும் பிள்ளைகளுக்கும், பெற்றோர்களுக்கும் வேதனையை ஏற்படுத்தாது நல்ல முடிவுகளைப் பாடசாலைகள் எடுக்க வேண்டும்.

உங்கள் பத்திரிகைதான் இவ்வாறான செய்திகளை வெளியிடும் என்பதனால் எனது கவலையை உங்களுக்குத் தெரிவிக்கின்றேன்.

*உண்மையுள்ள கிராமநலன் விரும்பி.*

## எமது பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்குமா?

தாங்கள் பத்திரிகையைத் தினம்தோறும் தவறாமல் வாசிப்பவர்களில் நானும் ஒருவன். சமூகத்தில் நடக்கும் எந்தப் பிரச்சினை ஆனாலும் உண்மை நிலைமையை வழங்குவதில் நீங்கள் தயங்க மாட்டீர்கள். அதோடு நில்லாமல் தீர்வும் கிடைக்க வழி செய்கின்றீர்கள். மகிழ்ச்சி, அந்த வகையில் எனது பிரச்சினை நாங்கள் வன்னியில் நடந்த கொடூர இறுதிப் போரின் பின்னர் முகாமில் வசித்து பின்னர் மானிப்பாய் சங்குவேலியில் உள்ள உறவினர் வீட்டில் வசித்து வருகின்றேன். எங்களுக்கு இதுவரை வீட்டுத்திட்டம் வழங்கப்படவில்லை. ஆனால் பல்வேறு பகுதிகளில் உள்ளவர்களுக்கு (வன்னியிலிருந்து யாழ்ப்பாணம் வந்தவர்களுக்கு) வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. நாங்கள் வந்த நாளிலிருந்து இது தொடர்பாக பலமுறை பலரால் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆனால் பயன் ஏதும் கிடைக்கவில்லை. நாங்கள் பலமுறை கிராமசேவகரிடம் கேட்டபோது உங்களுக்கு "இந்திய வீட்டுத்திட்டம்" பதியப்பட்டுள்ளது எனப் பதில் கூறப்பட்டது. பல தடவைகள் பிரதேச செயலகம் சென்றோம். கடிதங்கள் கொடுத்தோம். பயன் ஏதும் கிடைக்கவில்லை. நாங்கள் அன்றாடம் பசி போக்கவே உழைக்க முடிகின்றது. நாங்கள் உறவினர்களால் வழங்கப்பட்ட சிறு குடிசையிலேயே வசித்து வருகின்றோம். மாரி காலம் தொடங்குவதென்றால் உடல் நடுங்குகின்றது. சிறு பிள்ளைகளுடன் எப்படி வாழ்வது? விஷஜந்துக்களிடம் இருந்து எம்மையும் எமது பிள்ளைகளையும் எப்படிப் பாதுகாப்பது? எங்களைப் போன்ற பலர் இத்தகைய பல பிரச்சினையால் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். என்னுடைய பிரச்சினையையும் என்போன்றவர்களின் பிரச்சினைகளையும் போக்க எமது நிலைமையை உங்கள் பத்திரிகை வாயிலாக வெளிப்படுத்தி உதவி புரியும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

*விக்கினேஸ்வரன்.*

# அமெரிக்கா பறக்கிறார் மோடி ஒபாமாவின் அன்பு அழைப்பால்

## செப்ரெம்பர் மாத இறுதியில் பயணம்

புதுடில்லி, ஜுன் 6
பிரதமர் நரேந்திர மோடி, அமெரிக்க அதிபர் ஒபாமாவின் அழைப்பை ஏற்று, செப்ரெம்பர் மாதத்தில் அமெரிக்காவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

செப்ரெம்பர் மாத இறுதியில் மேற்கொள்ளப்படும் இந்தப் பயணத்தின்போது வெளியுறவு கொள்கையில் முன்னேற்றத்துக்கான பேச்சு நடைபெறும் எனக் கூறப்படுகிறது.

பிரதமர் நரேந்திர மோடியைப் பொறுத்த வரையில், இரு நாடுகளுக்கும் இடையே ஆன வெளியுறவுக் கொள்கைள்



குறித்துப் பேசுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஒபாமாவைப் பொறுத்தவரை இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய இரு தரப்பிலும் மாறாக உள்ள அணுகுமுறையில் மாற்றம் கொண்டுவர மோடியுடன் ஆலோசிப்பார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும், இந்த ஆண்டு இறுதியில் அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடைபெறவுள்ள ஐ.நா. பொதுச் சபை கூட்டத்தின் போதும் இரு நாட்டு தலைவர்களும் சந்தித்துப் பேச உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

## மாவட்ட நிர்வாகங்களை பலப்படுத்துகிறது தி.மு.க

**தி.மு.கவில் அமைப்பு ரீதியாக மாற்றம் கொண்டு வருவதற்காக 6 பேர் கொண்ட குழுவை அக்கட்சித் தலைமை அறிவித்துள்ளது.**

சென்னை, ஜுன் 6
தி.மு.க மாவட்டக் கழக நிர்வாகங்களைப் பலப்படுத்த 6 பேர் கொண்ட குழுவை அமைத்துள்ளதாக அந்தக் கட்சித் தலைமை அறிவித்துள்ளது.

கடந்த 2ஆம் திகதி தி.மு.க உயர்நிலை செயல்திட்ட ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், மாவட்டக் கழக நிர்வாகங்களை எளிமையாக்குவதற்கும், மேலும் வலிமைப்படுத்துவதற்கும் ஏற்ற வகையில் தேவையான சாத்தியக் கூறுகளை ஆய்ந்து முடிவெடுக்கவும், கழகத் தலைமைக்குப் பரிந்துரை செய்யவும், குழு ஒன்றினை அமைப்பது என்றும், அந்தக் குழுவின் பரிந்துரைகள் மீது தலைமைக் கழகம் முடிவெடுத்து அதனையொட்டி முறைப்படி கழகத்தின் அமைப்பு விதிகளில் உரிய திருத்தங்களை மேற்கொள்ளலாம் என்றும் தீர்மானித்தது.

அதன்படி, தி.மு.கவில் அமைப்பு ரீதியாக மாற்றம் கொண்டு வருவதற்காக 6 பேர் கொண்ட குழுவை அக்கட்சித் தலைமை அறிவித்துள்ளது.

குழு உறுப்பினர்கள் விபரம்: பெ.சு. திருவேங்கடம் (கலசப்பாக்கம்), டி.எஸ். கல்யாணசுந்தரம் (திருத்துறைப்பூண்டி), இரா. ராஜமாணிக்கம் (ஒரத்தநாடு), தங்கம் தென்னரசு, கே.எஸ். ராதாகிருஷ்ணன், எஸ்.எல்.டி. சச்சிதானந்தம் (ஈரோடு).

## இந்திய இளம் தூதராக தமிழகச் சிறுவன் தெரிவு

சென்னை, ஜுன் 6
இந்திய நாட்டின் இளம் தூதராகத் திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஸ்ரேநிக் காந்தி என்ற சிறுவன் தெரிவு செய்யப்பட்டுள்ளான்.

ஜப்பானில் வரும் ஜுலை மாதம் 9 ஆம் திகதி நடைபெறவுள்ள கலாசார பரிமாற்ற மாநாட்டில் இந்தியாவின் பிரதிநிதிகளாக ஜுனியர் சேம்பர் இண்டர்நேசனல் அமைப்பின் மூலம் இந்தியா முழுவதும் கர்நாடகா, பஞ்சாப், தெலுங்கானா மற்றும் ராஜஸ்தான் மாநிலங்களைச் சேர்ந்த 5 மாணவர்கள் உட்பட மொத்தம் 6 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்திய நாட்டின் ஜுனியர் தூதர்களாக தேர்வு செய்யப்பட்டுள்ள இவர்களுடன் ஏனைய 24 நாடுகளில் இருந்து தேர்வு செய்யப்பட்டுள்ள குழந்தைகளும் கலந்து கொள்கிறார் கள். இவர்கள் தங்களது நாட்டின் கலாசாரத்தை மாநாட்டில் பிரதிபலிக்க உள்ளனர்.



ஸ்ரேநிக் காந்தி

இது குறித்து மாணவன் ஸ்ரேநிக் காந்தி கூறுகையில், நான் இந்தியாவில் இருந்து தேர்வான மற்ற 5 மாணவர்களுடன் இணைந்து மாநாட்டில் இந்தியாவின் கலாசாரப் பன்முகத்தன்மையை சித்தரிக்கும் ஒரு நடன கலாசார நிகழ்ச்சியை வழங்கவேண்டும்.

மேலும், தற்போது இதற்கான பயிற்சிகளில் எனது தாயார் உதவியுடன் ஈடுபட்டு வருகிறேன் என்றும், இதற்காக ஜப்பானிய மொழி பயின்று வருகிறேன் எனவும் தெரிவித்துள்ளான். (த)

# தமிழகப் பாதிரியாரை உடன் மீட்கவேண்டும்

## மோடிக்கு ஜெயலலிதா கடிதம்

சென்னை, ஜுன் 6
ஆப்கனில் கடத்தப்பட்ட தமிழகப் பாதிரியார் அலெக்சிஸ் பிரேம்குமாரை மீட்க நடவடிக்கை எடுக்கக் கோரி பிரதமர் நரேந்திர மோடிக்கு முதல்வர் ஜெயலலிதா கடிதம் எழுதியுள்ளார்.

அவர் எழுதியுள்ள கடிதத்தில், ஆப்கானிஸ்தானின் ஹெறாத் மாகாண பகுதியில் கல்விச் சேவையில் ஈடுபட்ட தமிழகப் பாதிரியார் அலெக்சிஸ் பிரேம் குமாரை தீவிரவாதிகள் கடத்திச் சென்றதை நீங்கள் அறிவீர்கள். தமிழகத்தின் திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த பாதிரி



ஜெயலலிதா

யார் அலெக்சிஸ் பிரேம்குமார் ஆப்கனில் முகாம்களில் இருக்கும் குழந்தைகளுடன் இருந்த போது கடத்தப்பட்டிருக்கிறார். அவர் கடத்தப்பட்டது அவரது குடும்பத்தாரையும், நண்பர்களையும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

பாதிரியார் பிரேம்குமார், தமிழகத்திலும் பழங்குடியின மக்கள் நலனுக்காக பணியாற்றி இருக்கிறார். தீவிரவாதிகள் பிடியில் உள்ள அலெக்சிஸ் பிரேம் குமார் உயிருக்கு ஆபத்து ஏற்படக் கூடும் என்ற அச்சம் எழுந்துள்ளது. எனவே, பாதிரியாரை தீவிரவாதிகளிடம் இருந்து மீட்கும் விவகாரத்தில் பிரதமர் என்ற முறையில் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். பிரதமர் தலையிட்டால்தான் பாதிரியாரை மீட்க ஆப்கானிஸ்தான் விரைந்து செயல்படும் என்று முதல்வர் ஜெயலலிதா கூறியுள்ளார். (த)

## மக்களவைத் தலைவராக சுமித்ரா மகாஜன் பெயர்

புதுடில்லி, ஜுன் 6
மக்களவைத் தலைவராக பாரதிய ஜனதா கட்சியின் உறுப்பினர் சுமித்ரா மகாஜனைத் தேர்ந் தெடுப்பதற்கு நேற்றுப் பரிந்துரைக்கப்பட்டது.

மக்களவைத் தலைவர் பொறுப்புக்காக, சுமித்ரா மகாஜனின் பெயர் மட்டுமே பரிந்துரைக்கப் பட்டதால், அவர் இன்று வெள்ளிக்கிழமை முறைப்படி தேர்ந்தெடுக்கப்படுவார்.

மக்களவை காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, தம்பிதுரை (அ.தி.மு.க), சுதிப் பண்டோபாத்தியாய் (திரிணமுல் காங்கிரஸ்), மஹ்தாப் (பி.ஜே.டி), முலாயம் சிங் யாதவ் (சமாஜ்வாதி), ஹெச்.டி.தேவகவுடா (மதசார்பற்ற ஜனதா தளம்), சுப்ரியா (தேசியவாத காங்கிரஸ்) முகமது சாலிப் (மார்க்சிஸ்ட்) ஜிதேந்திர ரெட்டி (டி.ஆர்.எஸ்.) ஆகிய எதிர்கட்சித் தலைவர்கள் உட்பட 19 பேர், சுமித்ரா மகாஜனின் பெயரை பரிந்துரைத்தனர்.

சுமித்ரா மகாஜனை பரிந்துரைக்கும் தீர்மானத்தை பிரதமர் நரேந்திர மோடியுடன், பா.ஜ.க மூத்த தலைவர்கள் ராஜ்நாத் சிங், சுஷ்மா சுவராஜ் உள்ளிட்டோரும் முன்வைத்தனர்.

மத்தியப் பிரதேச மாநிலத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர் சுமித்ரா மகாஜன் (வயது-71). மத்தியப் பிரதேசத்தின் இந்தூரில் பிறந்து வளர்ந்தவரான இவர், அதே தொகுதியில் 1989 முதல் தொடர்ந்து எட்டாவது முறையாக மக்களவைத் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளார். முன்னாள் பிரதமர் வாஜ்பாய் தலைமையிலான அமைச்சரவையில் 1999 முதல் 2004 வரை மத்திய இணை அமைச்சராக சுமித்ரா பதவி வகித்துள்ளார். (த)

# நடவடிக்கை எடுத்தால் நான் நீடிக்கமாட்டேன்

## கருணாநிதியை மிரட்டிய ஸ்டாலின்

சென்னை, ஜுன் 6
தேர்தல் தோல்விக்கு காரணமான தி.மு.க மாவட்டச் செயலர்கள் மீது நடவடிக்கை எடுத்தால், பொருளாளர் பதவியில் நான் நீடிக்கமாட்டேன் என்று ஸ்டாலின் தெரிவித்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தி.மு.கவைச் சேர்ந்தவர்கள் இதுபற்றிக் கூறுகையில்; உயர்நிலை செயல் திட்டக் குழு கூடுவதற்கு முன், சென்னையில் செனடாப் சாலையில் உள்ள ஸ்டாலின் வீட்டில், மே 30 ஆம் திகதி ஆலோசனை நடந்துள்ளது.

அதில், ஸ்டாலின் குடும்ப உறுப்பினர்களுக்கு ஆதரவாகச் செயல்படும் மாவட்ட செயலர்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கூடாது என முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

தேர்தல் தோல்விக்கு காரணமாக இருந்த மாவட்ட செயலர்களை, களையெடுக்க வேண்டும் என கருணாநிதி திட்டமிட்டிருந்தார்.



ஸ்டாலின் - கருணாநிதி

குறிப்பாக, அ.தி.மு.கவிலிருந்து வந்து தி.மு.கவில் ஐக்கியமாகி, தற்போது ஆதிக்கம் செலுத்தி வரும் பிரமுகர்கள் சிலர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என கருணாநிதி முடிவெடுத்துள்ளார்.

இந்நிலையில், கருணாநிதி எடுத்துள்ள முடிவை ஸ்டாலினிடம் கூறியதும் அவர் கோபமாக, அவர்களை எல்லாம் விடுவிக்கும்போது, என்னையும் பொருளாளர் பதவியிலிருந்து விடுவித்து விடுங்கள் என்றும், இரண்டாவது முறை கடிதம் தருகிறேன் எனவும் கூறியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும், மாவட்ட செயலாளர்கள் மீது நடவடிக்கை எடுத்தால் அவர்கள், அழகிரி பக்கம் சாயும் ஆபத்து ஏற்பட்டு விடும் என்று ஸ்டாலின் கருத்தையும் தெரியவந்துள்ளது.

இதையடுத்து, மாவட்டச் செயலர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் தீர்மானம் கைவிடப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (த)

# இந்தியப் பெருங்கடலில் விழுந்ததா எம்.எச். 370?

## பரபரப்புத் தகவல் வெளியானது



கோலாலம்பூர், ஜூன் 06
மலேசியாவில் இருந்து புறப்பட்டு மாயமான விமானம், நடுவானில் தீப்பிடித்து எரிந்து இந்தியப் பெருங்கடலில் விழுந்திருக்கலாம் எனப் பரபரப்பு தகவல்கள் வெளியாகியுள்ளன.

மலேசிய விமானத்தைத் தேடும் பணிகள் பல கட்டங்களாக நடைபெற்று வந்த போதிலும், அதைப் பற்றிய எந்த தகவலும் இதுவரை கிடைக்கவில்லை.

இந்த நிலையில், ஆஸ்திரேலியாவிலிருந்து, 4,500 கி.மீ., தொலைவில், இந்தியப் பெருங்கடலின் தென் பகுதியில், விமானம் ஒன்று கடலில் வீழ்ந்தது போன்ற சத்தம், கடலுக்கடியில் நிறுத்தப்பட்டுள்ள கண்காணிப்புக் கருவி ஒன்றில் பதிவாகி இருப்பதாக, ஆஸ்திரேலியா தெரிவித்துள்ளது.

அதே சமயம், கேரளாவில் இருந்து தாய்லாந்துக்குக் கடலில், சொகுசுப் படகில் பயணித்த, பிரிட்டனை சேர்ந்த கத்தரின் என்ற பெண், செம்மஞ்சள் நிறத்தில் தீப்பிடித்த நிலையில், விமானம் ஒன்று கடலில் விழுந்ததைப் பார்த்தேன். அது விமானமாக இருக்கும் என முதலில் நினைக்கவில்லை. இப்போது அது, மாயமான மலேசிய விமானமாகத் தான் இருக்கும் என கருதுகிறேன், என தெரிவித்துப் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார்.

எனினும் இந்த தகவல்கள் எதுவும் உறுதி செய்யப்படவில்லை என கூறப்படுகிறது. (த)

# ஆஸிக்கு ஆள் கடத்திய படகோட்டிகளுக்கு சிறை

பேர்த், ஜூன் 06
இந்தோனேசியாவிலிருந்து ஆஸ்திரேலியாவுக்குஆள்களைக் கொண்டுசெல்லும் வழியில் நூற்றுக்கும் மேற்பட்ட குடியேறிகள் கடலில் மூழ்கி உயிரிழக்கக் காரணமான மனிதக் கடத்தல் நடவடிக்கை ஒன்றுடன் தொடர்புடைய இரண்டு இந்தோனேசியர்களுக்கு நீண்ட சிறைத் தண்டனை அளிக்கப்பட்டுள்ளது.

சிறிய மரப் படகு ஒன்றில் சட்ட விரோதமாக ஆஸ்திரேலியாவுக்கு ஆள்களைக் கொண்டு செல்லும் வழியில் இந்து சமுத்திரத்தில் இந்தப் படகு கவிழ்ந்தது.

அந்த படகோட்டிகளுக்கே ஆஸ்திரேலியாவின் பேர்த் நகர நீதிமன்றத்தில் தண்டனை அளிக்கப்பட்டுள்ளது. (த)

# ஆயுதத் தடை ஒப்பந்தம் 8 நாடுகள் கையெழுத்து

## ஆஸ்திரேலியாவும் இணைந்தது

நியூயோர்க், ஜூன் 06
சட்டவிரோத ஆயுத வர்த்தகத்தைக் கட்டுப்படுத்தும் வகையிலான ஐ.நா.வின் ஒப்பந்தத்தில் ஆஸ்திரேலியா, ஆஸ்திரியா மற்றும் புர்கினாபாஸா உள்ளிட்ட மேலும் 8 நாடுகள் கடந்த செவ்வாய்க்கிழமை கையெழுத்திட்டன.

இந்த ஒப்பந்தத்தில் நாடுகள் கையெழுத்திடத் தொடங்கி, ஓராண்டு ஆகியுள்ள நிலையில் இதுவரையில் 40 நாடுகள் கையெழுத்திட்டுள்ளன. இன்னும் 10 நாடுகள் கையெழுத்திடும் பட்சத்தில் இந்த ஒப்பந்தம் செயற்பாட்டுக்கு வரும்.

> “கையெழுத்திடத் தொடங்கி, ஓராண்டு ஆகியுள்ள நிலையில் இதுவரையில் 40 நாடுகள் கையெழுத்திட்டுள்ளன. இன்னும் 10 நாடுகள் கையெழுத்திடும் பட்சத்தில் இந்த ஒப்பந்தம் செயற்பாட்டுக்கு வரும்.

இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் நாடுகள், தேசிய அளவிலான ஆயுத வர்த்தகம் மற்றும் ஆயுத இடைத்தரகர்களைக் கட்டுப்படுத்தும் வகையிலான விதிமுறைகளை ஏற்படுத்த வேண்டும்.

சர்வதேச அளவில், ரூபா 35 லட்சம் கோடி முதல் ரூபா 50 லட்சம் கோடி வரையில் சட்ட விரோத ஆயுத வர்த்தகம் நடைபெறுவதாகக் கூறப்படுகிறது. (த)



சிரியாவின் புதிய ஜனாதிபதியாக பஷார் அல் அசாத் மூன்றாவது முறையாக மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். ஜனாதிபதி தேர்தலில் 88.7 வீத வாக்குகளை பஷார் அல் அசாத் பெற்றுள்ளதாக அந்த நாட்டு நாடாளுமன்றச் சபாநாயகர் அறிவித்துள்ளார். அரசின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் மாத்திரம் தேர்தல் நடத்தப்பட்டிருந்ததுடன், கிளர்ச்சியாளர்கள் வசமுள்ள வடக்கு மற்றும் கிழக்குப் பிராந்தியங்களில் வாக்களிப்பு இடம்பெறவில்லை. (த)

# ரஷ்யா மீது தடை விதிக்க ஜி 7 தயார்

பிரஸல்ஸ், ஜூன் 06
பெரிய பொருளாதாரங்களைக் கொண்ட ஏழு நாடுகளின் கூட்டமைப்பான ஜி7 அமைப்பின் உச்சிமாநாடு பிரஸல்ஸில் நடந்துவருகின்ற நிலையில், அதன் இரண்டாம் நாள் கூட்டத்துக்காகச் சந்திக்கும் மேற்குலகத் தலைவர்கள் உக்ரைனில் ஏற்பட்டுள்ள நெருக்கடி பற்றி கவனம் செலுத்தவுள்ளனர்.

கிழக்கு உக்ரைனின் ஸ்திரத் தன்மையைக் குலைக்கும் விதமாக ரஷ்யா இனிமேலும் நடந்துகொள்ளுமானால், அதன் மீது கூடுதல் தண்டனைத் தடைகளை விதிப்பதற்கு மேற்குலக நாடுகள் தயாராக உள்ளன.

இந்தச் சந்திப்பை அடுத்து ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினுக்கும், பிரிட்டன், பிரான்ஸ் தலைவர்களுக்கும் இடையில் பரிஸ் நகரில் சந்திப்பொன்று நடக்கவுள்ளது. வாய்ப்பிருந்தால் ஜேர்மனியின் தலைவரும் இதில் கலந்துகொள்வார்.

பேச்சுக்களின் விளைவாக உக்ரைன் தொடர்பில் இருந்து வரும் முறுகல்நிலை கணிசமாகத் தணிய வாய்ப்புள்ளது என பிரஸல்ஸிலுள்ள பி.பி.சி. செய்தியாளர் கூறுகிறார்.

கிரைமியாவை ரஷ்யா தன்னோடு இணைத்துக்கொண்ட நிலையில் ஜி 7 குழுவிலிருந்து வெளியேற்றப்படதன் பின்னர் நடக்கின்ற முதல் உச்சி மாநாடு இதுவாகும். (த)

# உயரத்திலிருந்து விழுந்த பெண்ணின் உடலை ஊடுருவிய இரும்புக் கோல்



பீஜிங், ஜூன் 06
தென்சீனாவின் ஜியாங் ஸி மாநிலத்தில் செங் எனும் கிராமத்தைச் சேர்ந்த வுஸிங் ஸியான் (வயது-42)என்ற பெண் 20 அடி உயரத்திலிருந்து இரும்புக் கோலொன்றில் விழுந்து அதிசயத்தக்க வகையில் உயிர் பிழைத்துள்ளார்.

நிர்மாணப் பணியாளரான அவர் நிர்மாணத் தளமொன்றில் பணியாற்றிய வேளையிலேயே அவர் நின்றிருந்த மரத்தாலான தளம் உடைந்ததால் கீழே விழுந்துள்ளார்.

இதன்போது இரும்புக் கோல் அவரது தொடை, வயிறு, மார்பு என்பவற்றினூடாக கழுத்து வரை துளைத்துச் சென்றுள்ளது. மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட வுஸிங் ஸியானுக்கு 5 மணிநேர அறுவைச் சிகிச்சையை மேற்கொண்டு அவரது உடலை துளைத்திருந்த இரும்புக்கோலை மருத்துவர்கள் வெற்றிகரமாக அகற்றியுள்ளனர். (த)

# அமெ. சிப்பாய்க்கு பதிலாக 5 தலிபான்கள் விடுவிப்பு

காபூல், ஜூன் 06
ஆப்கானிஸ்தானில் தலிபான் அமைப்பினரால் கைது செய்யப்பட்டிருந்த அமெரிக்கச் சிப்பாய் பாவே பெர்க்தாலை, அந்த அமைப்பினர் கடந்த சனிக்கிழமை விடுதலை செய்தனர்.

இது தொடர்பான வீடியோ கடந்த புதன்கிழமை வெளியிடப்பட்டது. பாவே பெர்க்தாலை விடுவித்ததற்குப் பதிலாக, அமெரிக்கா கைதுசெய்து வைத்திருந்த 5 தலிபான் தீவிரவாதிகள் முன்னதாக விடுவிக்கப்பட்டனர்.

அமெரிக்கச் சிப்பாயை ஒப்படைக்கும் இந்த நடவடிக்கை தொடர்பாகத் தலிபான் அமைப்பு 17 நிமிடங்கள் ஓடக்கூடிய வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளது.

ஹெலியில் வந்திறங்கிய அமெரிக்க வீரர்கள், வெள்ளைக் கொடியுடன் நின்று கொண்டிருந்த தலிபான் தீவிரவாதிகளிடமிருந்து பாவே பெர்க்தாலை மீட்டுச் செல்லும் காட்சி அதில் பதிவாகியுள்ளது. அப்போது, பாவே பெர்க்தாலை பார்த்து, மீண்டும் ஆப்கானிஸ்தானுக்கு வராதே. அடுத்த முறை உன்னை யாரும் விடுவிக்கமாட்டார்கள் என்று தலிபான் தீவிரவாதிகள் அறிவுரை கூறிய காட்சியும் அதில் இடம்பெற்றுள்ளது.

> “வெள்ளைக் கொடியுடன் நின்று கொண்டிருந்த தலிபான் தீவிரவாதிகளிடமிருந்து பாவே பெர்க்தாலை மீட்டுச் செல்லும் காட்சி அதில் பதிவாகியுள்ளது. அப்போது, பாவே பெர்க் தாலை பார்த்து, மீண்டும் ஆப்கானிஸ்தானுக்கு வராதே. அடுத்த முறை உன்னை யாரும் விடுவிக்கமாட்டார்கள் என்று தலிபான் தீவிரவாதிகள் அறிவுரை கூறிய காட்சியும் அதில் இடம் பெற்றுள்ளது.

பாவே பெர்க்தாலுக்கு பதிலாக அமெரிக்காவின் குவாண்டனாமோ சிறையிலிருந்த 5 மூத்த தலிபான் தீவிரவாதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

ஓர் அமெரிக்கச் சிப்பாயை விடுவித்து, அதற்குப் பதிலாக 5 தலிபான் தீவிரவாதிகளைக் குவான்டனாமோ சிறையிலிருந்து மீட்டது தமக்குக் கிடைத்த மிகப்பெரிய வெற்றி என்று தலிபான் அமைப்பினர் கூறியுள்ளனர். (த)

# அழகாக இருக்கும் ஆபத்தான நகரம்



பேர்ளின், ஜூன் 06
ஜேர்மனியின் அபாயகரமான நகரம் எது என்பதில் பிராங்ஃபர்ட் முதலிடம் பிடித்துள்ளதாகப் புள்ளிவிவரத்தில் தெரிய வந்துள்ளது.

ஜேர்மனியின் ஆபத்தான மற்றும் பாதுகாப்பான நகரங்கள் குறித்து புள்ளி விவர தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளது.

ஜேர்மனியில் கடந்த 2013ஆம் ஆண்டில் நடந்த குற்றங்களின் புள்ளிவிவரங்கள் நேற்று வெளியிடப்பட்டதில், சுமார் 6 மில்லியன் குற்றங்கள் நடந்ததாக தெரியவந்துள்ளது.

இதில் குற்றங்கள் அதிகம் நடக்கும் நகரங்களின் வரிசையில் முதல் இடத்தைப் பெற்ற பிராங்போர்ட் நகரில் மட்டும் 16,292 குற்றங்கள் நடந்திருப்பதாகப் புள்ளி விவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனைதொடர்ந்து இரண்டாவது இடத்தில் கொல்னெ நகரமும், பேர்ளின் மற்றும் டுசல்டார்ப் மூன்றாவது மற்றும் நான்காவது இடங்களையும் பிடித்துள்ளன.

மேலும் பாதுகாப்பான நகரங்களில் முதலிடத்தை பிடித்துள்ள பாவேரியாவில் 5,073 குற்றங்கள் நடந்துள்ளதாகவும், இரண்டாவது இடத்தை பிடித்துள்ள பெடன் வுர்டென்பெர்க் நகரத்தில் 5,450 குற்றங்கள் நிகழ்ந்ததாகவும் கூறப்பட்டுள்ளது. (த)

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: வீட்டுக்குத் தேவையான வசதிகள் செய்து தருவீர்கள். எல்லா வகையிலும் நன்மையையும் மகிழ்ச்சியையும் தரும். திறமையான பேச்சின் மூலம் காரியவெற்றி உண்டாகும். எதிர்பார்த்த பணவரவு இருக்கும். பொறுப்புகள் அதிகரிக்கும்.

**இடபம்**: சோம்பல் இல்லாமல் சுறுசுறுப்புடன் இருப்பீர்கள். எதிர்பார்த்த காரியங்கள் மனதுக்குத் திருப்தி அளிக்கும் விதத்தில் நடந்து முடியும். கடன் சுமை குறையும். எதிர்ப்புகள் அகலும். எதையும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்துச் செய்யத் தோன்றும்.

**மிதுனம்**: யாருக்காவது உத்தரவாதம் தரும்போது கவனமாக இருப்பது நல்லது. சொன்ன சொல்லைக் காப்பாற்றப் பாடுபட வேண்டி இருக்கும். தொழில், வியாபாரத்தில் கடினமான முயற்சிக்குப் பிறகு எதிர்பார்த்த லாபம் வந்து சேரும். போட்டிகள் குறையும்.

**கடகம்**: வாழ்க்கைத் துணையின் ஆலோசனை உங்கள் முன்னேற்றத்துக்கு உதவும். எதிர்பாராமல் ஏற்படும் குடும்பச் செலவைச் சமாளிக்கத் தேவையான பண உதவியும் கிடைக்கும். நண்பர்கள், உறவினர்கள் மூலம் தேவையான உதவிகளும் கிடைக்க பெறுவீர்கள்.

**சிங்கம்**: அடுத்தவர்களுக்கு உதவி செய்யும்போது கவனம் தேவை. எதையும் ஒருமுறைக்கு இருமுறை யோசித்துச் செய்வது நல்லது. முயற்சிகள் வெற்றி பெறும். மனதில் அமைதி உண்டாகும். பொதுக் காரியங்களில் விருப்பம் அதிகரிக்கும்.

**கன்னி**: அறிவுத் திறன் கூடும். இனிமையான பேச்சின் மூலம் பலரது உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள். செல்வம் சேரும். எதிர்ப்புகள் அகலும். உங்கள் செயல்களுக்கு இருந்த தடை நீங்கும். தொழில், வியாபாரம் தொடர்பான காரியங்களில் சாதகமான பலன் கிடைக்கும்.

**துலாம்**: பலவகை முன்னேற்றங்களும் உண்டாகும். தேவையான பண உதவியும் கிடைக்கப் பெறுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு எதையும் சாதிக்கும் திறமையும் சாமர்த்தியமும் உண்டாகும். தேவையற்ற இடமாற்றம் உண்டாகலாம்.

**விருச்சிகம்**: மற்றவர்களுக்காக பரிந்துபேசும்போதும் அவர்களுக்கு உதவிகள் செய்யும்போதும் கவனமாக இருப்பது நல்லது. வாகனங்களில் செல்லும்போது கவனம் தேவை. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். அறிவுத் திறமை அதிகரிக்கும்.

**தனுசு**: இனிமையான பேச்சின் மூலம் எதிலும் வெற்றி கிடைக்கும். தேவையான பண உதவியும் எதிர்பார்க்கலாம். திறமையாகச் செயற்பட்டு பாராட்டுகள் கிடைக்கப் பெறுவீர்கள். உத்தியோகத்தில் முன்னேற்றம் காணப்படும். எதிலும் நன்மை உண்டாகும்.

**மகரம்**: எந்தக் காரியத்தையும் தீர ஆலோசித்து அதில் ஈடுபடுவது நல்லது. எல்லாக் காரியங்களும் முன்னேற்றமாக நடக்கும். திறமை வெளிப்படும். பல வகையிலும் முன்னேற்றம் உண்டாகும். சொத்துத் தொடர்பான விடயங்களில் இழுபறியான நிலை காணப்படும்.

**கும்பம்**: தொழில், வியாபாரம் தொடர்பான காரியங்களில் தாமதப் போக்குக் காணப்படும். விரிவாக்கம் தொடர்பான முயற்சிகள் இழுபறியான நிலையில் இருந்து பின்னர் முடியும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் பயணம் செல்ல வேண்டி இருக்கும்.

**மீனம்**: எந்த ஒரு விடயத்திலும் ஈடுபடும் முன்பு தயக்கம் ஏற்பட்டு பின்னர் தெளிவு உண்டாகும். குடும்பத்தில் தீடீர் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். இழுபறியாக இருந்த காரியங்கள் முடிவுக்குவரும். புதிய தொடர்புகளால் லாபம் கிடைக்கப் பெறுவீர்கள். இடமாற்றம் ஏற்படலாம்.

## நாளை

**வைகாசி-24 சனிக்கிழமை | 07.06.2014**

திதி: நவமி பி.ப.01.46 வரை
நட்சத்திரம்: உத்தரம் பி.ப.01.05 வரை
சுபநேரம்: 02.52-04.22 வரை
இராகுகாலம்: 08.52-10.22 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....




### செயல் முறை வேதாந்தம் -4

ஐரோப்பாவில் பொருளும், அதன் குணத்தைப் பற்றியும் ஏற்பட்ட விவாதம் கிட்டத்தட்ட இதைப் போன்றதே என்பது பற்றி உங்களுக்கு நான் முன்பே கூறி இருக்கிறேன். அவர்களுள் ஒரு பிரிவினர் குணங்களுக்குப் பின்னால் பொருள் ஒன்று இருக்கிறது என்றும், குணங்கள் அதையே சார்ந்திருக்குமென்றும் கூறுகிறார்கள்.

மற்றொரு பிரிவினரோ, பொருள் என்ற ஒன்றே தேவையில்லை, ஏனெனில் குணங்கள் தாமாகவே இருக்க முடியும் என்கின்றனர். ஆன்மாவைப் பற்றிய மிகப் பழமையான கருத்து தன்னிலை ஒற்றுமையை (Self-identity) அடிப்படையாகக் கொண்டதே 'நானே நான்' என்பதை அதாவது, நேற்றைய நானும் இன்றைய நானும் ஒன்றே; இன்றைய நானே நாளைய நானுமாகும்; உடலில் எத்தனையோ மாறுதல்கள் ஏற்பட்டாலும் நான் அதே நான் தான் என்று நம்புகிறேன், இது எல்லைக்குட்பட்ட ஆனால் பூரணமான தனிப்பட்ட ஆன்மாவை நம்பும் பிரிவினரின் முக்கிய நிலைப்பாடாக இருக்கலாம்.

## 560 ஒளியாண்டுகள் தூரத்தில் பூமி போன்ற இராட்சத கோளம்



மெகா எர்த் என்று சொல்லக் கூடிய, இராட்சத பூமி ரக கோளங்கள் பேரண்டத்தில் காணப்படுவதாக வானியல் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

பூமியைப் போலவே அழுத்தமான மேற்பரப்பை இந்தக் கோளங்கள் கொண்டிருந்தாலும், பூமியைவிடப் பல மடங்கு பெரிதானவை இவை என்று அவர்கள் கூறுகின்றனர்.

பூமியை விட 17 மடங்கு எடை கூடிய கோளம் ஒன்று தொலை தூரத்து நட்சத்திரம் ஒன்றைச் சுற்றி வலம் வருவது கண்டு பிடிக்கப்பட்டுள்ள நிலையில், இந்தப் புதிய ரக கோளங்களை வகைப்படுத்த வேண்டிய அவசியம் எழுந்துள்ளது என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள இராட்சத கிரகத்துக்கு கெப்லர் 10 சி என்று பெயரிடப்பட்டுள்ளது.

பூமியிலிருந்து 560 ஒளியாண்டுகள் தூரத்தில் இருக்கின்ற நட் சத்திரம் ஒன்றைச் சுற்றி இந்தக் கிரகம் வலம் வருகின்றது.

இவ்வளவு அதிகமான எடை ஒரு கிரகத்துக்கு வருமானால், அது சுற்றுவட்டாரத்திலுள்ள அனைத்து ஹைட்ரஜன் அணுக்களையும் ஈர்த்து ஜூபிடர் அதாவது வியாழன் கிரகம்போல வாயுக் கிரகமாகவோ, நெப்டியூன் போல பனிக்கட்டிக் கிரகமாகவோதான் இருக்கும் என்று விஞ்ஞானிகள் கருதி வந்தனர்.

ஆனால் அவர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தும் விதமாக கெப்லர் 10 சி, அழுத்தமான மேற்பரப்பைக் கொண்டுள்ளது. பூமியை விட இரண்டு மூன்று மடங்கு விட்டம் கொண்டுள்ள இந்தக் கிரகம் 17 மடங்கு எடையைப் பெற்றுள்ளது என்றால், இந்தக் கிரகம் பூமியை விட அடர்த்தியானது என்றே தெரிய வருகிறது.

## சுடோக்கு எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 7 | | 8 | | | | 4 | |
| 9 | 4 | 5 | | | | | | 1 |
| | | 2 | | | 4 | 6 | 9 | 7 |
| | | | | | | | 1 | |
| 6 | 9 | | 1 | 2 | 3 | | 7 | 8 |
| | 3 | | | | | | | |
| 4 | 2 | 3 | 6 | | | 1 | | |
| 8 | | | | | | 7 | 3 | 2 |
| | 1 | | | | 9 | | 6 | 4 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 1 | 8 | 4 | 2 | 6 | 5 | 3 | 9 |
| 4 | 2 | 5 | 7 | 3 | 9 | 8 | 6 | 1 |
| 3 | 9 | 6 | 1 | 8 | 5 | 2 | 7 | 4 |
| 9 | 8 | 7 | 2 | 4 | 1 | 6 | 5 | 3 |
| 1 | 6 | 3 | 8 | 5 | 7 | 4 | 9 | 2 |
| 2 | 5 | 4 | 9 | 6 | 3 | 7 | 1 | 8 |
| 8 | 3 | 1 | 6 | 7 | 4 | 9 | 2 | 5 |
| 6 | 4 | 9 | 5 | 1 | 2 | 3 | 8 | 7 |
| 5 | 7 | 2 | 3 | 9 | 8 | 1 | 4 | 6 |

CMK

# சிறுபான்மையினரின் உரிமைக்குரலை அடக்க முயல்கிறது ஐ.தே.க

## சபையில் நீதி அமைச்சர்

கொழும்பு.ஜூன் 6

தேர்தல் காலங்களில் மட்டும் சிறுபான்மை இனக் கட்சிகளுடன் இணைந்து நல்லுறவுகளை ஏற்படுத்திக் கொள்ளும் ஐ.தே.கட்சி, அந்த சிறுபான்மை இனக் கட்சிகள் உரிமைகளுக்காக குரல் கொடுக்கும் போது அதனை அடக்குமுறைக்கு உள்ளாக்குகின்றது என்று ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.



ஹக்கீம்

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேர்தல்கள் நடைபெறும் காலங்களில் மட்டும் சிறுபான்மைக் கட்சிகளுடன் ஐ.தே. கட்சி நல்லுறவுகளை ஏற்படுத்திக் கொள்கின்றது.

ஆனால், சிறுபான்மை இனக் கட்சிகள் மற்றும் அதன் தலைவர்கள் தமது உரிமைகளுக்காக குரல் கொடுக்கும் போது அதனை அடக்குமுறைக்கு உள்ளாக்கும் முயற்சிகளை மேற்கொள்கின்றது. இது மிகவும் மன வேதனையளிக்கும் விடயமாகும்.

தம்புள்ள பள்ளிவாசல் பிரச்சினையென்பது ஒரு பொதுப் பிரச்சினையாகும். ஆனால், அந்தப் பொதுப் பிரச்சினையை மூடி மறைத்து குழிதோண்டிப் புதைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன தம்புள்ளயிலுள்ள ஒரு குறிப்பிட்ட குழுவினருடன் மட்டும் பேச்சுக்களை நடத்திவிட்டு அங்குள்ள பள்ளிவாசலை அகற்றுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அந்தப் பள்ளிவாசலை இருக்குமிடத்திலிருந்து அகற்றுவதற்கு பௌத்த பிக்குவுடன் பேச்சுவார்த்தைகளை நடத்திய குழுவினர் யார்?

அவ்வாறு பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு இக்குழுவினருக்கு அதிகாரத்தை யார் கொடுத்தார்கள்? எனவே, இவ்விடயம் தொடர்பில் இந்தச் சபையில் எனது கடும் ஆட்சேபனையை தெரிவிக்கின்றேன்-என்றார். (ச)


## ஒன்பதாவது நினைவலைகள்

மலர்வு
19.07.1952

உதிர்வு
06.06.2005

அமரர் முத்து
கதிரமலை (செல்லக்கிளி)
(கிருபா கிறேசர் உரிமையாளர்)



பாசத்தில் தந்தையாகி
பரிவினிலே தாயுமாகி
நேசத்தில் குழந்தையாகியெம்
நெஞ்சமெல்லாம் நிறைந்தவரே
பார் வியக்கவோர் நல்வாழ்வை
சீர்சிறக்க வாழ்ந்திருந்து
ஓர் நொடியில் இவ்வுலகை விட்டே
ஓடிப்போனதென்ன?

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வாழும் வழியை எமக்குப் புகட்டி
தெய்வத்துள் தெய்வமாய் உறைந்து
செய்தவப் பயன் பெற்ற அப்பாவே!
ஆண்டுகள் ஒன்பது அல்ல ஆயிரம் கடந்தாலும்
ஆறாது உங்கள் பிரிவுத்துயர்..........

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

விளையாட்டரங்கு வீதி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

மனைவி,
பிள்ளைகள்.

(48758)(22.3.6)


# ஜெயலலிதாவின் கோரிக்கை நாட்டின் அமைதிக்குப் பாதிப்பு

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் குற்றச்சாட்டு

கொழும்பு.ஜூன் 6

தனித் தமிழீழத்துக்கான அடிக்கல்லை ஜெயலலிதா போட்டுவிட்டார். இனி சர்வதேச அமைப்புகள் தனி ஈழத்தை பெற்றுக்கொடுக்கும் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.

ஜெயலலிதாவின் கோரிக்கை இலங்கையில் அமைதியைச் சீரழிக்கும் வகையில் அமைந்துள்ளது. இது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் குறிப்பிட்டுள்ளது.



குணதாச அமரசேகர

ஈழத்துக்கான பொது வாக்கெடுப்புக்கு ஐ.நா.வை இந்தியா வலியுறுத்த வேண்டும் என்ற ஜெயலலிதாவின் கோரிக்கை தொடர்பில் அந்த அமைப்பின் தலைவர் குணதாச அமரசேகர இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கைப் பிரித்து தனி ஈழத்தை பெற்றுக் கொடுக்கும் முயற்சியை தமிழ்நாட்டு முதல்வர் ஜெயலலிதா மேற்கொண்டுள்ளார்.

வடக்கையும் தமிழ்நாட்டையும் இணைக்கும் ஆரம்ப அடிக்கல்லாகவே இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடனான பேச்சு அமைந்துள்ளது.

இன்று ஜெயலலிதா ஆரம்பித்து வைத்ததை இனிமேல் சர்வதேச அமைப்புகளும், புலம் பெயர் விடுதலைப்புலி அமைப்புகளும் நிறைவேற்றி வைக்கும்.

அதேபோல் இந்த அனைத்துக்கும் பின்னணியில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பும், வடமாகாண முதல்வர் சி.வி.விக்கினேஸ்வரனும் உள்ளனர்.

அவர்களே தமிழ்நாட்டைத் தூண்டிவிட்டு வடக்கை தனி நாடாக மாற்றியமைக்க முயற்சிக்கின்றனர். இதனை நாம் கண்டிக்கின்றோம்.

இலங்கை விடயத்தில் தலையிடும் உரிமை இந்தியாவுக்கோ ஏனைய சர்வதேச நாடுகளுக்கோ கிடையாது.

இலங்கைத் தமிழர்கள் விடயத்தில் அக்கறைப்பட வேண்டிய அவசியமும் இந்தியாவுக்கு இல்லை. போரின்போது ஆயுத விற்பனையை செய்து தீவிரவாதத்தை வளர்த்த இந்தியா தற்போது தமிழர்களுக்காக குரல் கொடுக்கின்றது -என்றார். (ஏ)


# மாவட்டசெயலகம், யாழ்ப்பாணம் கேள்வி அறிவித்தல்

தவிசாளர் பெறுகைக்குழு மாவட்ட செயலகம் சார்பாக அரசாங்கஅதிபர்/மாவட்ட செயலரால் **யாழ் மாவட்டச் செயலக நான்கு மாடிக் கட்டட நிர்மாணம் பகுதி -V சங்கானைப் பிரதேச மேலதிக நிர்வாகக் கட்டட நிர்மாணம் பகுதி-I** வேலைக்காக தகைமையுடையோரிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக்கேள்விகள் கோரப்படுகின்றன.

1. விலைக் கேள்வியானதுதேசியபோட்டிவிலைக்கேள்வியின் மூலம் நடத்தப்படும்.
2. தகைமைகள் பற்றியதேவைப்பாடுகள் விலைக்கேள்விஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
3. ஆர்வமுள்ள தகைமையுடைய விலைக் கேள்வியாளர்கள் நிர்வாகக் கிளை.மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 09.06.2014தொடக்கம் காலை 9.00 மணியிலிருந்துமாலை 3.00 வரை விலைக் கேள்வி ஆவணங்களைப் பரிசோதனை செய்யலாம் என்பதுடன் உதவி மாவட்ட செயலாளர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் (தொலைபேசி இல.021 222 2771) அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
4. விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை நிர்வாகக் கிளை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து 09.06.2014முதல் 27.06.2014 வரை காலை 9.00 மணியிலிருந்து மாலை 3.00 வரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான 1000/= கட்டணமாக செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
5. மூடி சீல் வைக்கப்பட்ட விலைக்கேள்விகள் யாவும் தவிசாளர் பெறுகைக்குழு.மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 30.06.2014 திகதியன்றுபி.ப 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும். நேரடியாக ஒப்படைப்பவர்கள் நிர்வாகக் கிளை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலையின் பெயர் மற்றும் கேள்வி இலக்கத்தை தபாலுறையின் இடதுமேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் யாவும் மேல் குறிப்பிடப்பட்ட முகவரியில் நேரடியாக வருகைதர விரும்பும் விலைக் கேள்வியாளர்கள் அல்லது பிரதிநிதிகளின் முன்னிலையில் 30.06.2014ஆம் திகதி பி.ப 3.00 மணிக்கு திறக்கப்படும். கேள்விகளின் மூலப்பிரதி தனியாகவும் நகல் தனியாகவும் இரு கடித உறைகளில் சமர்ப்பித்தல் வேண்டும்.
6. கேள்விகளை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைச் சபையின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.
7. கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டவிலைக் கூறல் பிணையானது கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதியிலிருந்து 90 நாட்களுக்கு செல்லுபடியாகும் விதத்திலும், கேள்விப் பிணைப் பொறுப்பு 120 நாள்கள் இலக்கமிடப்பட்டும் இருத்தல் வேண்டும்.

| கேள்வி இல | வேலைவிவரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | ஒப்பந்தக் காலம் (மாதம்) | தேவையான தரம் | கேள்விப் பிணைத் தொகை (ரூபா) | மீளளிக்கப்படாத தொகை (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| JK/ADM/11/ CONS.WORK/ ADM.BLOCK (V) | யாழ் மாவட்டச் செயலகநான்குமாடிக் கட்டட நிர்மாணம் பகுதி V | 12.467 | 05 | C6 | 124,700.00 | 1000.00 |
| JK/ADM/11/ CONS.WORK/ ADM.BLOCK (CHAN - I) | சங்கானைப் பிரதேசமேலதிகநிர்வாகக் கட்டட நிர்மாணம் பகுதி - I | 3.46 | 03 | C8 | 34,600.00 | 1000.00 |

**சுந்தரம் அருமைநாயகம்,**
**அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்,**
**யாழ்ப்பாண மாவட்டம்.**



# மரண அறிவித்தல்

**ஆறுமுகம் கந்தசாமி** ([illegible])



தொல்புரம் மத்தியைப் பிறப்பிடமாகவும், தொல்புரம் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் கந்தசாமி நேற்று (05.06.2014) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.06.2014) வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பொன்னாலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

077 412 3787

(48759)(5.6.3)



# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியர்
செ.சிவநேசன்
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி இலட்சுமி செல்லையா
அவர்கள் கடந்த 04.06.2014 புதன்கிழமை
சிவபதம் அடைந்த செய்திகேட்டு
துயருற்றிருக்கும் அவரது
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபத்தைத் தெரிவித்துக்
கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/தோப்பு அருள்நந்தி வித்தியாலயம், அச்சுவேலி.

(48761)(5.6.3)

## ஸ்கந்தாவின் விஞ்ஞான தினம்

சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரியின் விஞ்ஞான தினம் இன்று வெள்ளிக்கிழமை பி.ப ஒரு மணியளவில் யந்தையா உபாத் தியாயர் மண்டபத்தில் நடைபெறும். நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக் கழகவிலங்கியல்துறைசிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி நித்தியகௌரி ராஜனும் விசேட விருந்தினராக யாழ்.கல்வி வலய ஆசிரியவள நிலை முகாமையாளர் ஜி.ரட்ணசிங்கமும் கலந்துகொள்வர். (வ-86)

## கலந்துரையாடல்

கிளிநொச்சி கல்வி வலயத்தில் கடமையாற்றுகின்ற உதவி ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று நாளை சனிக்கிழமை மு.ப 10 மணிக்கு கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. இதில் மாவட்டத்தில் உள்ள அனைத்து உதவி ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு கிளிநொச்சிவலய உதவி ஆசிரியர் ஒன்றியத்தின் தலைவர் சிவநாதன் லெனின் தெரிவித்துள்ளார். (ஓ-55)

# வாக்காளரைப் பதிவு செய்தல் தொடர்பான துண்டுப்பிரசுரம்

தென்மராட்சி, ஜூன் 6

'எமது ஜனநாயக உரிமையை மீட்டெடுக்க ஒன்றிணைவோம்' என சாவகச்சேரி பிரதேச இளைஞர் கழகங்களின் சம்மேளனத்தினர் 'வாக்காளர்களைப் பதிவு செய்தல்' தொடர்பான துண்டுப் பிரசுரத்தில் அறைகூவல் விடுத்துள்ளனர்.

மக்களுக்காக மக்களால் செயற்படுத்தப்படுவதே ஜனநாயகம் என முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் குறிப்பிடுகின்றார். அதாவது

> தேர்தல்களில் வாக்களிப்பதற்கு வாக்காளராகப் பதிவு செய்வது மிக அவசியமாகும்

ஜனநாயக முறையிலே மக்களின் விருப்பத்துக்கேற்ப மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளூடாக இடம்பெறுவதே ஜனநாயக ஆட்சி என்று குறிப்பிடுகின்றார்.

அந்த வகையில் இலங்கையிலும் மக்களின் மூலம் தெரிவாகும் ஜனநாயக ஆட்சி இடம்பெறுகிறது என்ற வகையில் தேர்தல்களின் மூலமே மக்களின் விருப்பு வெறுப்புகள் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தத் தேர்தல்களில் வாக்களிப்பதற்கு வாக்காளராகப் பதிவுசெய்வது மிக அவசியமாகும் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-9)

# சமய சந்நிதிகளில்

தென்மராட்சி, ஜூன் 6

சாவகச்சேரி, மீசாலை கிழக்கு ஸ்ரீ சித்திரவேலாயுதசுவாமி ஆலய மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 11 ஆம் திகதி புதன்கிழமை இடம்பெறவுள்ளது.

எண்ணெய்க்காப்பு சாத்தும் வைபவம் முதல்நாள் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி முதல் மாலை 4 மணி வரை இடம்பெறும். (க)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 6

யாழ்ப்பாணம் திருவெண்ணை நகர், கில்னர் ஒழுங்கை மகா மாரி அம்பாள் திருக்கோயில் அலங்கார உற்சவம் இன்று 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

19 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த் திருவிழாவும், 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (க)

# பொதுக் கூட்டங்கள்

கிளிநொச்சி, ஜூன் 6

கிளிநொச்சி ஜெயந்திநகர், மகாதேவா ஆச்சிரமத்தில் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு குருபீடாதிபதி தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும். நலன் விரும்பிகள், அடியார்கள், ஆதரவாளர்கள் அனைவரும் இதில் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

* * *

அச்சுவேலி, ஜூன் 6

அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் யாழ்.மாவட்டச் சங்கத்தின் 5 ஆவது ஆண்டு பொதுக்கூட்டம் நாளைய தினம் 7 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நல்லூர் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறும். சங்கத்தின் தலைவர் வி.ஸ்ரீசக்திவேல் தலைமையில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில் தாய்ச் சங்கத்தின் தலைவர் ஆர்.எம்.வி.கே.ரணதுங்க பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றவுள்ளார். (க-11)

## யாழ்.ஆஸ்பத்திரியில் தவறவிடப்பட்ட பை

யாழ்.போதனா வைத்தியசாலையின் கண் சிகிச்சைப் பிரிவில் அநாதரவாக விடப்பட்ட உடுப்புகள் அடங்கிய பை ஒன்று கண்டெடுக்கப் பட்டு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதன் உரிமையாளர் தகுந்த ஆதாரங்காட்டி அலுவலக நேரத்தில் காசாளரிடம் பெற்றுக்கொள்ளலாம் என்று பணிப்பாளர் அலுவலகம் அறிவித்துள்ளது. (ஓ)

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை தனபாலசிங்கம்



சண்டிலிப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும், பிரதான வீதி, சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை தனபாலசிங்கம் 04.06.2014 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், சந்தானலட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற அன்னம்மா மற்றும் இராசரட்ணம் பரமேஸ்வரி, விக்னேஸ்வரன் ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற தம்பையா மற்றும் சகுந்தலாதேவி, காலஞ்சென்ற சிவானந்தராசா மற்றும் செல்வமலர், விஜயலட்சுமி, தனலட்சுமி, ஞானபண்டிதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.06.2014) வெள்ளிக்கிழமை மு.ப.10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சங்கானை கவைரச்சி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தி.பிரணவதாஸ் (பெறாமகன்)
077 949 1095/021 373 7045

அம்மன்கோயிலடி,
சங்கானை.
(48747) (12.3.6)

## கண்ணீர் அஞ்சலி

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் பொது முகாமைத்துவ
உதவியாளராகக் கடமையாற்றும்
இ. அரோகன்
அவர்களின் பாசமிகு மாமியார்
**திருமதி கமலாதேவி பெரியதம்பி**
அவர்கள் கடந்த 07.05.2014இல் இறைபதமடைந்ததையிட்டு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம். (சி/7704)(7.6.3)

ஊழியர் நலன்புரி சங்கம்
பிரதேச செயலகம், தென்மராட்சி, சாவகச்சேரி.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு
26
03
1953



உதிர்வு
09
05
2014

## ஞானசரஸ்வதி அமிர்தலிங்கம்

கடந்த 09.05.2014 வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்த எமது அன்புத்தெய்வம் ஞானசரஸ்வதி அமிர்தலிங்கம் அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் 07.06.2014 சனிக்கிழமை கீரிமலையிலும், வீட்டுக்கிருத்திய சபிண்டீகரணக்கிரியைகள் 08.06.2014 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். (48658)(4.6.3)

புகையிரத நிலையவீதி,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

## திருமதி கமலாதேவி பெரியதம்பி

தோற்றம்
16.11.1942



மறைவு
07.05.2014

எம்மைப் பெற்றெடுத்து பாசத்துடன் வளர்த்து ஆளாக்கிய
எங்கள் அன்பான அம்மாவே!
நீங்கள் எங்களுடன் வாழ்ந்த காலங்களும்
உங்களது அன்பான அரவணைப்பும்
இனிமையான வார்த்தைகளும் என்றென்றுமே
எங்கள் இதயத்தில் நிலைத்திருக்கும்
உங்களது ஆத்மா சாந்தியடையவும்
நீங்கள் என்றும் இறைவனது நிலைபேறான
அன்பை அனுபவிக்கவும் நாங்கள் எம்பெருமானிடம் வேண்டுகின்றோம்.

எமது அன்புத் தாயாரும் குடும்பத் தலைவியுமான திருமதி கமலாதேவி பெரியதம்பி அவர்களது மறைவுச் செய்திகேட்டு அன்னாரது இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் உதவி புரிந்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர்களுக்கும், தொலைபேசி, மின்னஞ்சல், தந்தி மூலமும் வெளிநாட்டிலிருந்தும் ஆறுதல் கூறியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் இன்று (06.06.2014) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 17/1, ஹென்ஸ்மன் வீதி, சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

(C/7694)(7.6.3)

## முதியோர் கிளினிக்கில் சிகிச்சை பெறுவோர் அதிகம்

### சாவகச்சேரி மருத்துவமனையில்

தென்மராட்சி, ஜூன் 6

சாவகச்சேரி மருத்துவமனையில் பிரதி சனிக்கிழமைகளில் நடைபெறும் முதியோர் கிளினிக்குக்கு வரும் முதியோர்களின் எண்ணிக்கை திடீரென அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அனுபவம் மிக்க மருத்துவரால் பரிசோதிக்கப்படும் முதியோர்களுக்கு முறையான பரிசோதனைகளும் அறிவுரைகளும் வழங்கப்படுவதால் பெருமளவு முதியோர்கள் முதியோர் கிளினிக்கில் சிகிச்சை பெறுவதைக் காண முடிகிறது.

கிளினிக்கில் பணி புரியும் மருத்துவர் முதியோர்களுக்கு வழங்கும் பரிசோதனைகள் மற்றும் ஆலோசனைகள் முதியோர்கள் மத்தியில் வரவேற்பு பெற்றுள்ளதையடுத்து பிரதி சனிக்கிழமைகளில் பெருமளவு முதியோர்கள் இந்தக் கிளினிக்குக்கு வருகை தந்து சிகிச்சை பெறுவதைக் காண முடிகிறது. (வ-9)




காரைநகர் பிரதேச தபாற் பெட்டிகளுக்கு காரைநகர் தபாலகத்தால் வர்ணம் பூசப்பட்டு மும்மொழிகளிலும் அறிவிப்பு வாசகங்கள் எழுதப்பட்டு மிகவும் அழகாகக் காட்சியளிப்பதைக் காணலாம். (வ)

## பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் அனுப்பி வைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 6

வடமாகாண அரச திணைக்களங்களில் கடமையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான இரண்டாவது வினைத்திறன் காண் பரீட்சைக்கான (மீள்பரீட்சை) அனுமதி அட்டைகள் சம்பந்தப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அனுமதி அட்டைப் பிரகாரம் பரீட்சைகள் எதிர்வரும் 21, 22ஆம் திகதிகளில் நடைபெறுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் 21 ஆம் திகதி தாபன விதிக்கோவையும் நடைமுறை விதிகளும் மற்றும் நிதிப் பிரமாணங்களும் அரச பெறுகை நடைமுறைகளும் 22 ஆம் திகதி முகாமைத்துவம் ஆகிய பாடங்களுக்கான பரீட்சைகள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

## போரால் பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு பசுமாடு



பசு மாடு வழங்கப்பட்டபோது

யாழ்ப்பாணம், ஜூன் 6

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் இளைஞர்களால் கிராம ரீதியாக சேகரிக்கப்பட்ட நிதியில் இருந்து போரால் பாதிப்படைந்த குடும்பமொன்றின் வாழ்வாதாரத்துக்கான 20 ஆயிரம் ரூபா பெறுமதியான பசுமாடு வழங்கப்பட்டுள்ளது.

இளவாலை பிரதேசத்தின் அபிவிருத்திப் பணிகளுக்குப் பல்வேறு நலத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வரும் குறித்த சங்கத்தால் தொடர்ச்சியாக பல்வேறு நன்கொடைத் திட்டங்களும் வாழ்வாதார உதவிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் போரின் போது கணவனை இழந்து வாழ்வாதாரத்துக்கு சிரமப்படும் குறித்த குடும்பத்துக்கு நன் கொடையாளர்களின் நிதி சேகரிப்பில் இருந்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான பசுமாடொன்று வழங்கப்பட்டுள்ளது. (வ-14)

## சாவகச்சேரி நகரசபை மேற்கொள்ளும் உள்ளூராட்சி வார வேலைத் திட்டங்கள்

தென்மராட்சி, ஜூன் 6

சாவகச்சேரி நகர சபையால் உள்ளூராட்சி வாரத்தில் மேற்கொள்ளப்படவுள்ள வேலைத் திட்டங்கள் தொடர்பான விவரங்கள் நகர சபை செயலாளர் கா.சண்முகதாஸனால் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டுள்ளன.

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் சுற்று நிருபப் பிரகாரம் உள்ளூராட்சி வார விழா எதிர்வரும் 16 ஆம் திகதி தொடக்கம் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைவரை அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகள் அந்தந்த உள்ளூராட்சி சபைகளால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

உள்ளூராட்சி வாரத்தின் முதலாம் நாள் நடமாடும் சேவையில் நடமாடும் இலவச கண் பரிசோதனை முகாமும், ஆதனவரி அறவிடும் நடமாடும் சேவையும்,

இரண்டாம் நாள் வருமான மேம்பாட்டுத் தினத்தில் ஆதன வரி தொடர்பான நடமாடும் சேவையும், சைக்கிள் இலக்கத் தகடுகள் விநியோகமும்,

மூன்றாம் நாள் சுகாதாரம், துப்புரவு ஏற்பாட்டுத் தினத்தில் சிரமதானம், டெங்குநோய், நீரிழிவு நோய் தொடர்பான விழிப்புணர்வு நடைபயணமும் வீட்டில் சுகாதாரமும்,

நான்காம் நாள் மக்கள் பயன்பாட்டுத் தினத்தில் மக்கள் பங்கேற்புத் திட்டம் தயாரித்தல், வாகனங்கள் தரித்து நிற்றல் தொடர்பான ஒற்றை நாள், இரட்டைநாள் தரிப்பிடம் அறிமுகம் செய்தலும்.

ஐந்தாம் நாள் சுற்றாடல் மற்றும் மரம் நாட்டும் தினத்தில் மரம்நடுகையும், ஆறாம் நாள் கல்வி மற்றும் நூலக அபிவிருத்தி தினத்தில் புத்தகக் கண்காட்சியும் விற்பனையும், முன்பள்ளி மாணவர்களுக்கு உள்ளூராட்சி மன்றத்தின் செயற்பாடுகளைப் பிரதிபலிக்கும் வகையிலான விநோத உடைப் போட்டியும்.

வீட்டில் சிறந்த நூலகம் தெரிவு செய்தல், சிறந்த உணவகம், தேநீரகம், குளிரகம், வெதுப்பகம் தெரிவு செய்தலும், சிறந்த சனசமூக நிலையம் தெரிவு செய்தலும்,

இறுதிநாள் விளையாட்டு மற்றும் பரிசில்கள் . சான்றிதழ்கள் வழங்கும் தினத்தில் நகர சபை அலுவலக உத்தியோகத்தர்களுக்கிடையிலான போட்டிகள், நடத்தப்பட்ட போட்டிகளில் பங்குபற்றி தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான பரிசில்கள், சான்றிதழ்கள் வழங்கலும் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

## வேகமாகச் சென்ற டிராக்டர் மோ.சைக்கிளை மோதியது

### சிறுப்பிட்டி வாசி காயம்

தென்மராட்சி, ஜூன் 6

போக்குவரத்துப் பொலிஸார் நிறுத்துமாறு சமிக்ஞை செய்தும் நிறுத்தாமல் வேகமாகச் சென்ற டிராக்டர் வீதியில் வந்த மோட்டார் சைக்கிளை மோதி மோட்டார் சைக்கிள் டிராக்டர் சில்லுக்குள் சிக்கியது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த சிறுப்பிட்டி கிழக்கைச் சேர்ந்த சண்முகசுந்தரம் சபேந்திரன் (வயது-30) என்பவர் இதன்போது காயமடைந்தார். மோட்டார் சைக்கிளில் பயணித்தஅவரதுமனைவி,3வயது மற்றும் 8 மாத பெண் குழந்தைகள் தூக்கி வீசப்பட்ட போதிலும் பாதிப்பின்றித் தப்பினர்.

இந்தச் சம்பவம்நேற்று முற்பகல் 11 மணியளவில் மட்டுவில் புத்தூர் வீதியில் மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோயிலுக்கு அருகில் இடம் பெற்றது. மீசாலையில் உள்ள தாய் வீட்டுக்கு வந்த வேளையில் விபத்து இடம் பெற்றதாகப் பயணித்த பெண் தெரிவித்தார்.

டிராக்டர் சில்லுக்குள் மோட்டார் சைக்கிள் சிக்கியதால் டிராக்டர் நின்றதாகவும் அதனைத் துரத்தி வந்த பொலிஸார் டிராக்டர் சாரதியைக் கைது செய்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்த நபர் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (வ-9)

## கூட்டுறவு தினத்தை முன்னிட்டு ஓவியப் போட்டி

கொழும்புத்துறை, ஜூன் 6

வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தால் 92 ஆவது சர்வதேச கூட்டுறவு தின விழாவையொட்டி ஓவியப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

பாடசாலை மாணவர்களுக்காக நடத்தப்படும் ஓவியப் போட்டி 6 பிரிவுகளாக நடைபெறவுள்ளதாக வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தரம் 1,2,3 ஐ உள்ளடக்கிய பிரிவுக்கு 'கூட்டுறவில் கூடி உழைத்தல்' என்னும் தலைப்பிலும், தரம் 4,5 இற்கு 'கூட்டுறவில் ஒற்றுமையே உயர்வு' என்ற தலைப்பிலும், தரம் 6,7 இற்கு 'கூட்டுறவில் ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்னும் தலைப்பிலும் ஓவியப் போட்டிகள் நடைபெறும்.

தரம் 8,9 இற்கு 'கூட்டுறவில் விடா முயற்சி வெற்றி தரும்' என்னும் தலைப்பிலும், தரம் 10, 11 இற்கு 'கூட்டுறவில் புரிந்துணர்வும் பரஸ்பரமும்' என்னும் தலைப்பிலும், உயர் தரத்துக்கு 'கூட்டுறவில் சிறுதுளி பெருவெள்ளம்' என்னும் தலைப்பிலும் போட்டி நடைபெறும்.

ஆக்கங்களை பாடசாலை அதிபரின் பரிந்துரையுடன் ஏ3 அளவு தாளில் வரைந்து எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் (வ.மா) முதியோர் இல்ல வளாகம், கண்டி வீதி, கைதடி என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (வ-135,108)



## வீட்டில் ஆள்கள் இல்லாத நேரம் திருடர்கள் கைவரிசை

தென்மராட்சி, ஜூன் 6

கணவனும் மனைவியும் அரச பணிக்காகச் சென்ற பின்னர் வளவினுள் புகுந்த திருடர்கள் வீட்டுக்குள் செல்லமுடியாததால் வீட்டுக்கு வெளியே பொருத்தப்பட்டிருந்த எட்டு சக்திவாய்ந்த மின்குமிழ்களை அபகரித்துச் சென்றனர்.

இந்தச் சம்பவம் பட்டப்பகலில் கைதடி வடக்கில் அண்மையில் இடம்பெற்றது.


இரவு வீட்டுக்கு வெளியே மின் இணைப்பை வழங்கிய போதே மின்குமிழ்கள் திருட்டுப்போன விடயம் தெரியவந்ததாக குறிப்பிட்ட அரச பணியாளர் தெரிவித்தார். இதேவேளை வீட்டில் 45 தினங்களுக்கு முன்னர் கிணற்றடியில் பொருத்தப்பட்டிருந்த மின்மோட்டர் திருடப்பட்டமைகுறிப்பிடத்தக்கது. (வ-9)

## யாத்திரிகர் விடுதிக்கான கட்டடப் பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 6

ஊர்காவற்றுறை வீதியில் மண்கும்பான் பகுதியில் யாத்திரிகர்களுக்கான தங்கும் விடுதி அமைக்கும் கட்டடப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டின் இறுதியில் குறித்த மண்டபத்தை அமைப்பதற்கான அடிக்கல் நடப்பட்டு தற்போது பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (வ-7)



கட்டடம் அமைப்பதற்கான ஆரம்பகட்ட பணிகள்

# இளைஞர் மீது சங்கானையில் வாள் வெட்டு

யாழ்ப்பாணம்.ஜீன் 6

இராணுவத்தில் இணைந்து கொண்ட இளைஞர் ஒருவரை இனந்தெரியாத நபர்கள் வாளால் வெட்டியதில் அவர் காயமடைந்து யாழ்.போதனாவைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார்.

இந்தச்சம்பவம் சங்கானை, ஆலயம் வீதியில் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில், அதே இடத்தைச் சேர்ந்த செல்வரட்ணம் சதீஸ்வரன் (வயது-26)என்ற இளைஞரே வாள்வெட்டுக்கு இலக்காகியுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் வீட்டிற்கு வெளியே ஆள்கள் நடமாட்டத்தை அவதானித்த இவர் வெளியே சென்றபோது இனந்தெரியாத நபர்கள் வாளால் வெட்டி விட்டுத் தப்பிச்சென்றுள்ளனர்.

வாள் வெட்டுக்கு இலக்கான இளைஞர் சங்கானை வைத்திய சாலையில் சேர்க்கப் பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு மாற்றப் பட்டார்.

வாள்வெட்டுக்கு இலக்கானவர் கடந்த ஓரிரு மாதங்களிற்கு முன்பாக இலங்கை இராணுவத்தில் இணைந்து கடமையாற்றி வந்தார் என்றும், அவருக்கு 10 லட்சத்திற்கு அதிகமாகக் கடன் இருந்ததாகவும் இந்த முரண்பாடே வாள் வெட்டுக்குக் காரணமாக இருக்கலாம் என்றும் தெரியவருகின்றது. பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-106)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

**இராமு சாந்தகுமார்**

அன்பும் பண்பும் பாசமும் நிறைந்தவனே
எம் குடும்ப ஒளி விளக்காய் வாழ்விற்கு வழி
-காட்டியவனே
உருவமாய் இருந்து அருவமாகியவனே
இறந்து நாற்பத்தைந்து நாள் ஆகியும்
இன்னும் மறையவில்லை உன் நினைவுகள்
உங்கள் ஆத்மா சாந்தியடையப்
-பிரார்த்திக்கின்றோம்.

மலர்வு 10.05.1988 உதிர்வு 23.04.2014

ஓம் சாந்தி !!! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !

உங்கள் பிரிவினால் ஆறாத் துயருற்றிருக்கும்
மனைவி, பிள்ளை, உற்றார், உறவினர்

## ஏல விற்பனை

**யாழ் வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம்**

மேற்படி ஆலயத்தில் பயன்படுத்திய 21 அடி நீளமான 2" L கேடரால் ஆன ஊசிக்கால்கள், 8' 4" அளவுடைய கம்பஸ் மரத்தி லான தீராந்திகள், கட்டடத்தில் இருந்து உடைத்து எடுக்கப்பட்ட கம்பிகள், இரும்பிலான சுருக்கு கதவுகள் போன்றவை 2014.06.12 திகதி (வியாழன்) முற்பகல் 10.00 மணிக்கு ஏலத்தில் விற்கப் படும். மதிப்பீட்டுத் தொகையிலிருந்து ஏலம் கூறப்படும். பொருள்களுக்கான பணத்தை உடன் செலுத்தி பொருள்களையும் அன்றைய தினமே ஆலய வளாகத்தில் இருந்து அகற்றப்பட வேண்டும்.

மாவட்ட நீதிமன்றம்,
மல்லாகம்.

(48766) (10)

T. ஸ்ரீமோகன்
பெறுனர்/ பதிவாளர்,

## முதலாம் ஆண்டு நினைவுகூரல்

**அமரர் செல்லையா தங்கராசா**

மீசாலை வடக்கு, மீசாலை.

ஆதாமுக்குள் 25.02.1950 கிறிஸ்துவுக்குள் 05.06.2013



இஸ்ரவேலே நீ பாக்கியவான்
கர்த்தரால் இரட்சிக்கப்பட்ட ஜனமே
உனக்கு ஒப்பானவர் யார்?
(உபா-33.29)

உங்கள் நினைவோடு இருக்கும்
குடும்பத்தினர்,
மனைவி, பிள்ளைகள்,
ஜெப ஜீவிய சபை.

(சி/4272) (10)

## மரண அறிவித்தல்

**திருமதி மாரிமுத்து தம்பிஐயா**



மீசாலை வடக்கு, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாரிமுத்து தம்பிஐயா 04.06.2014 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிஐயாவின் அன்பு மனைவியும், கணபதிப்பிள்ளை, சின்னம்மா, சிவசரணம், நாகம்மா ஆகியோரின் பாசமிகு தாயும், நல்லம்மா, காலஞ்சென்ற நடராஜா மற்றும் அன்னலட்சுமி, இராஜன் ஆகியோரின் பாசமிகு மாமியும், தங்கவேற்பிள்ளை, திலகவதி, திலகேஸ்வரி, சிவனேஸ்வரி, சுசிலாதேவி, சிவமதி, வளர்மதி, ஸ்ரீஸ்காந்தன், செல்வமயூரன், நீலஜா, இரவிவர்மன், இளஞ்சோயன், கிருபா ஆகியோரின் அன்பு பேர்த்தியும், தர்ஷனா, கவிநயா, சிம்மையா, சிற்பரனா, ராகவி, விஸ்ணுகா, தனோஜ், ஜக்சயா, கேசிகா, அபிசங்கன், சகானா, சாதனா, சோதிகா, கபில் ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.06.2014) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 1.00 மணிக்கு வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

(45659) (10)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



**சுப்பிரமணியம் தர்மராஜா**
**(பெற்றா அண்ணை)**

சரவணையைப் பிறப்பிடமாகவும், நவாலி வடக்கை வசிப் பிடமாகவும் கொண்ட சுப்பிர மணியம் தர்மராஜா நேற்று முன்தினம் (04.06.2014) புதன் கிழமை சுவிஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும், யோகேஸ்வரியின் அன்புக் கணவரும், சிவறூபன் (றூபன்), மது சூதனன் (மதன்-பிரான்ஸ்), மதுரா (தொழில் நுட்ப உத்தியோகத்தர் யாழ் மாநகரசபை), விஸ்ணுவர்த்தன் (Ram Builders) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தனுஷா, கேதீஸ்வரன் (Commercial Credit Jaffna Branch) ஆகியோரின் பாசமிகு மாமனும், பிருந்தாபன், அஷ்விதா, கௌசிகா ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள் கின்றோம்.

நவாலி வடக்கு.

தகவல்:
சிவறூபன் (றூபன்-மகன்)
077675 8760

(48763) (10.6)

## சித்த வைத்தியம்

வெள்ளி- சனி- ஞாயிறு-
காலை : 9.00 மணி - 1 மணி
மாலை : 3.00 மணி - 7 மணி

கழுத்து வலி உடன் நிவாரணம்

நாட்பட்ட தோல் வலி, முள்ளந்தண்டு வலி, இடுப்பு வலி, முழங்கால் வலி, பாதகுதிவலி, வாதம், Rheumatoid Aithrits, அலர்ஜி, ஆஸ்துமா, மூக்கடைப்பு, சதை வளர்ச்சி, நிறை தானே கூடும் குண்டுக் குழந்தைகள், தைரோய்ட், கொலஸ்டிரோல், டயாபிடிக், High BP, Low BP, தலைச்சுற்று, உலாஞ்சல், குழந்தைப் பேற்றை விரும்பும் தம்பதிகளின் அனைத்து கோளாறுகளும்.

சித்த வைத்தியர்
Dr.R. Sivagurunathan
0777 301669

(சி/14000) (10) சந்திப்பு இலவசம்

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

புறொயிலர் கோழி மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு: 077 3188016

(48767) (10)

## O/L கணிதம் விஞ்ஞானம்

**Personal Class**

தொடர்பு: 077 219 1438

(48761) (10)

## வினைத்திறன் காண் பரீட்சை வகுப்பு

21 ஆம் திகதி நடைபெறவுள்ள மாகாண சபை அபிவிருத்தி உத்தியோகத்தர் பரீட்சைக்குரியது.

சனி, ஞாயிறு காலை 10.00 மணி
T.P. 075 4164564

யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி கொமர்ஷல் வங்கியருகில்)

## JAAHED Jaffna Alagappa Academy for Higher Education

**அழகப்பா பல்கலைக்கழகம் காரைக்குடி, தமிழ்நாடு இந்தியா**

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கற்கைநெறிகள் (UGC/IUA/4)

**Degree Courses**
- BA (Tamil Lit)
- BA (English)
- BA (History)
- BA (Public Administration)
- B.Sc (Psychology)
- B.Sc (Mathematics)
- B.B.A (Administration)
- B.C.A (Computer)
- B.B.A (Banking)
- B.com

**Master Degrees**
- M.com
- M.com (Finance)
- M.S.C (IT)
- M.A (English)
- M.A (History)
- M.Sc (Maths)
- M.A (Education)
- M.B.A (Education Management)
- M.A (Journalism)
- M.A (Sociology)
- M.A (Tamil)

* Post Graduate Diploma Programmes
* M.A Education = M.Ed
* MBA Education Management
* P.G. Dip in Sports Management
* 2014 December இல் பரீட்சை எழுதலாம் விண்ணப்ப முடிவு திகதி 12.06.2014

**Prof.M.Sinnathamby**
(ஓய்வுநிலை பேராசிரியர்,
அழகப்பா பல்கலைக்கழக அங்கீகரிக்கப்பட்ட
கல்வியியல் நிபுணத்துவ வழிகாட்டுநர்)

**Mr.A.Panchalingam**
(Emeritus Principal)

மேலதிக விவரங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்

தொடர்புகளுக்கு: P.BALAMUHUNTHAN
(Co-ordinator Jaffna Alagappa Academy for Higher Education) Mobile No : 077 386 7458

(C/4273) (10) இல. 20, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி வடக்கு. (Smart Kids Building)

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## வடக்கில்

நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கிழக்கும் வடக்கும்சேரும் இடங்களைத்தொடர் தமிழ்ப் பிரதேசம் என்று அடையாளம் காட்டாதவாறு சிங்களக் குடியேற்றங்கள் நடைபெற்று வருகின்றன.

நேற்றுமுன்தினம் கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் போன்ற இடங்களைச் சென்று பார்த்தேன். களப்பின் அடுத்த பக்கத்தில் கிழக்கு மாகாணக் கிராமமான தென்னைமரவாடி இருக்கின்றது. தொடர்ச்சியாகத் தமிழ் பேசும் மக்கள் வாழ்ந்த அந்த இடத்தில் தமிழர் தாயகம் தொடர்ச்சியாக என்றுமே இருந்த தில்லை என்று காட்டும் நோக்கில் அங்கு சுமார் 350 சிங்களக் குடும்பங்கள் கொண்டுவரப்பட்டு குடியேற்றப்பட்டுள்ளன.

முன்னர் நீர்கொழும்பிலிருந்து காலத்திற்குக் காலம் வடகிழக்குப் பருவப் பெயர்ச்சியின்போது சில மாதங்களுக்கு மீன்பிடிப்பில் ஈடுபட அங்கு வந்தவர்கள் தற்போது தமது குடும்பங்களையும் கொண்டு வந்து குடியேறியுள்ளார்கள். இவர்களுள் முன்னர் அங்கு வந்து சென்ற சிங்கள மீன்பிடியாளர்களைவிட வேறு நூற்றுக்கணக்கான பலரும் அடங்குவர். சிறிது சிறிதாக அவர்களின் ஆக்கிரமிப்பு நடந்தேறிக் கொண்டிருக்கின்றது. இதை ஏன் கூறுகின்றேன் என்றால் இன்றைய காலகட்டம் மிகப் பொல்லாத காலகட்டமாக மாறியுள்ளது. மிக வேகமாக - மிக உக்கிரமாக ஆக்கிரமிப்பும் வெளியார் குடியேற்றங்களும் இராணுவ உதவியுடன் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நடந்துகொண்டிருக்கின்றன.

நாம் வெளிநாட்டிலிருந்து வந்து நம்மவருக்கு வைத்திய வசதிகளையும், கொடைகளையும் தந்து உதவிக்கொண்டிருக்கும்போது எமது பாரம்பரிய நிலங்கள் பறிபோகின்றன. வடக்கு, கிழக்கு என்பது தமிழர் தாயகம் என்ற அந்தக் கருத்திற்கு மாறான நடவடிக்கைகள் நடந்துகொண்டிருக்கின்றன என்பதை உங்கள் எல்லோர் மனங்களிலும் பதியவைக்க விரும்புகின்றேன்.

பல காணிகளை வடமாகாணத்தினுள் - அதுவும் யாழ். குடாநாட்டினுள் இராணுவம் ஆக்கிரமித்து அவற்றைச் சட்டப்படி கையேற்க நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கின்றது.

நாங்கள் எமது வீட்டு நிலத்தைச் சுத்தப்படுத்த ஒரு பாத்திர நீரினுள் ஒருசில துளி டெற்றோலையோ டைனோலையோ ஊற்றுகிறோம். பின்னர் அந்தப் பாத்திரத்தில் இருக்கும் கிருமிநாசினி தன் வேலையைச் செய்கின்றது. நிலத்தைச் சுத்தப்படுத்துகிறது. அதேபோல் மக்களின் மத்தியில் அவர்கள் நிலங்களைத் தமதாக்கி அங்கு இராணுவத்தினரை வதிய வைத்து விட்டார்களானால் அதன்பின் அங்குள்ள கலாசாரப் பண்புகளையும், வாழ்க்கை முறைகளையும், சுற்றாடலையும் ஏன் வழங்கு மொழியைக் கூட மாற்றியமைத்து விடலாம். கிருமிநாசினி போல் இருந்து பாரம்பரியங்களை முற்றாக அழித்துவிடலாம்.

பலருக்கு இங்கு நடைபெற்றுக்கொண்டிருக்கும் இனப்படுகொலைக்கொப்பான நுண்ணிய நடவடிக்கைகள் புரிவதாகத் தெரியவில்லை. மரங்களைக் காண்கின்றோம். ஆனால், அங்கு இருக்கும் வனத்தை அடையாளம் காணாது வாழ்கின்றோம். அன்றாட தேவைகளில் மூழ்கி விடுகின்றோம்.

எமக்கு இன்று தடையின்றிக் கொடை கொடுத்ததைக் கொண்டாடும் இந்த விழாவிலே மனக் கசப்பைத் தரும் விடயங்களை இவர் பேசுகின்றாரே என்று என் அன்பார்ந்த மக்கள் நினைத்துவிடக் கூடாது. நாங்கள் போய்ப் பார்த்தால் தான் நடைபெறும் அனர்த்தங்கள் புரியும்.

ஒட்டுசுட்டானில், கொடுத்த அனுமதிப்பத்திரத்திற்கு மேலதிகமாக மூன்று மடங்கு கருங்கல் லைத் தெற்கிலிருந்து வந்துள்ள ஒரு நிறுவனம் அகழ்ந்தெடுத்துச் சென்றுள்ளது. இது எப்படி நடந்தது என்றே புலப்படவில்லை. கொழும்பில் தரப்பட்ட அனுமதிப்பத்திரம் என்பதால் எம் மாகாண அலுவலர்கள் அதைப்பற்றிக் கவனம் செலுத்தாமல் இருந்தார்களோ அல்லது அவ்வாறு இருத்தி வைக்கப்பட்டார்களோ எமக்குத் தெரியாது. மருத்துவப் பராமரிப்பு நிலையம் இங்கு கட்டப்பட்டுத் திறந்துகொண்டிருக் கும்போது எமது வளங்கள் சூறையாடப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

எனவே, எமது மக்களுக்கு இங்கு நடப்பதைத்தான் நான் கூறிவைக்கின்றேன். இந்த இனிமையான நன்நாளை துயரப் படிவுகொண்ட நாளாக மாற்றுவது எனது நோக்கமல்ல. எமது மக்களின் ஒற்றுமைப்பாடும் ஒருமித்த சிந்தனையும் கூட்டுறவும் ஒத்துழைப்புமே எமக்கு வருங்காலத்தில் வளம் கொடுக்கும்; வாழ்வைத் தரும்" - என்று தெரிவித்துள்ளார்.

(ற-4)

## எங்கே

நேற்று கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இராணுவப் புலனாய்வாளர்கள் மற்றும் பொலிஸாரின் கெடுபிடிகள், அச்சுறுத்தல்கள் ஆகியவற்றுக்கு மத்தியிலும் காணாமல்போனோரின் உறவுகள் தமது போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

வடக்கு மாகாணசபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களான அனந்தி சசிதரன், துரைராசா ரவிகரன் ஆகியோரின் ஏற்பாட்டில் நேற்றுக் காலை 8 மணியிலிருந்து முற்பகல் 11 மணிவரை முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக காணாமல் போனோரின் உறவுகளின் கவனயீர்ப்புப் போராட்டம் நடைபெற்றது. இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டவர்களே மேற்படி கோஷங்களை எழுப்பிக் கதறியழுதனர்.

இந்தப் போராட்டத்தில் கலந்து கொள்வதற்காக முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து வந்தவர்கள் முள்ளியவளை மற்றும்கேப்பாபுலவுப் பகுதிகளில் இடைமறிக்கப்பட்டனர். மாவட்டச்செயலகத்தை வந்தடைந்தவர்களையும் பஸ்ஸிலிருந்து இறங்கவிடாது இராணுவப் புலனாய்வாளர்கள் தடுத்ததுடன், கவனவீர்ப்புப் போராட்டத்திற்கு எதிராக மக்களில் சிலரை பஸ்களில் ஏற்றிக்கொண்டு வந்து குரலெழுப்பினர்.

இவ்வாறான எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் காணாமல் போனோரின் உறவுகள் தமது கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்தப் போராட்டம் தொடர்பில் வடக்கு மாகாணசபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் ரவிகரன் நேற்றுப் பகல் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில்,

"இன்று (நேற்று) திட்டமிட்டபடி காணாமல்போனோரின் உறவுகளின் கவனவீர்ப்புப் போராட்டம் நடைபெற்று முடிந்துள்ளது.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ள இருந்தவர்களுக்கு நேற்று (நேற்றுமுன்தினம்) முதல் இராணுவப் புலனாய்வாளர்களால் அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டிருந்த நிலையில், இன்று (நேற்று) அவற்றைத் தகர்த்து மக்களும் மக்கள் பிரதிநிதிகளும் இறுதிப்போரின் அடையாளமாக விளங்கும் முல்லைத்தீவு மண்ணில் காணாமல்போனவர்களை மீட்டுத்தருமாறு குரல் கொடுத்துள்ளனர்.

காணாமல்போனவர்கள் தொடர்பில் வழக்கு விசாரணை ஒன்று முல்லைத்தீவு நீதிமன்றத்தில் இன்று (நேற்று) நடைபெற இருந்த நிலையில், காணாமல்போனவர்களின் உறவுகளின் குரல்களைப் பலப்படுத்தும் வகையில் இன்று (நேற்று) முல்லைத்தீவு கச்சேரிக்கு அருகில் கவனவீர்ப்புப் போராட்டம் நடைபெற ஏற்பாடாகியிருந்தது.

வடமாகாணசபை உறுப்பினரான எனது (ரவிகரனின்) தலைமையில் முல்லைத்தீவு நீதிமன்றத்திற்கு முன்னால் காணாமல்போனோருக்கான ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெறவுள்ளது எனவும், அது நிறுத்தப்படவேண்டும் எனவும் பொலிஸாரால் முன்னர் வழக்கு பதிவுசெய்யப்பட்டு அது தள்ளுபடி செய்யப்பட்டது. இந்நிலையில், இன்று (நேற்று) வடமாகாண சபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரனின் ஏற்பாட்டில் நடைபெற இருந்த கவனவீர்ப்புப் போராட்டத்திற்கு இந்த முல்லைத்தீவு மண்ணில் அதற்குரிய நடவடிக்கைகளை நான் மேற்கொண்டிருந்தேன்.

இந்நிலையில், நேற்று (நேற்று முன்தினம்) மாலை முதல் இன்றைய (நேற்றைய) ஆர்ப்பாட்டத்திற்கு கலந்துகொள்ளவிருந்த காணாமல்போனோரின் உறவுகளுக்கு இராணுவப் புலனாய்வாளர்கள் மூலம் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டிருப்பதாக எனக்கும் அனந்தி சசிதரனுக்கும் மக்கள் தகவல்களை வழங்கியிருந்தனர்.

தனித்து ஆர்ப்பாட்டத்திற்குச் செல்லவேண்டாம் எனவும், நாம் அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்வோம் எனவும் மக்களிடம் கூறினோம். இதனால் குறித்த நேரத்தில் ஆர்ப்பாட்டங்களில் கலந்துகொள்ள முடியுமோ என்ற தமது ஐயங்களையும் மக்கள் என்னிடம் தெரிவித்தனர்.

இந்நிலையில், இராணுவப் புலனாய்வாளர்களின் தடைகளைத் தகர்க்கும்பொருட்டு என்னால் மக்கள் பிரதிநிதிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டு - பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டு அவர்களையும் மேற்படி ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ள முயற்சிகளை எடுத்தேன். தொடர்ந்தும் இன்றைய (நேற்றைய) கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்திற்கு எதிராக இராணுவத்தினரால் குழப்பங்கள் விளைவிக்கப்படலாம். அதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்ற தகவலும் வந்துசேர அவற்றை மீறி ஆர்ப்பாட்டத்தை நடத்துவதற்குரிய நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டோம்.

இந்நிலையில், இன்று (நேற்று) காலை இடம்பெற்ற இந்தக் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஆரம்பம் முதலே ஆங்காங்கே இராணுவத்தினரும் இராணுவப் புலனாய்வாளர்களும் குவிக்கப்பட்டு நிகழ்வுகளை அவதானிக்கவிடப்பட்டிருந்தனர். அவர்களின் அழுத்தங்களை மீறி மக்களும், மக்கள் பிரதிநிதிகளும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு காணாமல்போன உறவுகளுக்காகக் குரல் கொடுத்து தமது கவலையையும் ஆத்திரத்தையும் வெளிப்படுத்தினர்.

இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில் ஆர்ப்பாட்டத்தைக் குழப்பும் விதத்தில் இரண்டு பஸ்களில் மக்களில் சிலரை இராணுவப் புலனாய்வாளர்கள் அழைத்துவந்தனர்.

ஆர்ப்பாட்டத்தைக் குழப்பும் நடவடிக்கைகள் அவர்களால் ஏற்படுத்தப்பட அங்கு அவர்களுக்கும் காணாமல்போனவர்களுக்கும் இடையில் வாக்குவாதங்கள் இடம்பெற்றன. பின்னர் பொலிஸாரின் கட்டுப்பாட்டில் குழப்பவந்தவர்கள் அப்புறப்படுத்தப்பட, மீண்டும் அமைதியான முறையில் கவனவீர்ப்புப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

இதன்பின்னர் மக்கள் பிரதிநிதிகளின் உரைகளையடுத்து இன்று (நேற்று) முற்பகல் 11 மணியளவில் கவனவீர்ப்புப் போராட்டம் நிறைவுக்கு வந்தது" - என்றார்.

போராட்டத்தில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் கருத்துத் தெரிவிக்கையில்,

"அரசு காணமல் போனவர்கள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்வதற்காக விசாரணை ஆணைக்குழு ஒன்றை நியமித்துள்ளது. போர் முடிவடைந்து 5 வருடங்கள் கடந்த நிலையிலும் 10 ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்ட காணாமற்போனவர்களின் நிலை குறித்து எந்தத் தகவல்களும் இல்லை. இந்த ஆணைக்குழு சர்வதேச சமூகத்தை ஏமாற்றுவதற்கான கண் துடைப்பு நடவடிக்கையே"- என்று தெரிவித்தார்.

இந்தப் போராட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செயலாளர் செல்வராசா கஜேந்திரன், வடக்கு மாகாணசபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களான அனந்தி சசிதரன், துரைராசா ரவிகரன், அன்ரனி ஜெகநாதன், எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் காணாமல்போனோரின் உறவுகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள், எங்கே - எங்கே - எங்கள் உறவுகள் எங்கே?, எமது உறவுகளை ஒப்படைத்தோம் படையினரிடம்... இப்போ அவர்கள் எங்கே?, காத்திருந்தோம் காத்திருந்தோம் 5 வருடங்கள் காத்திருந்தோம். காத்திருந்தோம் காத்திருந்தோம் கண்ணீரில் காத்திருந்தோம்; நேற்று வரை பதில் இல்லை... இன்று என்ன பதில்?, நீதி தேவதையே தலையை நிமிர்த்து! உண்மை தேடிக் கரங்களை உயர்த்து!! உனது வெற்றி எங்கள் வெற்றி!!!, சரணடைந்தவர்கள், காணாமல் போனோர் தொடர்பில் மரணச் சான்றிதழா? அரசே பதில் சொல் - என்று கோஷமிட்டுக் கதறியழுதனர்.

(ற-சி.14,426,102)

## மீள் குடியமர்ந்த

அமெரிக்கத் தூதரக அரசியல் விவகார அதிகாரி தோமஸ் மற்றும் அகதிகளுக்கான பிராந்திய் இணைப்பாளர் முன்சொன் ஆகியோர் யாழ்.மாவட்டத்துக்கு நேற்றையதினம் வந்திருந்தனர். யாழ்.மாவட்டத்தின் நிலைமைகளைப் பார்வையிட்ட பின்னர் அவர்கள் யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்துடன் சந்திப்பு நடத்தியிருந்தனர்.

சுமார் அரைமணி நேரம் நீடித்த இந்தச் சந்திப்புத் தொடர்பில் யாழ்.மாவட்ட அரச அதிபர் கருத்துத் தெரிவிக்கையில்,

"யு.என்.எச்.சி.ஆரின் பணிகள் தொடர்பில் அவர்கள் கேட்டறிந்தனர். அவர்களது உதவிகள் போதுமானதாக உள்ளனவா என்பது பற்றி ஆராய்ந்தனர்.

இடம்பெயர்வுகளின் போதும் அந்த மக்களை மீள்குடியமர்த்தும் போதும் பல்வேறு உதவிகளை வழங்குகின்றனர். மீளக் குடியமர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்ட தற்காலிக வீட்டு வசதிகள் போதாமலேயே உள்ளன. இந்திய அரசின் வீட்டுத் திட்டத்தில் அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்தாலும் அது போதாமலேயே உள்ளது. வாழ்வாதார வசதிகளும் அவர்களுக்குப் போதாமலேயே உள்ளது. தற்போதைய காலநிலை மாற்றத்தாலும் அவர்களது வாழ்வாதார நடவடிக்கைகள் மேலும் பாதிப்படைந்துள்ளது. அதுவும் மேம்பாடு செய்ய வேண்டியுள்ளது என்பதை அவர்களுக்கு எடுத்துரைத்தேன் இறுதியாக யாழ்ப்பாணத்தில் தற்போதுள்ள நலன்புரி நிலையங்கள் தொடர்பிலான விபரங்களை கேட்டறிந்தனர். அத்துடன் அவர்களை மீளக்குடியமர்த்த எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் தொடர்பிலும் கேள்வியெழுப்பினர். அதற்கு, அவர்களை மீளக்குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்றும் தெரிவித்தேன்" - என்று தெரிவித் தார்.

(ற-5)

## வழக்கு

ஐந்து பேர் தொடர்பான ஆள்கொணர்வு மனு மீதான விசாரணை நேற்று முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது அரச சார்பு சட்டத்தரணி மன்றுக்கு சமுகமளிக்காததால் வழக்கை அடுத்த மாதம் 21ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார் நீதிபதி ம.ஆனந்தராஜா.

இராணுவத்தினரிடம் சரணடைந்து காணாமற்போனோர் தொடர்பாக அவர்களின் குடும்ப உறுப்பினர்களான கிருஷ்ணகுமார் ஜெயகுமாரி, விஸ்வநாதன் பாலநந்தினி, கந்தசாமி காந்தி, அனந்தி சசிதரன், கந்தசாமி பொன்னம்மா ஆகியோர் 2009ஆம் ஆண்டு வவுனியா மேல் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்திருந்தனர்.

வவுனியா மேல் நீதிமன்றத்தில் விசாரணையிலிருந்த இந்த வழக்கு, சட்டமா அதிபர் திணைக்களத்தினால் முல்லைத்தீவு நீதிமன்றுக்கு மாற்றப்பட்டது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, சட்டமா அதிபர் திணைக்களத்தினால் நியமிக்கப்பட்ட அரச சட்டத்தரணி, மன்றில் சமுகமளிக்கவில்லை. இதனால் வழக்கை ஜுலை 21 ஆம் திகதிக்கு நீதிபதி ஒத்திவைத்தார்.

(ஐ)

## 1406 ஏக்கர்

எழுப்பியிருந்த கேள்விகளுக்கு சபாபீடத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பதில்களிலேயே மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள காணிகள் அரசியல்வாதிகளினாலும், அரசியல் ரீதியாகத் தொடர்புடைய அலுவலர்களாலும் பலவந்தமாகக் கைப்பற்றப்படவில்லை. 2010ஆம் ஆண்டிலிருந்து கிளிநொச்சி மாவட்டத்தில் 10 அரச நிறுவனங்களுக்கு 86.08 ஏக்கர் காணி சுவீகரிக்கப்பட்டுள்ளது. இந்தக் காணிகளின் பெறுமதி இன்னும் மதிப்பீடு செய்யப்படவில்லை.

இதில் நீண்டகாலக் குத்தகை அடிப்படையில் 29.90 ஏக்கர் காணி 3 தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதன் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 17 மில்லியனாகும் என்றும் காணி அபிவிருத்தி அமைச்சு சபையில் ஆற்றுப்படுத்திய பதிலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ற-சி)

## அச்சுவேலி

ஆண்டில் அமைக்கப்பட்டது. இந்த முகாமுக்காக 9 குடும்பங்களுக்குரிய காணிகள் உள்வாங்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்குரிய நஷ்ட ஈட்டுத்தொகையை வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

அரச சேவைகளுக்காக பொது மக்களின் காணியை சுவீகரிக்கும் சட்டம் 1950ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டது. அந்தச் சட்டத்தின் பிரகாரமே வடக்கில் இராணுவ முகாம்களுக்காக காணிகள் சுவீகரிக்கப்படுகின்றன. இவ்வாறான காணி சுவீகரிப்பு இல்லையென்றால் நாட்டில் இன்றைய அதிவேகப் பாதைகள் இருக்காது. அபிவிருத்தி பணிகள் நடைபெறாது.

நுணாவிலிலுள்ள இராணுவ முகாமை எதிர்வரும் 2 மாதங்களில் மூட நாம் தீர்மானித்துள்ளோம். அங்கிருந்த இராணுவத்தினருக்காக ஏனைய முகாம்களில் கட்டடங்கள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கட்டடப் பணிகள் முடிந்த பின்னர் அந்த முகாம் மூடப்படும்.

திக்கத்திலுள்ள இராணுவ முகாம் புலிகளிடமிருந்து இராணுவம் கைப்பற்றியதாகும். அதனையும் இராணுவம் தம் வசம் தொடர்ந்தும் வைத்திருக்கும். அந்தப் பிரதேசத்தில் காணி உரிமை கோருவோருக்கு அரசு நட்டஈடு வழங்கும்"- என்று தெரிவித்துள்ளார்.

(ற)

# ஆண்களுக்கான கிரிக்கெட்டில் சம்பியனானது மன்னார் பியர்

கரணவாய், ஜூன் 6

வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் தலைமன்னார் பியர் பாடசாலை உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியைத் தோற்கடித்து இவ் வருட மாகாண மட்டச் சம்பியனாகியது.

வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் ஆண்களுக்கான இறுதியாட்டம் நேற்று முன்தினம் வவுனியா நகர சபை மைதானத்தில் நடைபெற்றது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி அணியினர் முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தனர்.

இதனை அடுத்து முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய தலைமன்னார் பியர் பாடசாலை அணியின் நிர்ணயிக்கப்பட்ட 10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 68 ஓட்டங்களைப் பெற்றது. அவ்வணி சார்பாக தயாளன் 4 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 31 ஓட்டங்களையும் தரன் 9 ஓடுடங்களையும் அதிக பட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் பிரணவன் 4 இலக்குகளையும் யனகன் 3 இலக்குகளையும் கைப்பற்றினர்.

இதனை அடுத்து 69 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியால் 10 பந்துப் பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 58 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. இதனால் 10 ஓட்டங்களால் அவ்வணி தோல்வியைத் தழுவியது. அவ்வணி சார்பாக யனகன் 18 ஓட்டங்களையும் ராகசுகந்தன் 10 ஓட்டங்களையும் அதிக பட்சமாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் ஜெபநேசன் 3 இலக்குகளையும் தரன், தனுசன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர். இதேவேளை மூன்றாமிடத்துக்காக இடம் பெற்ற ஆட்டத்தில் வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலய அணி, மன்னார் சென்.சேவியர் கல்லூரி அணியை 4 ஓட்டங்களால் வெற்றியீட்டி 3 ஆம் இடத்தைத் தனதாக்கிக் கொண்டது. (த-108)



வெற்றியீட்டிய மன்னார் பியர் அணியினர்

## கரப்பந்தாட்ட போட்டிகள்

வலி.வடக்கு, ஜூன் 6

வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடத்தப்படும் மாகாண மாவட்ட அணிகளின் ஆண்கள், பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டிகள் நாளையும், நாளை மறு தினமும் கிளிநொச்சியில் இடம்பெறவுள்ளன.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா மாவட்ட அணிகள் இந்தப் போட்டியில் மோதவுள்ளன. (த-86-23)

## பெண்களுக்கான வலைப்பந்தாட்டம்

வலி.வடக்கு, ஜூன் 6

வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் வடக்கு மாகாண மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்தப்படும் பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டிகள் நாளை கிளிநொச்சியில் இடம்பெறவுள்ளன. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா மாவட்ட அணிகள் இப் போட்டியில் மோதவுள்ளன. (த-86)

## வல்வை, ஆதிசக்தி வெற்றி

பருத்தித்துறை, ஜூன் 6

பருத்தித்துறை உதைபந்தாட்டச் சங்கத்தின் அனுமதியுடன் கற்கோவளம் உதய தாரகை விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நேற்று முன் தினம் நடைபெற்ற போட்டியில் மைக்கல் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வல்வை விளையாட்டுக் கழக பி அணி விளையாடியது இதில் இவ்விரு விளையாட்டுக் கழகங்களும் எந்த வித கோல்களும் அடிக்காமல் சம நிலையில் முடிவடைந்தது.

பின்னர் சமநிலை தவிர்ப்பு உதை மூலம் 03:01 என்ற கோல் வித்தியாசத்தில்வல்வை பி அணி வெற்றி பெற்றது.

மாலை 4.30 மணிக்கு நடைபெற்ற போட்டியில் ஆதிசக்தி பி அணியை எதிர்த்து பருத்தித்துறை ஐக்கியம் விளையாடியது. இதில் 06:01 என்ற கோல் வித்தியாசத்தில் ஆதிசக்தி பி அணி வெற்றி பெற்றது. (த)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 6

யாழ். மாவட்டக் கூடைப்பந்தாட்டச் சங்கத்தினால் யாழ். மாவட்டத்தில் முதன் முறையாக லீக் முறையில் நடத்தப்படும் இளையோருக்கான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

இன்றுவெள்ளிக்கிழமைமாலை 4மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம் பெறும் 17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணி மோதவுள்ளது.

மாலை 6மணிக்கு சென்.பற்றிக்ஸ் கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் இடம் பெறும் 17 வயதுப்பிரிவு ஆண்களுக்கான ஆட்டத்தில் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.இந்துக்கல்லூரி அணி மோதவுள்ளது.

யாழ் மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் பிற்பகல் 3.30மணிக்கு இடம் பெறும் 15 வயதுப்பிரிவு ஆண்களுக்கான ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணி மோதவுள்ளது.

சென். பற்றிக்ஸ் கல்லூரி கூடைப் பந்தாட்ட திடலில் மாலை 5மணிக்கு இடம் பெறும் 15வயதுப்பிரிவு ஆண்களுக்கான ஆட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.இந்துக்கல்லூரி அணி மோதவுள்ளது. (த-23)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 6

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கற்கோவளம் உதய தாரகை விளையாட்டுக்கழகம் நடத்தும் 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் கற்கோவளம் உதய தாரகை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இன்று வெள்ளிக்கிழமை பி.ப 3.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் நவஜீவன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் கரவைச் சுடர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வல்வை விளையாட்டுக்கழக ஏ அணி மோதவுள்ளது. (த-23)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 6

யாழ்.மாவட்டத் தாச்சிச் சங்கத்தின் அனுமதியுடன் தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழகம் லீக் முறையில் நடத்தும் மின்னொளி தாச்சிச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இன்று வெள்ளிகிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

* * *

யாழ்ப்பாணம், ஜூன்6

மல்லாகம் ஸ்ரீமுருகன் ஐக்கிய விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் மின்னொளி கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் மல்லாகம் ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இன்று வெள்ளிக்கிழமை இரவு 7மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை பிரதீப் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த- 23)

# லண்டன் செல்லும் அணியில் ஏழு வடக்கு- கிழக்கு வீரர்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 6

கடந்த வருடம் முரளி கிண்ணத்துக்காக இடம் பெற்ற கிரிக்கெட் போட்டியின் போது பாடசாலை அணிகளில் சிறந்த வீராகள் தெரிவு செய்யப்பட்டு அந்த அணி லண்டனுக்கு சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொள்ள வுள்ளது.

அந்த அணியில் வடக்கு - கிழக்கை சேர்த்த 7 வீரர்கள் இடம் பெற்றுள்ளனர்.

யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி மற்றும் மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களைச் சோ்த்த 7 வீரர்கள் இந்த அணியில் இடம் பிடித்துள்ளனர். இந்த அணியின் தலைவராக கொழும்பு சென்.பீற்றர்ஸ் கல்லூரியைச் சேர்த்த ஜனித் லியானகே, உப தலைவராக யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த பரமானந்தம் துவாரகசீலன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

எதிர் வரும் 9ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரை இந்த அணி லண்டனில் இடம் பெறும் பல் வேறு கிரிக்கெட் ஆட்டங்ளில் பங்கு கொள்ளவுள்ளனர். (த-23)

## தேசிய நீச்சல் சுகததாசவில்

யாழ்ப்பாணம், ஜூன் 6

தேசிய மட்ட நீச்சல் போட்டி நாளையும் மறுதினமும் கொழும்பு சுகததாச விளையாட்டு அரங்கில் உள்ள நீச்சல் தடாகத்தில் இடம் பெறவுள்ளது.

மேற்படி போட்டியில் வட மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து 6 ஆண் போட்டியாளர்கள் பங்குகொள்ளவுள்ளனர். (த-23)

# வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கு தனை

கரணவாய், ஜூன் 6

வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகம் விதிகளுக்கு முரணாக விளையாடி குழப்பம் விளைவித்தமையால் ஒரு வருடம் போட்டிகளில் பங்குபற்ற பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கினால் தடை விதிக்கப்பட்டுள்ளதுடன் அந்த அணியைச் சேர்ந்த முன்னணி வீரர் சாரங்கனுக்கும் இரண்டு வருடங்கள் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகம் நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகம், ஆதிசக்தி விளையாட்டுக் கழகமும் மோதியது. இதில் பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த வீரர் சாரங்கன், எதிரணி வீரரைக் கடுமையாகத் தாக்கியதோடு பார்வையாளர்களும் எதிரணியினரைத் தாக்கி குழப்பம் விளைவித்தனர்.

இது தொடர்பாக ஆராய்ந்த பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக், சுற்றுப் போட்டியின் குழு, நடுவர்கள், போட்டி இணைப்பாளர் மற்றும் ஆதி சக்தி விளையாட்டுக் கழகம் ஆகியவற்றின் அறிக்கையின் பிரகாரம் பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகம் லீக்கின் நடவடிக்கைகளுக்கு மதிப்புக் கொடுக்காமல் விளையாடியதால் ஒரு வருடம் விளையாடுவதற்கு தடை விதித்ததோடு அந்த அணியின் வீரர் சாரங்கனுக்கு 2 வருடங்கள் தடை விதித்தது.

அத்துடன் தண்டப் பணமாக 10 ஆயிரம் ரூபாவும், பாதிக்கப்பட்ட ஆதி சக்தி விளையாட்டுக் கழக வீரர்கள் மூவருக்கு தலா 5000 ரூபா வீதம் 15 ஆயிரம் செலுத்துமாறும் லீக் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கினால் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதுடன் அதன் பிரதிகள் அகில இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம், யாழ்ப்பாண உதைபந்தாட்ட லீக், வலிகாம உதைபந்தாட்ட லீக், யாழ்.மாவட்ட அரச அதிபர், பருத்தித்துறை மருதங்கேணி ஆகிய பிரதேச செயலர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. (த-408)

# 15 ஆவது வலைப்பந்தாட்டம் பரு. மெதடிஸ் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூன் 6

வடமாகாண பாடசாலைகளின் 15 வயதுப்பிரிவு பெண்களுக்கான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

நேற்று வியாழக்கிழமை ஓமந்தை மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலைஅணியை எதிர்த்து அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணி மோதிக் கொண்டது. இதில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை அணி 12:11 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது. மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் தெல்லிப் பழை யூனியன் கல்லூரி அணியை எதிர்த்து மன்னார் ஆண்டான்குளம் மகா வித்தியாலய அணி மோதிக் கொண்டது.

இதில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி 18:16 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று மூன்றும் இடத்தைப் பெற்றது. (த-23-422-433)



வெற்றியீட்டிய பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை

# இந்தியாவில் மண்ணை எடுத்து ஆடுகளம் அமைக்கிறது ஆஸி.




இந்திய மண்ணில் சாதிப்பதற்கு ஆஸ்திரேலிய அணி புதுத்திட்டம் தீட்டியுள்ளது. ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி கடந்த ஆண்டு இந்தியாவில் நடந்த 4 டெஸ்டிலும் படுதோல்வி அடைந்தது.

சில மாதங்களுக்கு முன்பு ஆஷஸ் கிண்ணத்தை வென்று டெஸ்ட் தரவரிசையில் முதல் இடத்தை பிடித்த ஆஸ்திரேலியா அந்த இடத்தை தொடர்ந்து தக்க வைக்க வெளிநாட்டுப் போட்டிகளில் தொடர்ந்து வெற்றி பெற்றாகவேண்டும் என்ற எண்ணத்தில் உள்ளது.

இதனால், ஆசிய மண்ணில் சாதிப்பதற்குப் புதிய வழிமுறையை நாடியுள்ளது.

இதன்படி இந்தியாவில் இருந்து மண்ணை இறக்குமதி செய்து பிரிஸ்பேனில் உள்ள தேசிய கிரிக்கெட் அக்கடமியில் ஆசிய மைதானங்களில் இருப்பது போன்று பயிற்சி ஆடுகளங்களை அமைக்க முடிவு செய்துள்ளது.

இதன் மூலம் தங்களது பலவீனங்களில் ஒன்றான சுழற்பந்து வீச்சில் முன்னேற்றம் காண முடியும் என்று ஆஸ்திரேலியா அணி நம்பி வருகிறது. (த)



# லாராவை ரசிப்பேன்

கிரிக்கெட் சூதாட்ட விசாரணைகள் முக்கியமானவை என்று இந்திய நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கர் கூறியுள்ளார்.


சிங்கப்பூருக்குப் பயணம் மேற்கொண்டுள்ள சச்சின் அங்கு ஒரு நிகழ்ச் சியில் பங்கேற்றார்.

அப்போது பேசிய அவர், அக்கறையுள்ளவர்கள் சில முக்கியமான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர். ஏனெனில் இது கிரிக்கெட் ஆட்டத்தின் நேர்மையைக் காப்பதற்கு அவசியம், நியாயமான போட்டியைப் பார்ப்பதற்கு ரசிகர்களுக்கு உரிமை இருக்கிறது என்று கூறியுள்ளார்.

மேலும் மேற்கிந்திய வீரர் லாராவுடன் சேர்ந்து விளையாடுவது குறித்து அவர் கூறுகையில், நாங்கள் ஒரே அணிக்கு ஆடியுள்ளோம், இருவரும் ஜோடி சேர்ந்து சிறப்பாக ஆடியுள்ளோம். இந்த முறையும் ஜோடி சேர்ந்து ஓட்டங்கள் சேர்ப்போம் என்று நம்புகிறேன்.

அவருக்கு எதிராக விளையாடுவதை மகிழ்ச்சியுடன் அணுகியுள்ளேன். பிரையன் லாரா மற்ற நாடுகளுக்கு எதிராக ஓட்டங்கள் எடுப்பதை மகிழ்வுடன் ரசித்துப் பார்ப்பேன், ஆனால் இந்தியாவுக்கு எதிராக அவர் ஆடும்போது அல்ல என்று கூறியுள்ளார். (த)

# அரையிறுதியில் நடால்



பிரெஞ்சு பகிரங்க ரென்னிஸ் போட்டித் தொடரின் அரை இறுதிப் போட்டிக்கு ஸ்பெயின் வீரர் ரபேல் நடால் ஒன்பதாவது தடவையாகத் தெரிவாகியுள்ளார்.

தனது நாட்டைச் சேர்ந்த டேவிட் பெரர் உடன் மோதிய நடால் 4:6 என்ற ரீதியில் முதல் சுற்றில் தோல்வியடைந்த போதும் அடுத்த மூன்று சுற்றுகளிலும் 6:4, 6:0 ,6:1 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றார்.

இன்னுமொரு காலிறுதிப் போட்டியில் பிரித்தானிய வீரர் அன்டி முர்ரே 6:4, 6:1 ,4:6,1:6, 6:0 என்ற செட் கணக்கில் பிரான்ஸ் வீரரான காயெல் மொன்பில்ஸ் என்ற வீரரை வெற்றி பெற்றுள்ளார். இவர் ரபேல் நடாலுடன் அரை இறுதிப் போட்டியில் மோதவுள்ளார்.

லத்வியா வீரர் ஏர்னெஸ்ட் குல்பிஸ், செக் குடியரசின் வீரர் தோமஸ் பெர்டிச் உடன் மோதி 6:3, 6:2, 6:4 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றார்.

இன்னுமொரு காலிறுதிப் போட்டி கனடா வீரர் மிலோஸ் ராவ்னிக் மற்றும் செர்பிய வீரர் நொவக் ஜோகோவிச் ஆகியோருக்கிடையில் நடைபெற்றது. இதில் ஜோகோவிச் 7:5, 7:6, 7:5, 6:4 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றார். இதன் படி ஏர்னெஸ்ட் குல்பிஸ் மற்றும் நொவக் ஜோகோவிச் ஆகியோர் இரண்டாவது அரை இறுதிப் போட்டியில் விளையாடவுள்ளனர்.

தரப்படுத்தல்களில் முதலிடத்தில் இருக்கும் ரபேல் நடால், இரண்டாமிடத்தில் இருக்கும் நொவக் ஜோகோவிச் ஆகியோர் இறுதிப் போட்டிக்கான அதிக வாய்ப்புகளைக் கொண்ட வீரர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### தீர்க்கமான

பிரதிநிதியும், அரசியல் ஆய்வாளருமான கலாநிதி தயான் ஜயதிலக்க.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்துக்கமைய எந்தவொரு மாகாணத்துக்கும் பொலிஸ் அதிகாரங்கள் பகிரப்பட மாட்டாது என்றும், இனக் குழுமத்தின் அடிப்படையில் அதிகாரப்பகிர்வு இடம்பெறாது என்றும் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் நேற்று முன்தினம் நாடாளுமன்றில் தெரிவித்தமை குறித்து வினவிய போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"இலங்கை விவகாரம் தொடர்பான ஒரு தீர்க்கமான தருணத்தில் அரசு மடமைத்தனமானதொரு அறிவிப்பை விடுத்துள்ளது. தற்போதைநிலையை முதலில் சரியாக புரிந்து கொள்ளவேண்டும். இலங்கை தொடர்பான ஐ.நா. விசாரணை அறிவிப்பை, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளை இம்மாத இறுதியில் வெளியிடவுள்ளார். இந்நிலையில், இந்தியாவின் உறவு மிக முக்கியமானதாகும். அதை நாம் சரியான முறையில் பேண வேண்டும்.

சிம்பாப்வேக்கு எதிராக மேற்குலக நாடுகள் நடவடிக்கை எடுத்த போது, அது தமது அயல்நாடான தென்னாபிரிக்காவுடன் மட்டுமன்றி ஏனைய அனைத்து அயல் நாடுகளுடனும் சிறந்த நட்புறவைப் பேணியது. அதனால் மேற்குலக நாடுகளின் எதிர்ப்பை சிம்பாப்வேயால் எதிர் கொள்ளக் கூடியதாக இருந்தது. அதுபோலவே, இலங்கை அரசும் டில்லியுடன் நட்புறவைப் பேண வேண்டும்.

13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்த வேண்டும் என்பதே இந்திய அரசின் எதிர்ப்பார் பாகும். 13 ஐ முழுமையாக நடைமுறைப் படுத்தினால்தான் இந்தியப் பிரதமர் மோடியுடன் அரசு நட்பைப் பேண முடியும். ஆனால் 13 ஐ முழுமையாக நடைமுறைபடுத்த அரசு தயாரில்லை. இவ்வாறான நிலையில் இருநாட்டு அரசுகளுக்கிடையில் சுமுகமான நட்புறவைப் பேண முடியாது.

13 ஆவது திருத்தத்துக்கமைய மாகாணங்க ளுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்களை அரசு வழங்க வேண்டும். அப்போதுதான் இந்தியா வின் நட்புறவும் - ஆதரவும் இலங்கைக்குக் கிடைக்கும்.

இலங்கை விவகாரமானது சர்வதேச ரீதியில் பெரும் அழுத்தங்களுக்கு உட்பட்டிருக்கும் நிலையில், 13 ஆவது திருத்தத்திலுள்ள பொலிஸ் அதிகாரத்தை தற்போது நடைமுறைப்படுத்த முடியா விட்டால், காணி அதிகாரத்தை யாவது நடை முறைப்படுத்த வேண்டும். அப்போதுதான் இந்தியாவின் உதவியுடன் சர்வதே சத்தை நாம் எதிர் கொள்ள முடியும்.

தமிழர்களின் இனப்பிரச்சினைத் தீர்வுக்காக 13 ஆவது திருத்தத்திலுள்ள காணி அதிகாரத்தை தற்போது நடைமுறைப்படுத்தியுள்ளோம். பொலிஸ் அதிகாரத்தை எதிர்காலத்தில் நடைமுறைப் படுத்துவோம் என்று அரசு கூறி இந்தியாவுடன் சுமுக உறவைப் பேணலாம். இல்லாவிட்டால் இருநாட்டு அரசுகளுக்குமிடையிலான உறவில் முரண்பாடு தோன்றும்.

மேலும், நாடாளுமன்றத் தெரிவுக் குழுவினூடாகவே இனப்பிரச்சினைக் குத் தீர்வு காண முடியும் என்று அரசு திட்டவட்டமாக அறிவித்துள்ளது. நாடாளுமன்றத் தெரிவுக் குழு குறித்து அரசு கூறிக் கொண்டிருப்பதில் பயனில்லை. இந்தியாவிடம் இதைக்கூறியே காலத்தை இழுத்தடிக்கப் பார்க்கிறது அரசு. இவற்றை விடுத்து, 13 ஆவது திருத்தத்திலுள்ள காணி அதிகாரத்தை முதலில் நடை முறைப் படுத்தி, இந்தியாவின் நட்புறவை வளர்த்துக் கொண்டு, எதிர் காலத்தில் அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து அரசு தீர்மானிக்கலாம். - என்று தெரிவித்துள்ளார். (ற-சி)

### காணி

யாளர்கள் இனங்காணப்படவில்லை என்று தெரிவித்து காணி சுவீகரிப்பு அறிவித்தல்கள் ஒட்டப்பட்டுள்ளமைக்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்ய முடியும் என்று தெரிவித்துள்ளார் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ்.

வலி.வடக்குப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கீரிமலை மற்றும் நகுலேஸ்வரம் பகுதியில் 186 ஏக்கர் காணிகள் சுவீகரிப்புச் செய்வதற்கான அறிவித்தல்கள் ஒட்டப்பட்டன. கடற்படை முகாம் அமைப்பதற்காகவே மேற்படி காணிகள் சுவீகரிப்புச் செய்யப்படவுள்ளன என அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அத்துடன் குறித்த சுவீகரிக்கப்படும் காணிகளின் உரிமையாளர்கள் இனங் காணப்படவில்லை என்றும் சுவீகரிப்பு அறிவித் தலில் குறிப்பிடப் பட்டிருந்தது. குறித்த காணி உரிமையாளர்கள் யாழ்ப்பாணத்தில் வசித்து வரும் நிலையில், இவ்வாறு காணி உரிமையாளர்கள் இனங் காணப்படவில்லை அதில் குறிப்பிடப் பட்டுள்ளது.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட மக்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யலாமா என்று கேட்டபோதே இணைப்பாளர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

"பாதிக்கப்பட்ட மக்கள் ஏமது ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்ய முடியும். காணிகள் பாதுகாப்புத் தரப்பினரால் ஆக்கிரமித்து வைக்கப்பட்டிருப்பது தொடர்பில் பல்வேறு முறைப்பாடுகள் எமக்குச் செய்யப்பட்டிருந்தன. அவற்றுக்கான தீர்வுகளும் ஆணைக்குழுவினால் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. காணி உரிமையாளர்கள் இனங்காணப்படவில்லை என்று தெரிவித்து சுவீகரிப்பு அறிவித்தல் ஒட்டப் பட்டமைக்கு எதிராக குறித்த காணிகளின் உரிமையாளர்கள் முறைப்பாடு செய்ய முடியும் - என்று அவர் மேலும் விளக்கமளித்தார்.

(ற-5)



# மெஸ்ஸியின் விலை 294 மில்லியன் டொலர்

உலகின் விலையுயர்ந்த வீரராக- முன்கள வீரராக லயனல் மெஸ்ஸி திகழ்கிறார். சுவிட்சர்லாந்தை சேர்ந்த சி.ஐ.இ.எஸ். உதைபந்துக் கண்காணிப்பு அமைப்பு சமீபத்தில் வெளியிட்ட ஆய்வில் இந்த விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நான்கு முறை உலகின் சிறந்த உதைபந்து வீரர் விருதை வென்ற மெஸ்ஸியின் மதிப்பு 294 மில்லியன் டொலர். உலகின் சிறந்த வீரர் விருதை வென்ற ரியல் மட்ரிட் அணியின் ரொனால்டோவின் மதிப்பு 114 மில்லியன் யூரோ எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரொனால்டோ(வயது-29), மெஸ்ஸி(வயது-27) இருவருக்கும் இடையிலான மார்க்கெட் மதிப்பு வித்தியாசத்துக்கு அவர்களது வயது வித்தியாசமே காரணம் என ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது.(த)

# ரொனால்டோ காயமடைய எனது மந்திரமே காரணம்



போர்த்துக்கல் உதைபந்து அணியின் நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ காயமடைந்தமைக்கு தனது மந்திரமே காரணம் என கானா நாட்டைச் சேர்ந்த மந்திரவாதி ஒருவர் கூறியுள்ளார்.

நானாக்வாகு போன்சாம் என்ற இந்த நபர் தன்னைத்தானே மந்திரவாதி என்று அழைத்துக் கொள்பவர்.

இவர் போர்த்துக்கல் வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோவுக்குக் காயம் உண்டாக வேண்டுமென தொடர்ந்து மந்திர வேலைகளைச் செய்து வந்ததாக தெரிவித்துள்ளார்.

மந்திரவாதி கானாவில் உள்ள தனியார் வானொலி ஒன்றில் வெளியிட்ட கருத்தில்,

நான் கிறிஸ்டியானோ ரொனால்டோ மீது மந்திர சக்திகளை ஏவி விட்டேன். நான் இதில் மிகவும் உண்மையாக ஈடுபட்டேன். கடந்த வாரம் 4 நாய்களைத் தேடினேன். அதன் மூலம் காவிரி கபம் என்ற ஒரு ஆவியை உருவாக்கினேன்.

அவரால் இந்தக் காயங்களிலிருந்து மீள முடியாது ஏனெனில் இது உடல் ரீதியானது அல்ல மந்திரத்தால் விளைந்தது. நான் 4 மாதங்களுக்கு முன்பே கூறினேன். ரொனால்டோவை நான் கண்காணித்து வருகிறேன் என்று. உலகக் கிண்ணப் போட்டிகளில் அவரால் விளையாட முடியாது.

கானா அணிக்கு எதிராக அவர் விளையாடக்கூடாது என்று நான் முன்பே முடிவெடுத்து விட்டேன். இன்று அவருக்கு முழங்காலில் காயம் ஏற்பட்டுள்ளது. நாளை தொடையில் ஏற்படும். மறுநாள் வேறு ஒரு இடத்தில் என்று காயம் ஏற்படும். என அவர் குறிப்பிட்டுள்ளார். (த)



# ஜோஸ் பட்லரின் ஆட்டமிழப்பை நியாயப்படுத்துகிறார் மத்தியூஸ்

இங்கிலாந்து அணிக்கெதிரான போட்டியில் ஜோஸ் பட்லர் ஆட்டமிழக்கச் செய்யப்பட்ட முறைமை சரியானது என இலங்கை அணித் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் தெரிவித்துள்ளார்..

முழுமையாக விதிமுறைக்கு உட்பட்டே ஜோஸ் பட்லர் ஆட்டமிழக்கச் செய்யப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எட்பாஸ்டனில் நடைபெற்ற இந்தப் போட்டியில் இங்கிலாந்து அணி துடுப்பெடுத்தாடிய போது பந்துவீசுவதற்கு முன்னர் இரண்டு தடவைகள் ஓட்டம் எடுப்பதற்கு ஜோஸ் பட்லர் முயற்சி செய்திருந்தார்.

இதனையடுத்து எச்சரிக்கப்பட்ட நிலையில் மூன்றாவது முறையாகவும் ஜோஸ் பட்லர் ஓட்டமெடுக்க முயற்சித்த சந்தர்ப்பத்தில் பந்துவீச்சாளர் சசித்திர சேனநாயக்க அவரின் இலக்கைத் தகர்த்திருந்தார்.

எனினும் இந்த ஆட்டமிழப்பு வரவேற்கத்தக்க ஓர் விடயம் அல்லவென இங்கிலாந்து அணித் தலைவர் அலிஸ்டயர் குக் கூறியுள்ளார். (த)



# டெஸ்ட் போட்டி விருதை வென்றார் மைக்கல் கிளார்க்

சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் போட்டிகளுக்கென வழங்கப்படும் விருதை ஆஸ்திரேலிய அணியின் தலைவர் மைக்கல் கிளார்க் பெற்றுக் கொண்டுள்ளார்.

டெஸ்ட் போட்டிகளுக்கான சர்வதேச அணிகளின் தரவரிசையில் ஆஸ்திரேலியா முதலிடத் தில் உள்ளதைப் பிரதிபலிக்கும் வகையில், இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டிற்கு பின்னர் முதன்முறையாக ஆஸ்திரேலியா இந்த விருதினைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். கடந்த பருவகாலத்தில் இங்கிலாந்துக்கு எதிராக ஆஷஸ் தொடரையும், தென்னாபிரிக்க அணிக்கெதிரான தொடரையும் மைக்கல் கிளார்க் தலைமையிலான ஆஸ்திரேலிய அணி வெற்றிகொண்டிருந்தது.

எதிர்வரும் பருவகால போட்டிகளுக்கான பயிற்சி முகாம் நடைபெற்றுவரும் பிறிஸ்பேனில் இந்த விருதை மைக்கல் கிளார்க் பெற்றுக்கொண்டுள்ளார்.

அணியிலுள்ள அனைவரின் பங்களிப்புடன் இந்த சிறந்த இலக்கை எட்டியுள்ளதாக மைக்கல் கிளார்க் கூறியுள்ளார்.(த)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# இங்கிலாந்து அணியில் புதுமுகங்கள்

இங்கிலாந்து டெஸ்ட் அணியில் 3 புதுமுகங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இலங்கைக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டிக்கு இங்கிலாந்து அணி 12 வீரர்கள் கொண்ட அணியை அறிவித்துள்ளது.

இதில் மொயீன் முனீர் அலி, சாம் ராப்சன், கிறிஸ் ஜோர்டான் என்ற 3 புதுமுக வீரர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மேலும் மேட் பிரையர், லியாம் பிளங்கெட், கிறிஸ் வோக்ஸ் ஆகியோர் மீண்டும் அணியில் அழைக்கப்பட்டுள்ளனர்.

இங்கிலாந்து அணி வருமாறு:-

குக், அண்டர்சன், மொயீன் அலி, கேரி பாலன்ஸ், இயன் பெல், ஸ்டுவர்ட் புரோட், கிறிஸ் ஜோர்டான், லியாம் பிளங்கெட், மற் பிரையர், சாம் ராப்சன், ஜோ ரூட், கிறிஸ் வோக்ஸ். (த)

Dip in Mobile Repairing
அனைத்துவிதமான கையடக்க தொலைபேசிகளிலும் ஏற்படும் Hardware, Software பழுதுகள் அனைத்தினையும் பழுதுபார்ப்பது பற்றி 100% Practical ஆக கற்றுக்கொள்ளுங்கள்
புதிய பிரிவு 10.06.2014 செவ்வாய்க்கிழமை மாலை 4.00ற்கு ஆரம்பமாகின்றது
INFOTECH COMPUTER EDUCATION
வேலைவாய்ப்பினை ஏற்படுத்திக்கொள்வதற்கான சிறந்த கற்கைநெறி
#3, Ramanathan Road, Kaladdy Junction, Jaffna.
T.P: 021-492-2813, 077 6138955.

நாவலர் பட்டப்படிப்புக் கல்லூரி
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ் நகர்.
BA யாழ்ப்பாணம், பேராதனை } பல்கலைக்கழகம் (வெளிவாரி)
* G.A.Q (புதிய பாடத்திட்டம்) A/L 2011, 2012 பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கானது.
* B.A Part-I, B.A (Final) (பழைய பாடத்திட்டம்) யாழ். பேராதனை பல்கலைக்கழக விரிவுரைகள் ஆரம்பமாகின்றன.
விரிவுரைகள் ஆரம்பம்: 07.06.2014 சனி 9.00 மணி

| | |
|---|---|
| தமிழ் K. தர்மராஜா | இந்து நாகரிகம் S. பத்மராஜா |
| அரசியல் M. புவனதாஸ் | புவியியல் S.R. பாலா |
| மெய்யியல் N. உதயகுமார் P. கமல்தாசன் | பொருளியல் N. தயாபரன் |
| வரலாறு S.S. தாஸ் | நாடகமும் அரங்கியலும் S. சிவரூபன் |
| வர்த்தகம் S.K. சபேஷ் | English R.Maheswaran |

Note: யாழ் பேராதனை பல்கலைக்கழக பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாக மேற்கொள்ளப்படும்.
(C/4270) (10) தொடர்பு: 077 469 6695

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.06.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.